# சஞ்சீவி

விலை ரூபா 8 - 00

மலை: 8 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 13 சனிக்கிழமை [29 – 08 – 1998] SANJEAVY- Regenerative Tamil Weekly இகரம்:13


# ஐ.தே.க. ஆட்சிக்கு வந்தால் புலிகளுடன் நேரடிப் பேச்சு!

## நிபந்தனையின்றி நடத்துவோம் என்கின்றார் ரணில் விக்கிரமசிங்க

*சஞ்சீவி அலுவலகப் பிரதிநிதி:- ஞா. குகநாதன்*

கொழும்பு, ஒகஸ்ட் 29

"ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் நிபந்தனைகள் எதுவுமின்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவோம். இந்தப்பேச்சு ஒரு கால அட்டவணையுடன் நடக்க வேண்டும் என்று மட்டும் விடுதலைப் புலிகளிடம் கோருவோம்."

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க 'சஞ்சீவிக்கு' வழங்கிய பிரத்தியேக பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தப் பேட்டியில் இது தொடர்பாக அவர் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:

எமது கட்சி ஆட்சிக்கு வந்தால் தற்சமயம் நடக்கும் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படும். அப்போது இருக்கும் எதிர்க்கட்சியுடனும், நாடாளுமன்றில் அங்கம் பெறாத ஏனைய கட்சிகளுடனும் இப்பிரச்சினை தொடர்பாக ஆராயப்படும். அதன் பின்னர் விடுதலைப் புலிகளுடன் பேசுவேன்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதே எனது முன்னுரிமைச் செயற்பாடாக இருக்கும்.

புலிகளுடனான பேச்சுக்கு நிபந்தனை ஏதும் இருக்காது. ஆனால் ஒரு கால அட்டவணையின்படி பேச்சு நடக்க வேண்டும் என்று கூறுவோம். தேவை ஏற்படின் வெளிநாடு ஒன்றில் கூட விடுதலைப் புலிகளுடனான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இரண்டு வாரங்களில் 11 படையினர் உயிரிழப்பு

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடந்த இரு வாரங்களாக இடம்பெற்ற மோதல் சம்பவங்களிலும், இராணுவ நடவடிக்கைகளிலும் 11 படையினர் உயிரிழந்தனர்; 30 படையினர் காயமடைந்தனர்.

அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் நேற்று இத்தகவலைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போதே இராணுவத்தினர் தரப்பில் இவ்வாறு உயிரிழப்பு ஏற்பட்டதாகவும்—

கடந்த இரு வார சண்டைகளின் போது விடுதலைப்புலிகள் தரப்பில் 81 பேர் உயிரிழந்ததாகவும்—

இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சுனில் தென்னக்கோன் மேலும் தெரிவித்தார். (உ–7)

## தலைநகர் கொழும்பில் சமிக்ஞை விளக்குள்ள இடங்களில் பாதுகாப்பு!

கொழும்பு நகரில் வீதிப் போக்குவரத்து சமிக்ஞை விளக்குகள் உள்ள சகல இடங்களிலும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினரும், பொலீஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை பம்பலப்பிட்டி டிக்மன்ஸ் வீதிச் சந்தியில் உள்ள சமிக்ஞை விளக்குக்கு அருகில் இராணுவக் கப்டன் விக்கிரமசிங்க சுடப்பட்ட சம்பவத்தை அடுத்தே கொழும்பு நகரில் இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகளின் பிஸ்டல் குழுவைச் சேர்ந்த 40 பேர் கொழும்பு நகருக்குள் ஊடுருவி இருப்பதாகவும், சமிக்ஞை விளக்குகளுக்கு அருகில் வைத்து தாக்குதல்களை மேற்கொள்ள அவர்கள் திட்டமிட்டிருப்பதாகவும் புலனாய்வுத் துறையினருக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை—முக்கிய அரசியல் தலைவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவ் விடயம் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதாகவும்—

சமிக்ஞை விளக்குகளுக்கு அருகில் வாகனங்களில் வரும் போது வாகனக் கண்ணாடிகளை மூடி அவர்கள் தத்தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்படுகிறது. (உ–7–164)

## பட்டினி கிடந்த பயணிகள்

இருபத்திநான்கு மணி நேரம் உணவு, குடிதண்ணீர் வசதிகள் எவையும் இன்றி வவுனியா பூவரசங்குளம் பகுதியில் தவித்த சுமார் ஆயிரத்து 500 பயணிகள் நேற்று வவுனியா வந்து சேர்ந்தனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வவுனியா வரும் பயணிகளுக்கு தற்போது புதிய பாஸ் நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது தெரிந்ததே. அதன்படி நேற்று முன்தினம் வவுனியாவுக்கு வந்த சுமார் ஆயிரத்து 500 பயணிகள் பூவரசங்குளத்தில் வைத்து படையினர் பாஸ் வழங்குவதற்கு தாமதமானதால் அங்குள்ள வயல் வெளிகளில் தங்கவைக்கப்பட்டனர். இவர்களுக்கு உணவு வசதிகளோ குடிதண்ணீர் வசதிகளோ ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

படையினர் இப் பகுதிக்கு சோடாவினைக் கொண்டு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டிருப்புப் பால பொலீஸ் மீது தாக்கு!

மட்டக்களப்புப் பட்டிருப்புப் பாலத்தில் உள்ள பொலீஸ் சோதனைச்சாவடி மீது நேற்று முன்தினம்மாலை விடுதலைபுலிகள் தாக்குதல் மேற்கொண்டதாகத் தெரிய வருகின்றது.

இராணுவ கட்டுப்பாடற்ற பிரதேசத்திலிருந்து புறப்பட்ட—போக்குவரத்துச் சபையின்—கடைசி பஸ்ஸில் பயணிகளுடன் வந்த புலிகளே இத்தாககுதலை மேற் கொண்டனர் என்று கூறப்பட்டது.

பொலீஸார் பதில் தாக்குதல் மேற்கொண்டனர். பொலீஸ் தரப்பில் சேதம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தையடுத்து அப்பிரதேசம் நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவித்தன. (உ-21)

## ஷெல் தாக்குதலுக்கு 2 குழந்தைகள் பலி!

### போரதீவில் பரிதாபம்

மட்டக்களப்பு, ஓக. 29

மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான போரதீவுக்கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு வீடுகளின் மீது விழுந்து வெடித்த ஷெல்களினால ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு குழந்தைகள் பலியாகினர்; அக் குழந்தைகளின் தாயார் படுகாயமடைந்தார். மேலும் நான்கு பெண்கள் உட்பட எட்டுப் பேர் காயமடைந்தனர்.

ஷெல் விழுந்து வெடித்ததும் வீடு தீப்பற்றியது என்றும் ஆதனால் குழந்தைகள் இரண்டும் உயிரிழந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. படுகாயமடைந்த குழந்தையின் தாயார் ஆபத்தானநிலையில் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் நேற்று சேர்க்கப்பட்டார்.

சீவரத்தினம் இந்துஜன் (ஒன்றரைவயது), சீவரத்தினம் சரோஜினி (ஒன்றரை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விரைவில் திடீர் தேர்தல்?

கொழும்பு, ஓக. 29

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் திடீர்த் தேர்தல் ஒன்றை நடத்த அரசு முடிவு செய்திருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக சில அமைச்சர்களை அழைத்து ஜனாதிபதி ஆலோசனை நடத்தியதாகவும்—

தேர்தலுக்காகத் தமது கட்சியினரைத் தயார்ப்படுத்தும் பணிக்கும், தேர்தல் பிரசாரப் பணிக்கும் பொறுப்பாக ஐந்து அமைச்சர்களை ஜனாதிபதி நியமித்துள்ளதாகவும்—

அத்தகவல்கள் மேலும் தெரிவித்தன.

ஆனால் அரசு நடத்த உத்தேசித்துள்ள தேர்தல் எது? ஜனாதிபதித் தேர்தலா? பொதுத் தேர்தலா? அல்லது மாகாண சபைகளுக்கான தேர்தலா? — என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. (உ)

## செம்மணிப் புதைகுழியை தோண்டுவதற்கு அனுமதி

செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளதாகக் கருதப்படுமிடங்களில் தோண்டி உண்மையைக் கண்டறிவதற்கு அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க சட்டமா அதிபர் அனுமதி அளித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

புதைகுழி தோண்டுவது தொடர்பான நிபுணர்கள், புலனாய்வாளர்கள், இரசாயனப் பகுப்பாய்வாளர், செம்மணி பற்றிய தகவலை வெளியிட்ட சிறைக்கைதியும் இராணுவக் கோப்ரலுமான சோமரத்ன ராஜபக்ஷ ஆகியோர் விரைவில் இதற்காக வடக்கே கூட்டிச் செல்லப்படுவர் என்றும் —

அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கும்படி அதிகாரிகள் பணிக்கப்பட்டுள்ளனர் என்றும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வை நகரசபையின் உறுப்பினர்கள் பதவிஏற்பு

வடமராட்சி, ஓக் 29

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் எம். கே. சிவாஜிலிங்கமும், ஏனைய சபை உறுப்பினர்களும் கடந்த வியாழக்கிழமை சம்பிரதாய பூர்வமாகப் பதவி ஏற்றுக் கொண்டனர்.

வல்வெட்டித்துறை நகர சபையில் நடைபெற்ற சம்பிரதாய பதவியேற்பு வைபவத்தில் ரெலோ சார்பில் தெரிவான 6 உறுப்பினர்களால் தலைவர், உப தலைவர் உட்பட 5 பேரும் ஈ. பி. டி. பி. சார்பில் தெரிவான இரு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். புளொட் சார்பில் தெரிவான ஒரே ஒரு உறுப்பினர் சம்பிரதாயபதவி ஏற்பு வைபவத்தில் கலந்து கொள்ளவில்லை.

பதவி ஏற்பு வைபவத்துக்கு அப்பகுதித் திணைக்கள அதிகாரிகள், கிராம சேவையாளர்கள், பிரமுகர்கள் உட்பட பலரும் அழைக்கப்பட்டிருந்தனர். (உ-173

# குடும்பஸ்தரை காணவில்லை

அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவசுப்பிரமணியம் சாந்தகுமார் (வயது 39) என்ற குடும்பஸ்தரைக் கடந்த ஒரு மாத காலமாகக் காணவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் சென்று வருவதாகக் கூறி வீட்டை விட்டுச் சென்றார் என்றும்—

அன்று தொடக்கம் காணாமல் போய் விட்டார் என்றும் கூறப்படுகின்றது. (உ-5)

# மாணவர்கள் பிணையில்!

கொழும்பு, ஓக. 29

கொழும்பு பம்பலப்பிட்டி டிக்மன்ஸ் வீதிச் சந்தியில கடந்த 25 ஆம் திகதி இராணுவக் கப்டன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக கடந்த வியாழனன்று கைது செய்யப்பட்ட— திறந்த பல்கலைக்கழகத்தின்— 24 தமிழ் மாணவர்களும் பிணையில விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒருவர் திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கான பதிவு அட்டை ஒன்றை வைத்திருந்ததை அடுத்தே இந்த 24 மாணவர்களும் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-6)

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 30 — 06 — 1970

விண்ணுலகில் 29 — 08 — 1992

**பாக்கியதுரை உதயகுமார் (உதயன்)**

நெஞ்சில் கொஞ்சமேனும்
கருணை இல்லா வஞ்சகர்
துள்ளித்திரிய வேண்டிய உன்னை
துடிக்க வைத்தார்கள்
வாழவேண்டிய உன்னை வதைத்தழித்தனர்.

உன்பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய். (58751)

## RAJA COMMUNICATION
## ராஜா கொம்மினிகேசன்

உடுப்பிட்டியில்

மிகவும் அமைதியான சூழலில்
தங்கள் தொலைத் தொடர்புகளுக்கு!

**ராஜா கொம்மினிகேசன்**

உள்நாட்டு, வெளிநாட்டு
தொலைத்தொடர்புகள்
பகல், இரவு சேவையாக வழங்கப்படுகின்றது.

வாடிக்கையாளர்களுக்கு!

வெளிநாட்டு, உள்நாட்டிலிருந்து வரும் தகவல்கள் உடனுக்குடன் அறியத் தரப்படும்.

உள்நாட்டு நம்பர்: T. P. No. 070 212297

வெளிநாட்டுத் தொடர்பு:
T. P. No. 0094-70-212297

Market Road, Uduppiddy. (58749) சந்தை வீதி, உடுப்பிட்டி.

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

ரஜனி, மீனா
சரத்பாபு, செந்தில்
நடித்த

**முத்து**

## ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.

விஜயகாந்த் - ப்ரிதா
மனோரமா நடித்த
தர்மா
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

## ராஜா கொமினிகேஷன்

உள்நாட்டு, வெளிநாட்டு
தொலைத்தொடர்பு
சேவையை
உடனுக்குடன்
பெற்றுக்கொள்ளலாம்.

Tele. No. 021 - 2318

(சி/4682)

## வாங்க, விற்க, திருத்த ரி.வி.

நல்ல நிலையில் உள்ள தொலைக்காட்சிப் பெட்டிகள் (ரி. வி.) வாங்கப்படும். பாவித்த பழுதடைந்த ரி. விகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். திருத்தித் தரப்படும். ரி. வி. அன்ரனா பொருத்தப்படும்.

**வீனஸ் டெல்கா**

284, ஸ்ரான்லி வீதி (நாகவிகாரை முன்)
யாழ்ப்பாணம்.
TEL. 2064

கிளை: பஸ் நிலையம், சாவகச்சேரி.
(மீன் சந்தை அருகில்)

(சி/4680)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் அழகரெத்தினம்

மட்டகளப்பைச் சேர்ந்த ஆறுமுகம் அழகரெத்தினம் 27—08—98 இல் மட்டக்களப்பு, பாண்டிருப்பில் காலமானார்.

அன்னார் கற்பகத்தின் அன்புக் கணவரும், நவரத்தினம், கணபதிப்பிள்ளை, விஜயராஜா, புஸ்பராஜா, செந்தமிழ்ச் செல்வி, கிருஷ்ணகுமாரி, யோகராசா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பா. செல்வராஜா, க. ரவிக்குமார், சின்னமணி, லலிதா, மல்லிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ரேகா, விஜி, விஷ்ணுசத்தி, விஷ்ணுகாந்தி, ரூபன், ரூபி, ரவீந்த், நிரோஜா, மதுஜா, ரம்ஜா, பதீர், கோபி, கோகுலன், கௌம்சா, விந்து ஆகியோரின் பேரனும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் மட்டக்களப்பில் 28—08—98 நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

தகவல்:
பா. செல்வராஜா
(மருமகன்)

26, யாழ் வீதி,
யாழ்ப்பாணம். (58734)

### வல்லிபுரம்பாலகிருஷ்ணன்
(ஆசாரி)

வயாவிளானைப் பிறப்பிடமாகவும், தற்போது வவுனியாவில் வசித்தவருமாகிய பாலகிருஷ்ணன் (ஆசாரி) 27-08-98 வவுனியாவில் காலமாகிவிட்டார். இவர் பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் சசிகரன், மணிமேகலை, சசிரூபன், சசிவரதன், ஞானலட்சுமி ஆகியோரின் பாசமிகு தந்தையும், மேகநாதன், சரோஜினிதேவியின் அன்பு மாமனும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. சரவணமுத்து
(மைத்துனர்)

காளிகோவிலடி,
தாவடி வடக்கு. (58783)

### டாக்டர் செல்வநாயகம் அகிலானந்தன்
(Veterinary Surgeon - Sri Lanka)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட டாக்டர் செல்வநாயகம் அகிலானந்தன் 27-8-98 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் இராசமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வநாயகம் — ஜெகசோதி தம்பதிகளின மகனும், ஆஷா (ஆஸ்திரேலியா), அஜந்தன் (லண்டன்), துஷிபந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுப்பிரமணியம் — சின்னம்மா தம்பதிகளின் மருமகனும், வித்தியாசாகரனின் மாமனாரும், சிவானியின் அன்புப் பேரனுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க. கணேசதாசன்
(மைத்துனர்)
(சுதுமலை தெற்கு, மானிப்பாய்)

No 30, Frazer Avenue,
Dehiwela.
T. P.-01-727557 (58748)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

எமது தியேட்டரில் திரை, ஒளி அமைப்பு மிக உன்னதமான நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இன்று முதல்
சிவாஜி (இருவேடம்)
ஜெயலலிதா நடித்த
எங்கஊர் ராஜா

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)

Tele. No. 070-212223

(58486)

## 6 ஆம் மாத நினைவஞ்சலி



மலர்வு 24 — 02 — 1980

உதிர்வு 21 — 02 — 1998

**செல்வி சுமித்திரா நர்கராசா**

அன்புமகளே! சுமித்திரா நீ
இறைவனடி சேர்ந்து
இன்றுடன் ஈர்மூன்று மாதமடி — எமது
இருவிழியும் தூங்கவில்லை!
உமை நினைத்து நினைத்து — எமது
உள்ளம் இருளாகி விட்டதம்மா — என்றும்
உமது சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்

ஐயா, அம்மா, அண்ணன்மார், அக்காமார்,
தம்பி, அத்தான், பெறாமக்கள், பேரன்;
பேத்தி, மாமாமார், மாமிமார், மச்சாள்மார்,
மச்சான்மார், சித்தப்பாமார், சித்திமார்,
சகோதரங்கள், பாடசாலை மாணவ
மாணவிகள் மற்றும் உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

S. நாகராசா (P.R.O.)
4 ஆம் வட்டாரம்,
அனலைதீவு.

(58...)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

கார்த்திக் - கௌசல்யா
கவுண்டமணி- செந்தில்
நடித்த

**பொன்னுமணி**

இனிய பாடல்கள்
நிறைந்த படம்

திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.

காட்சிகள்:- 10-30, 2-30

(58747)

## புலமைப்பரிசில்'99

முதலாவது புலமைப்பரிசில் பரீட்சை (1999) யும், மாதாந்த பயிற்சிப் பரீட்சையும் 30-08-98 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

**BOND**

யாழ். நகர்.

(58744)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச நூலகம்

# அரசாங்கம் அரசியல் நடத்தவே தீர்வுப் பொதியைப் பயன்படுத்துகிறது!

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் வைத்து சஞ்சீவிக்கு அளித்த பிரத்தியேக பேட்டி இங்கு முழுமையாகப் பிரசுரமாகிறது.

பேட்டி கண்டவர்: அலுவலகப் பிரதிநிதி ஞா. குகநாதன்



★ கேள்வி: அரசாங்கம் முன் வைத்துள்ள தீர்வுப் பொதி குறித்து தங்கள் கருத்து என்ன?

★ பதில்: இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணும் விடயத்தில் அரசாங்கம் "சீரியசாக" இருந்தால் இந்தப் பொதியை 1994 ஆம் ஆண்டே தயாரித்திருக்கலாம். வெளியிட்டிருக்கலாம் விடுதலைப் புலிகளுடன் அச்சமயம் பேச்சு நடத்திய போது இந்தத் தீர்வுப் பொதியை அவர்களிடம் சமர்ப்பித்திருக்கலாம். ஆனால் அரசாங்கம் அதைச் செய்யவில்லை.

ஆறு மாத காலம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய சமயம் இந்தத் தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்குமாயின் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்திருக்கலாம். வீணாக காலம் கடத்தப்பட்டதே தவிர உருப்படியாக ஒன்றும் நடக்கவில்லை.

விடுதலைப்புலிகளுடனான பேச்சுமுறிந்து 4மாதங்களின் பின்னர் அரசாங்கம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அந்நேரம் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நாடாளுமன்ற தெரிவுக் குழுவைக் கூட்டியது அரசு. அந்த தெரிவுக் குழுவில் கூட நாம் ஒவ்வொரு விடயங்களிலும் எமது ஆலோசனைகளை வழங்கினோம். அந்தத் தெரிவுக்குழுக்கூட்டம் கூட இழுத்தடிக்கப்பட்டு வந்தது.

இந்தக் குழுவின் பணியை முடிப்பதாக அரசு கூறி வந்தாலும், 97 ஆம் ஆண்டு நவம்பர் வரை முக்கிய விடயங்களில் இணக்கம் ஏற்படவில்லை. இவ்வாறு காலத்தை இழுத்தடித்ததில் இருந்து இந்தத் தீர்வில் அரசின் 'சீரியஸ்' தன்மை தெரிய வருகிறது.

அரசாங்கம் இந்தப் பொதியை வைத்து அரசியல் நடத்துகிறது. இந்தப் பொதி மூலம் ஏதாவது அரசியல்தீர்வு ஏற்படவேண்டுமெனில் சகலரும் இந்தப் பொதியை ஏற்க வேண்டும். இந்தப் பொதி மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றவேண்டும். இவ்விடயத்தில் சகல தரப்பும் ஆர்வத்துடன் கலந்துரையாட வேண்டும். நாம் இந்த விடயத்தில் அமைதியாக இருந்தோம். சகல கட்சிகளின் ஆதரவையும் அரசாங்கம் பெற பொறுத்திருந்தோம். ஆனால் அரசு அதில் தோல்வி கண்டது. விடுதலைப்புலிகள் அதை நிராகரித்துவிட்டனர். தெற்கில் உள்ள சிங்கள அமைப்புக்கள் நிராகரித்து விட்டன.

அரசாங்கம் அரசியலுக்கே அந்தப் பொதியை பாவிக்கிறது. அதை நிறைவேற்றுவதில் தோல்வியைத்தான் கண்டது.

★ கேள்வி: தங்கள் கட்சி இந்தப் பொதி தொடர்பாக மாற்றுத் தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது. அதன் இறுதிப் பகுதி எப்போது வெளிவரும்?

★ பதில்: ஐ.தே.க. பிரதான விடயங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. காணி தொடர்பான இறுதித் திட்டத்தை செப்ரெம்பர் மாதத்தில் வெளியிடுவோம் என எதிர்பார்க்கிறோம்.

பொலீஸ் ஆணைக்குழு, பொது ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, அதிகாரப் பரவலாக்கல், உள்ளூராட்சி அமைப்பு, நிதி, நீதி, தேசிய வளங்கள் தொடர்பாக எமது நிலைப்பாட்டை ஏற்கனவே வெளியிட்டு விட்டோம்.

வடக்கு — கிழக்கு இணைப்புத் தொடர்பாகத் தற்காலிகமாக அவை இணைந்திருக்கலாம் என்று நாம் ஏற்கனவே கூறி விட்டோம்.

கிழக்கு மாகாணத்தில் மீள எல்லைகள் வரையறுக்கப்படுவதை நாம் எதிர்க்கிறோம்.

★ கேள்வி: 13 ஆவது சட்டத் திருத்தத்தின் படி ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என நீங்கள் கூறியுள்ளீர்கள். அதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் எனக் கருதுகிறீர்களா?

★ பதில்: 13 ஆவது சட்டத்திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்குச் சகல அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்பதையே ஐ.தே.க. வலியுறுத்துகிறது. அதனுடன் மங்கள முனசிங்க குழு அறிக்கையையும் அமுல் செய்யவே நாம் விரும்புகிறோம். அதற்கு ஏற்ப மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க வேண்டும்.

சமரச அடிப்படையில் சட்ட மூலம் கொண்டுவரப்பட்டு மாகாணசபைகளுக்குக் கூடுதல் அதிகாரத்தை வழங்க முடியும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

உள்ளூராட்சி அமைப்புகள் மாகாண சபையுடன் இணைக்கப்பட வேண்டும். உள்ளூராட்சிச் சபைகள் பிரதேச செயலகங்களுடன் இணைந்து செயற்பட வேண்டும்.

உள்ளூராட்சிச் சபைத் தலைவர் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும். அவர் மாகாண சபையின் அங்கத்தவராக இருக்க வேண்டும். மாகாணசபைகள் தொடர்பாக அரசு முன்வைத்துள்ள யோசனைகளின்படி மாகாண சபைகளுக்கும், உள்ளூராட்சி சபைகளுக்கும் இணைப்பு ஏற்படாது.

50 வீதம் உள்ளூராட்சிச் சபைத் தலைவர்கள் மூலமும், 50 வீதம் வாக்களிப்பு மூலமும் மாகாண சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் மக்களின் வாக்கு மூலம் தெரிவாக வேண்டும். உள்ளூராட்சிச் சபைகள் மாகாண சபைகளுக்குக் கீழ் இயங்கும்.

அரசியல் தீர்வின் முக்கியத்துவம் அந்தப் பகுதியில் வாழும் மக்களின் பிரச்சினைகளில் தங்கியுள்ளது. சகல கட்சிகளும் இதை உணர்ந்து செயற்படவேண்டும்.

★ கேள்வி: கடந்த 40 வருடங்களுக்கு மேல் தமிழர்கள் சமஷ்டி என்றும் தமிழீழம் என்றும் போராடிவிட்டுத் தாங்கள் முன்வைக்கும் ஒற்றையாட்சிக்குக் கீழான மாகாணசபைத் தீர்வை ஏற்பார்கள் என நினைக்கிறீர்களா?

★ பதில்: இன்று உலகில் அரசியல் சீர் திருத்தங்கள் கொண்டுவரப்படுவதை நாம் கவனிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட இனங்கள் வாழும் பிரதேசத்தில் கொண்டுவரப்படும் சீர் திருத்தங்களை நாமும் இங்கு அமுல் செய்யலாம்.

பிரிட்டனில் சமரசமான அதிகாரப்பரவலாக்கல் வழங்கப்பட்டுள்ளது. ஸ்பெயின், தென் ஆபிரிக்கா, சீனா ஆகிய நாடுகளில் மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டு சகல இனங்களின் உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. சமஷ்டி அரசமைப்பு என்பது இப்போது இல்லை.

அத்துடன் ஒற்றையாட்சியின் கீழான அதிகாரங்கள் இது தான் இன்று உலகில் நடக்கும் மாற்றங்கள் என்பதும் இல்லை. மாகாணசபைகளுக்கு கூடுதலான அதிகாரத்தை அளிப்பதன் மூலம் இப்பிரச்சினைக்கு நாமும் தீர்வு காணலாம் என நம்புகிறோம்.

மாகாண சபைக்குட்பட்ட மக்களின் கலாசார, பொருளாதார, பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை அந்த மாகாண சபையே கவனிக்கலாம். மக்கள் மாகாண சபை அதிகாரங்களை நிறைவாக அனுபவிக்கும் போது தானாகவே சமாதான நிலை ஏற்பட்டு விடும்.

★ கேள்வி: தங்கள் கட்சி பதவிக்கு வரும் பட்சத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தி தீர்வுகாண முனைவீர்களா?

★ பதில்: தற்சமயம் நடக்கும் போரை முடிவுக்குக் கொண்டு வர விடுதலைப்புலிகளுடன் பேசுவேன். பதவிக்கு வந்தபின் முதலில் எதிர்க் கட்சிகளுடனும், நாடாளுமன்றத்தில் அங்கத்துவம் பெறாத கட்சிகளுடனும் ஆராய்வேன். அதன் பின்னர் விடுதலைப்புலிகளுடன் பேசுவேன். போரை முடிவுக்கு கொண்டு வருவதே என் முன்னுரிமைச் செயற்பாடாகவிருக்கும். போரை முடிவுக்கு கொண்டுவர புலிகளுடன் பேச ஜனாதிபதியுடன் உடன்பாடு கண்டேன். ஆனால் அரசு அந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை.

★ கேள்வி: விடுதலைப் புலிகளுடன் இடம்பெறும் பேச்சுக்கள் நிபந்தனையுடன் நடக்குமா? நிபந்தனைகள் எதுவும் இன்றி நடக்குமா?

★ பதில்: விடுதலைப்புலிகளுடனான பேச்சுக்கு நிபந்தனை இல்லை. ஆனால் ஒரு கால அட்டவணையின் படி பேச்சு நடக்க வேண்டும் என்று கூறுவோம். இந்தப் பேச்சுக்கள் தேவை ஏற்படின் வெளிநாடு ஒன்றில் கூட நடக்கலாம்.

★ கேள்வி: பிரிட்டனின் உதவியுடன் தங்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடு எந்த நிலையில் உள்ளது.

★ பதில்: அந்த உடன்பாட்டின் படி செயற்பட அரசாங்கம் விரும்பவில்லை. அரசாங்கமும், ஐ.தே.கவும் இணைந்து செயற்பட்டால் புலிகளை ஒழித்து விடலாம் என்று அரசு கருதியுள்ளது. நான் முழு விருப்பத்துடன் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என விரும்பினேன். எனக்கும் - ஜனாதிபதிக்கும் இடையில் நடந்த கடிதப் பரிமாற்றம் மூலம் மக்களை அரசு முட்டாள்களாக்கியது.

வவுனியா — யாழ்ப்பாணம் பாதையைத் திறக்க 'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்த போது, அது மூன்று மாதத்தில் பூர்த்தியாகி விடும் என்று அரசாங்கம் எனக்குத் தெரிவித்தது. ஆனால் இன்று 14 மாதங்களாகத் தொடர்ந்து நடைபெறுகிறதே!

★ கேள்வி: தற்சமயம் நடைபெறும் யுத்தம் பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

★ பதில்: அரசு பிழையான அணுகுமுறையில் யுத்தத்தை நடத்துகிறது என்று நாடாளுமன்றத்தில் கூறியுள்ளேன். விடுதலைப் புலிகளை சண்டைப்படையாக அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

யுத்தம், அரசியல், கலாசார, பாதுகாப்புத் தொடர்பாக இருக்க வேண்டும். புலிகளுடன் அரசியல் யுத்தம் நடத்தி அவர்களை அரசியற் பாதைக்குக் கொண்டு வர வேண்டும். பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறி அவர்களுடன் யுத்தம் செய்து அவர்களை பலவீனப்படுத்த அரசு முனைகிறது. ஆனால் அது மரபுவழி யுத்தமாக இருக்கிறது.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சிக்கு பாதை திறக்கப்பட்டால், பாதையில் படையினர் நிறுத்தப்பட வேண்டும். ஆனால் புலிகள் அவர்களைத் தாக்குவர். அங்கு மட்டுமல்லாமல் தெற்கில் ஏனைய இடங்களிலும் புலிகள் தாக்குதல் நடத்தலாம்.

இராணுவம் ஓர் இடத்தை விடுவிக்கும் போது அப்பகுதி மக்களின் ஆதரவைப் பெற வேண்டும். ஆனால் அப்பகுதியில் இருக்கும் தமிழ் மக்கள் மட்டுமல்ல நாடு முழுவதிலும் உள்ள தமிழர்களே இம்சிக்கப்படுகிறார்கள், துன்புறுத்தப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தை அரச படைகள் கைப்பற்றிய போது அரசாங்கத்தினர் அங்கு தேசியக் கொடியை ஏற்றினார்கள். நாம் வெளிநாட்டு மண்ணைக் கைப்பற்றும் போது தான் அங்கு தேசியக் கொடி ஏற்றுவதுவழக்கம் தெற்கில் ஜே.வி.பி அடித்து விரட்டப்பட்ட போது அங்கு தேசியக் கொடி ஏற்றப்படவில்லை — கிழக்கில் புதிய இடங்களைக் கைப்பற்றிய போது தேசியக் கொடி ஏற்றப்படவில்லை. ஓர் இடத்தைக் கைப்பற்றி அங்கு சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட பொலீஸாரிடம் ஒப்படைப்பதே சரியானதாகும்.

வன்னியில் நெல்வயல்கள் எல்லாமே அழிக்கப்பட்டுவிட்டன. இப்படியாயின் எவ்வாறு அந்தப் பகுதி மக்களின் ஆதரவைப் பெறுவது?

★ கேள்வி: இந்த வருட இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஆயத்தங்கள் செய்வதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அது பற்றி உங்கள் கருத்து என்ன?

★ பதில்: எந்தத் தேர்தலையும் சந்திக்க ஐ.தே.க. தயார். நாடாளுமன்றத் தேர்தல் என்றால் என்ன ஜனாதிபதி தேர்தல்என்றால் என்ன அவற்றுக்கு முகங்கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம். எந்தத் தேர்தலாவது நடத்தப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. ஜனாதிபதித் தேர்தலை ஒகஸ்டில் நடத்துமாறு நாம் கோரினோம். இப்போது அதை ஜனவரியில் நடத்த அரசு தயாராகிறது.

★ கேள்வி: வன்னியில் உள்ள மக்களின் கஷ்டங்கள் குறித்து ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா?

★ பதில்: கடந்த நாடாளுமன்ற அமர்வில் ஒத்திவைப்பு நேரத்தில் வன்னி நிலை குறித்து கவன ஈர்ப்புப் பிரேரணையை நான் கொண்டுவந்தேன் — வன்னி மக்களுக்கான நிவாரணத்தை வெட்டக் கூடாது என்று அதில் பேசுகையில் நான் கூறினேன்.

உணவை ஆயுதமாகப் பயன்படுத்தக் கூடாது. புலிகள் உணவு வைத்து இருக்கிறார்கள். பொதுமக்களின் உணவை வெட்டினால் அந்தக்குடும்பம் பட்டினியில் கிடக்கும், பட்டினியில் இருந்து விடுபட அந்தக்குடும்பத்தில் உள்ளவர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைவர். புலிகள் தம்மிடமுள்ள உணவை அவர்களுக்குக் கொடுப்பர்.

தெற்கில் இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பதற்கு கஷ்டப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சஞ்சீவிக்கு ரணில் செவ்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறோயிலர் (Brolier) குஞ்சு விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும். Broiler இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். Lucky Sales Centre, Mathavade Lane, Palaly Road, Therunalvale.
[58738]

யாழ்ப்பாணம் அத்தியடியில் 118, அம்பலவாணர் வீதியில் 5 பரப்பு நீள் சதுரக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: திருமதி கா. தயாபரன், 15A, சம்மிட் பிளட்ஸ், கெப்பிற்றிப் பொலமாவத்தை, கொழும்பு - 05. தொலைபேசி எண் 591255.
[58570]

### இசைவகுப்புகள்

ஓர்கன், கிற்றார், புல்லாங்குழல் ஆகிய இசை வகுப்புக்கள் மீண்டும் 01-09-98 முதல் ஆரம்பமாகும். முகவரி; S.S. ரஜீந்திரன், 23, குறோசற் வீதி, சுண்டுக்குளி கல்விவலயம் ! இன் தற்போதைய காரியாலயத்துக்கு அண்மையில்.
[58688]

ஓர்கன், மெலோடிகா வாத்திய இசைப் பயிற்சிகள் ஆரம்பம்: 29 - 08 - 98 சனிக்கிழமை மாலை 2-30 மணி. 123, ஸ்ரேசனடி, யாழ்ப்பாணம்.
(58669)

### SPOKEN ENGLISH

வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும் அனுமதித்து இலக்கணம் இன்றி சுலபமாக தனித்தனி கவனம் கொடுத்து ஆங்கிலப் பயிற்சி, புதிய பிரிவு 01-09-98 10 A M. ஆசிரியர் ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(58701)

### தேவை

பாவித்த பழைய தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள்தேவை. நியாயமான விலைக்கு வாங்கப்படும். R மருதலிங்கம், 66, மணிக்கூண்டுவீதி [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம்.
[58564]

### திருமண சேவை

செவ்வாய்க் குற்றமற்ற பொறியியலாளருக்கும், செவ்வாய்க் குற்றமுள்ள விரிவுரையாளருக்கும், 28 வயது கணக்காளருக்கும் அழகிய மணப்பெண்கள் தேவை. வேறுதொழில்களிலும் மணமக்களுண்டு. ஜாதகத்துடன் விநாயகர் திருமணசேவை நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும். 63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
[58730]

### ENGLISH, MATHS

ஆண்டு O/L Distinction Credit பெறுபேறடைய ஆரம்பத்திலிருந்து Paper Class வரையும் Spoken English உம் கற்பிக்கப்படும் ஆசிரியர், 85, சிவன் கோயிலடி (சிவன் கோயில் மேற்கு வீதி), திருநெல்வேலி.
[58690]

**ROYAL INSTITUTE**
மானிப்பாய்,
(மகளிர் கல்லூரி முன்பாக)
SPOKEN ENGLISH
BRITTO
ஆரம்பம்:
31 - 08 - 98
திங்கள் காலை 11 மணி
(கி/4677)

### சிங்களம்

புதிதாக ஆரம்பிக்க விரும்புவோர் 1998-08-29 சனிக்கிழமை பி.ப. 2.00 மணிக்கு தொடர்பு கொள்ளவும். க. பொ. த. (சா த) வகுப்பும் நடைபெறுகின்றன. T. Sagathevan, 46 பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
[58670]

### English / English Literature

ஆண்டு 3 முதல் 11 வரை ஆங்கில வகுப்புகளும் ஆண்டு 9/10 ஆங்கில இலக்கிய வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. T. Sagathevan, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
[58671]

### இறைச்சிக் கோழி

புசறாயலா கோழிகள் விற்பனைக்கு உண்டு. (1Kg 150/- வீதம்) சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். 40/6, புகையிரத கிழக்கு வீதி, கந்தர் மடம் (செல்வநாக பூஷணி அம்மன் கோயில் முன்பாக).
[58732]

உயர்ரக இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு; இல. 101, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி அருகில், யாழ்ப்பாணம்.
[58737]

### பயிற்சி வகுப்புகள்

தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புக்கள் ஆவரங்காலில் ஆரம்பமாகிவிட்டன. செ. சுந்தரமூர்த்தி சந்தையடி ஒழுங்கை, ஆவரங்கால் [A. C. O.] என்னும் முகவரிக்கு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
[58726]

உள்நாட்டு / வெளிநாட்டு தொலைபேசி அழைப்புக்களை
எதுவித தாமதமின்றி மிகக்குறைந்த செலவில் பெற நாடுங்கள்:
இணுவை
**கனக தயாபரன்**
**தொலைத்தொடர்பு சேவை**
64, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
Tele. No. 021—2146
(58722)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சிவலிங்கம் சிவகுமார்** (ராஜன்)

மண்ணில் மைந்தனாக 31 - 03 - 1963
விண்ணில் தெய்வமகனாக 30 - 07 - 1998

எங்கள் அன்புத்தெய்வமே பாசமிகுந்த அண்ணா! பண்பின் உறைவிடமே! நாம் இருக்க எங்கு சென்றீர்கள்? ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு. ஆனாலும் அண்ணா என்று யாரை நாமழைப்போம்?

நாள்கள் சில சென்றதண்ணா எம் கவலை தீரவில்லை. ஒரு செடியில் மலர்ந்து பெருமையுடன் வாழ்ந்தோம் அண்ணா நடு வழியில் எம்மைத் தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்? தனிமையில் எங்கு அண்ணா நீற்கிறீர்கள். இனி நாங்கள் எப்பிறப்பில் உம்மைக் கண்போம் அண்ணா?

புத்தொளி பூவாய் மலர்ந்திட இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் அன்பு வலையில் சிக்கித் தவிக்கும்:

அம்மா, மனைவி, தம்பிமார்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (58712)

## ஈராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 02 — 04 — 1941



விண்ணில் 21 — 08 — 1996

**அமரர் இ. விஜயரத்தினம்**
B. A. (Hons) Dip - in - Ed.
(முன்னாள் அதிபர், யா/ தேவரையாளி இந்துக்கல்லூரி, வதிரி, உதவிக் கல்விப்பணிப்பாளர், திட்டமிடல்பிரிவு, கோட்டக்கல்வி அலுவலகம், பருத்தித்துறை)

அன்புள்ள அப்பாவே!

ஈராண்டு சென்றதப்பா, ஆறவில்லை எம்துயரம். அன்பான உறவினரும் அம்மாவுடன் நாமுமிங்கே உனை நினைத்து உருகி நிற்க எங்குதான் சென்றாயப்பா? எப்பிறப்பில் காண்போமினி.?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவியும், பிள்ளைகளும்.

நட்சத்திர பவனம்,
அல்வாய். (58736)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**S. K. மனோகரரூபன்**

தோற்றம் 07 - 07 - 1944
மறைவு 29 - 08 - 1997

எம் இனியவரே!
உம்மோடு கழித்த பசுமைமிகு நாள்களை
நினைத்துப் பார்க்கிறோம்......
காலங்கள் கரைந்திடினும்
நீங்கிடாத நினைவலைகள்
எம் வாழ்வில்
இனி என்றுமே மீண்டிடாத
இனிய பொழுதுகள்......
தானென்றும் தனக்கென்றும் வாழ்ந்திடாத
நல் மனிதருடன் வாழ்ந்த
பாசமிகு காலங்கள்...
இனி எங்கு போய்த் தேடுவது...?
அதில் அர்த்தமில்லை; நாமுணர்வோம்
எனினும் உம் இலட்சியம் நோக்கிய பயணம்
எம் வாழ்வை அர்த்தமுள்ள தாக்கும்!
உம் கனவுகள் எமக்குத் துணையிருக்கும்
நிச்சயம் ஒருநாள்
உம் கனவுகள் இங்கு கால் பரப்பும்!
நல் விருட்சமாய் நிமிர்ந்தெழும்
தமிழ்த் தேசத்தின் திசையெங்கும் கிளை பரப்பும்
இனியவரே,
இதுதான் நாமிங்கு உமக்களிக்கும் அஞ்சலி.

பாசமுள்ள மனைவி:- கருணா
பாசமுள்ள பிள்ளைகள்:- வீணா, கிட்டு.

49A, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம். (58729)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வாடிக்கையாளர், ஆதரவாளர்களுக்கு
பிந்திக் கிடைத்த நற்செய்தி!

# ராஜன்

## தொலைத்தொடர்புச் சேவை

[உடனடி சர்வதேச உள்ளூர்த் தொடர்புகள்]

சகல செய்திகளும் உடனுக்குடன்
விநியோகம் செய்யப்படும்.

தொலை பேசி இல: 070 - 212278
வெளிநாட்டு அழைப்புகள்/ பக்ஸ் நம்பர்: 0094 70 212278

**ராஜன் வீடியோ மூவிஸ்**
**ராஜன் சைக்கிள் வேக்ஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை.

(சி/4667)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**செல்லையா கனகசபை**


30-07-98 அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத்தின் குல விளக்கான அமரர் செல்லையா கனகசபை அவர்களின் 31 ஆம் நாள் நினைவுதினமாகிய இன்று அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம். மற்றும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும், ஏனைய வழிகளில் உதவி நல்கிய அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

– குடும்பத்தினர்

கிட்டங்கி,
அளவெட்டி.

(58735)

# ஈராண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்வராஜா கிரிதரன்**
(B. Eng. Civil Engineer, East London University, Old Boy, Hartley College)

ஜனனம்: 14–09–1964
அஸ்தமனம்: 22–08–1996

திதி: 30 – 08 – 1998

ஜாலக் கிரியாய் ஜனித்து
ஜலத்திலே ஜீவனிழந்து
மீளாத்துயரில் ஆழ்த்தி – நம்மை
பாதியிலே பிரிந்திட்ட, அன்புச்செல்வன்
பிரிய சகோதரனுக்கு

துயருறும் குடும்பத்தினர்;

செல்வராஜா குடும்பத்தினர்,
சாந்தினி குடும்பத்தினர்
28, Bridge Water Road,
Alperton, Wembley,
Middx, HAO, IAJ.
U-K.
44 - 181-9031851

சுபா குடும்பத்தினர்,
தமிழ் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர், இந்தியா.
முரளி குடும்பத்தினர்,
ஆஸ்திரேலியா.
ஷாமினி.
33, Frances Road,
Colombo - 06.

''நொத்தாரிசு வளவு''
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

(58700)

# சான்றிதழ் வழங்கும் வைபவம்

சண்டிலிப்பாய், ஓக.29

வடக்கு–கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித்திணைக்களத்தின் அனுசரணையுடன் கடந்த ஆண்டில் மானிப்பாயில் நடத்தப்பட்ட சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவுக்கான தையல் டிப்ளோமா பயிற்சி நெறியில் சித்தி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று சனிக்கிழமை முற்பகல் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஸ்ரீபதி தலைமையில் நடைபெறவுள்ள இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்குவார். (ஐ-135)

# கோப்பாய் விசேட அ.அட்டை

யாழ்ப்பாணம், ஓக. 29

கோப்பாய் வடக்குஜே/262 கிராமசேவகர்பிரிவைச்சேர்ந்தோருக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நீர்வேலியில் உள்ள இராணுவ சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் வைத்து விநியோகிக்கப்படும் என அப்பகுதிக் கிராமசேவகர் எஸ். செல்வச்சந்திரன் அறிவித்துள்ளார். (இ-7)

# பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஓக. 28

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் நடத்தப்படும் மகளிர்களுக்கான, மனையியல் அடிப்படைப் பயிற்சிநெறி பனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பனை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் நடைபெற்று வரும் இப்பயிற்சி நெறி கடந்த 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்து ஐந்து மாதங்கள் நடைபெறும் இப்பயிற்சி நெறிக்கு பனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பனை பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 40 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தையல், பூவேலை, தலை அலங்காரம் ஐஸ்சிங், கோலம் போடுதல், கூட்டுறவு தலைமைத்துவம் ஆகிய துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. (இ-15)

# கண் சிகிச்சை முகாம்

சண்டிலிப்பாய், ஓக. 29

மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகம் நவாலி அட்டகிரி த.க. பாடசாலையில் இலவச கண்சிகிச்சை முகாம் ஒன்றை நாளை ஞாயிற்றுக்கிழமையன்று முற்பகல் நடத்தவுள்ளது.

மேற்படி கழகத்தின் சுகாதார சேவைத்திட்டத்திற்குப் பொறுப்பான லயன் டாக்டர் சோ. சுந்தரராஜன் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார். (ஐ-30-135)

**SPOKEN ENGLISH**
BY
BRITTO
(கொக்குவில் ஞான பண்டித வித்தியாசாலை அருகில்)
புதிய பிரிவு
ஆரம்பம்:
31 . 08 . 98 திங்கள்
[illegible] மணி
(சி/4676)

# கோண்டாவிற் பகுதியில் திருட்டுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29

கோண்டாவிற் பகுதியில் கடந்த சில நாள்களாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இரவு ஊரடங்கு வேளையிலேயே இந்தத் திருட்டுக்கள் இடம்பெறுகின்றன.

வீடுகள் மட்டுமன்றி கோயில்களும் திருடர்களிடம் தப்பவில்லை.

அரசடிப் பிள்ளையார் கோயிலில் இருந்து பல தகரங்கள் நேற்று முன்தினம் இரவு திருடப்பட்டுள்ளன.

நெட்டிலிப்பாய்ப்பகுதியில் வீட்டு ஓடுகள் களவாடப்பட்டுள்ளன.

கோழிகள், வீட்டுச் சாமான்கள் என்பனவும் சில வீடுகளில் திருட்டுப் போயுள்ளன. [ஐ-30]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 09 |
| 04 | 09 |
| 1938 | 1997 |

திருமதி
**கனகரெத்தினம் குணமணி**

ஆண்டொன்று ஓடினாலும் அம்மா
எம்கவலை தீராது அம்மா!
அன்புக்கும் பண்புக்கும் அன்னை நீயே!
எப்படி உம் பிரிவை நாம் ஏற்போம்?

என்றென்றும் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமகன், உற்றார், உறவினர்.

417, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(58739)

# இடமாற்ற அறிவித்தல்

எனது அன்பான வாடிக்கையாளர்களுக்கு இத்தால் அறியத்தருவது யாதெனில் இதுவரை காலமும்


இல. 193, ஆஸ்பத்திரி வீதியில்
இயங்கி வந்த எங்கள்
''சசிகாந்தன் ஸ்ரோர்ஸ்''
(இன்று) 29 - 08 - 98 முதல்
இல. 380, ஆஸ்பத்திரி வீதிக்கு
(யாழ். புகையிரத நிலைய சந்திக்கு அருகில்)

இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றேன்.

உங்கள் அன்பின்
இ. ஜெகநாதன்

(58705)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 | 08 |
| 10 | 09 |
| 1927 | 1997 |

**அமரர் சு. இராமநாதன்**
(ஓய்வுபெற்ற இ. போ. ச. சாரதி)

எங்கள் குடும்ப விளக்காய் விளங்கிய எமது அன்புத் தெய்வம் சிவபதமடைந்து ஓராண்டானாலும் என்றும் எமது நெஞ்சை விட்டகலாது நாளும் பூசித்து ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

மனைவி இ. புவனேஸ்வரி,
பிள்ளைகள்: முருகதாஸ் குடும்பம்.
கிருஷ்ணதாஸ் குடும்பம்.

14, சங்கிலியன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(58708)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வெளியீடு

**விவரண புள்ளி விவரவியல்**
இரண்டாம் (திருத்திய) பதிப்பு
வெளிவந்துவிட்டது

ஆசிரியர்: திரு. செ. இளங்குமரன்
விரிவுரையாளர், புள்ளி விவரவியல்,
யாழ். பல்கலைக்கழகம்

சிறப்பு கலைமாணி — பகுதி I
வணிகமாணி — பகுதி I
விஞ்ஞானமாணி — முதல் வருடம்
HNDA, HNDC — முதல் வருடம்
க.பொ.த. (உ/த) — வணிக புள்ளியியல் (அலகுகள் 1—4)

ஆகிய பாடநெறிகளுக்கு ஏற்றது.

தொடர்பு: 1. ஆசிரியர்,
2. பட்டப் படிப்புகள் கல்லூரி, ஸ்ரான்லி வீதி.

(58677)



# அம்பிகா திரை அரங்கு திறப்பு விழா

இடம்: கண்டி வீதி, சாவகச்சேரி
காலம்: 29 - 08 - 98 சனிக்கிழமை
10-30 க்கு — TRUE LIES
2-30 க்கு — புதுப்புது அர்த்தங்கள் (ரகுமான்)

நவீன தொழில்நுட்பம் வாய்ந்த டியிற்றல் டொல்பி ஸ்ரவுன் சவுண்ட் சிஸ்ரத்துடனான 40 அடி வெண் திரையில் காண்பிக்கப்படும்

30 - 08 - 98 ஞாயிறு
10 30 க்கு — DEMILESAN MAN
2-30 க்கு — உன்னிடத்தில் என்னை கொடுத்தேன் (கார்த்திக் - றோஜா)

ஜேர்மன் தொழில்நுட்பம் உதவி வழங்கிய குணம் (Caffe Sedny German) குடும்பத்தினருக்கு நன்றியைத் தெரிவித்து, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி!

அம்பிகா வீடியோ ஓடியோ சென்ரர் ஸ்தாபனத்தார்.

(58743)



# ST. PATRICK'S COLLEGE -JAFFNA
# அனுமதி விண்ணப்பம் 1999

★ விண்ணப்பப் பத்திரம் (பரீட்சைக் கட்டணம் உட்பட ரூபா 175) 01 - 09 - 98 தொடக்கம் 22 09-98 வரை பாடசாலை நாள்களில் காலை 9-30—பி.ப. 1-30 வரை கல்லூரிக்காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 25-09-98 ஆம் திகதிக்கு முன் கல்லூரி காரியாலத்தில் காலை 9 - 30 — பி. ப. 12 - 30 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ முதலாம் ஆண்டு:
01-08-93 — 31-01-94 (இரு திகதிகளுக்கும் உட்பட) பிறந்திருக்க வேண்டும்.

★ அனுமதிப் பரீட்சை;
03 - 10 -98 (சனிக்கிழமை) காலை 9 - 00 மணிக்கு ஆரம்பமாகும்.

| ஆண்டு | சமுகம் தர வேண்டிய நேரம் (காலை) | பரீட்சை ஆரம்பம் (காலை) |
|---|---|---|
| ஆண்டு 1 (இல. 01-100) | 8-30 | 9-00 |
| 1 (இல. 101-250) | 11-00 | 11-30 |
| ஏனைய வகுப்புகள் | 8-30 | 9-00 |

★ 6 ஆம், 9 ஆம் ஆண்டுக்கான அனுமதிப் பரீட்சையில் 85% திறமை காண்பிக்கும் முதல் 10 மாணவர்களுக்கு வழமை போல் ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் குறுப்பிட்ட திகதிக்கு பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

★ சித்தியெய்திய தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்படும்.

— கல்லூரி அதிபர்

(சி-4681)


# சந்நிதியில் இன்று

வடமராட்சி, ஒக. 29

தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயில் வருடாந்த உற்சவத்தை ஒட்டி கோயில் சுற்றாடலில் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்ச்சியில் இன்று சனிக்கிழமை 'ஒளியேற்றி இருளகற்றும் இளமுருகன் எழுந்தருளி வருகின்றான் இடர் தீர்க்க' என்ற தலைப்பில் கவிதை நிகழ்வும் 'ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய' என்ற தலைப்பில் சொற்பொழிவும் இடம் பெறும்.

இக் கவிதையையும், சொற்பொழிவையும் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தைச் சேர்ந்த வ. மார்க்கண்டு வழங்குவார். (ஐ-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக. 29

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் ஆச்சிரம மண்டபத்தில் நிகழ்த்திவரும் தெய்வீகக்கலை நிகழ்ச்சிகளில்— இன்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் மந்திகை ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையமும், அதனைச் சார்ந்த பஜனைநிலையங்களும் நடத்தும் ''பஜனை'' நிகழ்வு நடைபெறவுள்ளது.

(ஐ-8-30-173)

# சிறாம்பியடி மக்களுக்கு அ. அட்டை

யாழ்ப்பாணம், ஒக. 29

சிறாம்பியடி கிராமசேவையாளர் பிரிவுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 11 மணிவரை ஆரியகுளம் சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

உரியவர்கள் குடும்ப அட்டையுடன் சமுகமளித்து அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு சிறாம்பியடி கிராம அலுவலர் சொ. பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

(ஐ-8)

## அரசாங்கம்...

(மூன்றாம் பக்க தொடர்)

பட்டுக்கொண்டிருக்கும் அரசாங்கம் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் தாராளமாக ஆள்கள் இணைய உதவுகிறதே!

நாம் எந்தக் கட்டத்திலும் உணவை ஆயுதமாகப் பயன்படுத்த மாட்டோம். கடந்த காலத்தில் எமது ஆட்சிக் காலத்தில் மக்களின் அடிப்படை வசதிகளை நாம் மறுக்கவில்லை. எதிர்காலத்திலும் அதே நிலை தொடரும்.

★ கேள்வி: செம்மணி புதைகுழி விவகாரத்தில் அரசின் அணுகுமுறை பற்றி உங்கள் கருத்து என்ன?

★ பதில்: செம்மணி விவகாரம் சர்வதேசமயமாகி விட்டது. ஆனபடியால் அரசாங்கம் இதில் ஈடுபடத்தான் வேண்டும்.

★ கேள்வி: வடக்கு மக்களுக்கு ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?

★ பதில்: வடக்கு மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை, துன்பங்களை நாம் உணர்கிறோம். அதற்காக எமது கவலையைத் தெரிவிக்கிறோம். எதிர்க் கட்சியில் இருந்து வடக்கு மக்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்போம். நாம் பதவிக்கு [illegible] த்தை முடிவுக்குக் கொண்டு வருவோம் என்று வடக்கு மக்களுக்கு கூறவிரும்புகிறோம்.

# அதிரடி அரங்கு

''கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுந்தம் போக முயற்சித்தானாம்!'' — என்ற ஒரு பழமொழி நம்மத்தியில் அடிக்கடி பேசப்படுவதுண்டு.

இங்கு கல்வி நிர்வாக முறையைப் பார்க்கும்போது இந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் இப்போது இரண்டு கல்வி வலயங்கள் உள்ளன. இந்த இரண்டு வலய அலுவலகங்களிலும் பணியாற்றுவதற்கே போதியளவு ஆளணியினர் இல்லை. குறிப்பாக 'ஸ்ரீலங்கா கல்விச்சேவை' (SLES) தரம் பெற்ற அதிகாரிகளுக்கு பெரும் பற்றாக்குறை. அதிபர் தரம் I ஐச் சேர்ந்தவர்களை அதிபர் பதவிகளில் இருந்து தூக்கி பதில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களாக நியமித்து இழுபறிப்படுகின்றார்கள்.

உதாரணத்துக்கு ஒன்று:- யாழ். கல்வி வலயம் I இற்குக் கீழ் இயங்கும் ஐந்து கல்விக் கோட்டங்களில் ஒன்று மட்டும் — சாவகச்சேரிக் கல்விக்கோட்டம் மட்டும் — தனியாக ஓரிடத்தில் இயங்குகின்றது. அதற்குப் பொறுப்பான பிரதிக் கல்விப்பணிப்பாளராகப் பணிபுரிபவரும் அதிபர் தரம் I ஐச் சேர்ந்தவரே. ஏனைய நான்கு கோட்டங்களும் — யாழ்ப்பாணம், நல்லூர், தீவக(இரு)கல்விக்கோட்டங்களும்— ஆளணிப் பற்றாக்குறை காரணமாக ஒரே அலுவலகத்தில் — ஒரே இடத்தில் — நல்லூரில் இயங்குகின்றன. அதற்குப் பொறுப்பான பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் எவரும் இல்லை. யாழ்ப்பாணம் கல்வி வலயம் I இன் கல்விப் பணிப்பாளரும், அங்குள்ள மற்றொரு பிரதிக் கல்விப்பணிப்பாளரும் வாரத்துக்கு இரண்டு நாள் என்று மாறி மாறி 'Turn' எடுத்துப் போய் அங்கிருந்து அந்த நான்கு கோட்டங்களுக்குமான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களின் பணிகளை நிறைவேற்றி வருகின்றனர். இவர்கள் பணிபுரியும் நான்கு நாள்களையும் தவிர்த்து ஐந்தாவது வேலை நாளில் அந்த நான்கு கோட்டங்களும் தலைவர் இல்லாத அலுவலகங்கள் தான்!

இரண்டு கல்வி வலயங்களை வைத்தே இந்த இழுபறி நடக்கையில் — இன்னும் சரியாக ஒருமாதத்தில்— அதாவது ஒக்ரோபர் முதலாம் திகதியிலிருந்து— யாழ்ப்பாணக் கல்வி நிர்வாகத்தை ஐந்து கல்வி வலயங்களாகப் பிரித்து நடத்துவது என மாகாணக் கல்வி அமைச்சு தீர்மானித்திருக்கின்றது. கண்டிப்பாக இந்த முடிவை அத் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்த முடிவாகியிருப்பதாகத் தெரிகின்றது.

இப்போது மீண்டும் ஒருதடவை இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் கூறப்பட்ட பழமொழியை வாசித்துப் பாருங்கள். பழமொழி பொருத்தம்தானே!

★ ★ ★ ★

**யாழ்.** நகரில் புதுவிதமான ஏமாற்றுப்பேர்வழி ஒருவர் நடமாடுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

வன்னியில் உள்ள போராளிகளின் குடும்பங்கள் இங்கிருந்தால் அதை மோந்து பிடித்து விவரங்களைத் திரட்டிக்கொண்டு அந்தக் குடும்பங்களை நாடிச் செல்வார். சம்பந்தப்பட்ட போராளி, இயக்கத்தை விட்டு விலகிவிட்டதாகவும், அவரைக் கூட்டி வந்து தூரத்தில் ஓரிடத்தில் பாதுகாப்பாக வைத்திருப்பதாகவும், அவர் வன்னியிலோ, குடாநாட்டிலோ வைத்திருப்பது பாதுகாப்பு இல்லை என்பதால் அவரைத் தாம் தமிழகத்துக்கு படகு மூலம் கூட்டிப் போகவிருப்பதாகவும், அதற்கு ஒரு தொகைப் பணம் வேண்டும் என்றும் 'கப்ஸா' விடுவாராம் இந்தப்பேர்வழி.

அந்தப் போராளியின் குடும்பம் நம்பும் விதத்தில் கதை விட்டு— போராளி மீது குடும்பத்தவர் வைத்திருக்கும் பாசத்தைப் பயன்படுத்தி— அக் குடும்பத்தின் நிதி நிலைகேற்ப, ஒரு சில ஆயிரங்களைச் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகி விடுகின்றார்.

''வயிற்றுப் பிள்ளை வழுகி விழுகின்ற'' மாதிரி கதைக்கும் இந்த நபருக்கு ஐம்பது வயதிருக்கும். கறுத்த, கட்டையான, தடித்த உருவம். தலைமுடி நரைத்திருக்கும். முன் வாயில் மேற்பகுதியில் இரண்டு, மூன்று பற்கள் விழுந்திருக்கும். வெள்ளை வேட்டி அல்லது சாரம் அணிந்திருப்பார். தான் வடமராட்சி நாகர் கோயிலைச் சேர்ந்தவர் என்றும் தனது தொழில் மீன்பிடி என்றும் தன்னிடம் வள்ளம் இருப்பதாகவும் இவர் கதையளந்த இடங்களில் கூறியுள்ளார்.

இவரிடம் ஏமாந்த ''சோணகிரி''களில் கல்வித் திணைக்கள இடைத்தர நிலை அதிகாரியும் ஒருவர் என்று தகவல். போராளி குடும்பங்களே உஷாராக இருங்கள்.

★ ★ ★ ★

கல்வித்திட்ட முறையில் அடுத்த ஆண்டு முதல் புதிய ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எட்டாம் வகுப்பு வரை கீழ்நிலைப் பாடசாலைகளும் ஒன்பதாம் வகுப்பு முதல் உயர்தரப் பாடசாலைகளும் இயங்கும் என கூறப்படுகின்றது.

தற்போது ஐந்தாம் ஆண்டில் நடத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சை இனிமேல் நடைபெறாது. அது ஆண்டு எட்டிலேயே நடத்தப்படும் என்றும் கூறப்படுகின்றது.

ஆனால் 1999 ஓகஸ்ட்டில் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு மாணவர்களைத் தயாரிப்பதற்கான 'ரியூஷன்' வகுப்புகள் குடாநாட்டில் மிகச் சூடாக — விளம்பர அறிவித்தல்களுடன் — ஆரம்பமாகிவிட்டன. பெற்றோரும் காசைக்கட்டி பிள்ளைகளை நேரம் தவறாமல் ''ரியூசனுக்கு'' அனுப்புகின்றார்கள்.

1999 இல் ஐந்தாம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை நடக்குமா? சம்பந்தப்பட்டோர் தெளிவுபடுத்தினால் நல்லது.

— மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ. தாக்குதல்களைக் கண்டித்து அம்பாறையில் நேற்றுப் பேரணி!

அம்பாறை, ஓக. 29
சூடான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் மீது அமெரிக்கா மேற்கொண்ட ஏவுகணைத் தாக்குதல்களைக் கண்டித்து அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் தொடர்ந்து கண்டனப் பேரணிகளை நடத்திவருகின்றார்கள்.

நேற்று நண்பகல் நிந்தவூர் மீரா ஜும்மா பள்ளிவாசல் முன்பு ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடைபெற்றது.

ஜும்மா தொழுகையின் பின்பு பள்ளிவாசலிலிருந்து புறப்பட்ட ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட இளைஞர்கள் அமெரிக்காவிற்கு எதிரான கோஷங்களை எழுப்பிப் பிரதான வீதிகள் வழியால் பேரணியொன்று நடத்தினார்கள்.

பேரணி முடிவில் பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள காணியில் அமெரிக்க தேசியக் கொடியொன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிக்கப்பட்டது. (உ-14)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஓக. 29
பட்டதாரி ஆசிரியர் நலன் புரிக்கழகத்தின் முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அதன் தலைவர் வி. சிவராசா தலைமையில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும். (ஐ-30)

## கொடித்துவக்கு பொலீஸ்மா அதிபர்

கொழும்பு, ஓக. 29
சிரேஷ்ட பிரதிப் பொலீஸ்மா அதிபர் கொடித் துவக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் பொலீஸ்மா அதிபராகப் பதவியேற்கவுள்ளார். இம் மாதம் ஓய்வுபெற இருக்கும் பொலீஸ்மா அதிபர் டபிள்யூ. டி. ராஜகுரு வின் இடத்துக்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-6)

# துர்க்கையம்மன் உற்சவம் குறித்து விசேட ஒலிபரப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29
தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் வருடாந்த உற்சவத்தை ஒட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவை சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப ஏற்பாடு செய்துள்ளது என தமிழ்ச் சேவைப் பணிப்பாளர் வி. என். மதியழகன் தெரிவித்தார்.

துர்க்கையம்மன் ஆலய கொடியேற்றத் திருவிழா பற்றிய வானொலித் தொகுப்புரை நாளை காலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை ஒலிபரப்பப்படும்.

3 ஆம்திகதிகாலை 6.00மணி முதல்6.30மணிவரைஒலிபரப்பாகும் சிறப்பு நிகழ்ச்சியில் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், ஏழாலை திலகா சண்முகநாதன், ஆறு திருமுருகன் ஆகியோர் பங்குபற்றுவர் சிறப்பு நிகழ்ச்சியை தயாரிப்பாளர் தி. உருத்திரா பிள்ளை வடிவமைத்து வழங்குவர்.

இதே சமயம், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலய ரதோற்சவம் தொடர்பாக நேரடி அஞ்சலையும் 3 ஆம் திகதி காலை 9.00 மணி முதல் 11.00 மணி வரை ஒலிபரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத் தெரிகின்றது. (உ)

## ச, ச. நிலைய விளையாட்டு போட்டி

உரும்பிராய், ஓக. 29
உரும்பிராய் வடக்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் இல்லவிளையாட்டுப்போட்டி நாளை பிற்பகல் 1 மணிக்கு திரு. பொ. றம்சன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. வ. கிருஷ்ணசாமியும் சிறப்பு விருந்தினராக நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தலைவர் திரு. அ. க. த. கிருஷ்ணராசாவும் கலந்து கொள்வர். (உ-154)

# யாழ்.நகரில் போக்குவரத்து விதிகளை பேணி நடக்குமாறு அறிவுறுத்து

## பொலிஸ் அதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 29
ஒரு வழிப்பாதையான கஸ்தூரியார் வீதி வழியாக சட்டத்துக்கு முரணான விதத்தில் பிரயாணம் செய்யும் வாகனங்கள் மீதும்—

தமக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் நிறுத்தாது யாழ். மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் நிறுத்தி பிரயாணிகளை ஏற்றும் மினி பஸ்கள் மீதும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி கே. மோகன்தாஸ் இவ்வாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். நகரப் போக்குவரத்து சம்பந்தமாக எமக்கு பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக மினி பஸ்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் நிறுத்தி பிரயாணிகளை ஏற்றிக் கொள்ளாமல் மத்திய பஸ்நிலையம் முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் நிறுத்தி பிரயாணிகளை ஏற்றுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதனை விட ஒரு வழிப்பாதையாக உள்ள கஸ்தூரியார் வீதி வழியாகப் பல வாகனங்கள், மினி பஸ்கள் சட்டத்துக்கு முரணான விதத்தில் பயணம் செய்கின்றன என்றும் முறைப்பாடு கிடைக்கப்பட்டுள்ளது.

எனவே இந்நிலைமை இப் பாதையைப் பாவிக்காமல் ஆஸ்பத்திரி வீதியூடாக கே. கே. எஸ். வீதியைச் சென்றடைந்து பயணத்தை மேற்கொள்ளும்படி வாகன ஓட்டுநர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் மினிபஸ் ஓட்டுனர்களுக்கெதிராகவும் பல முறைப்பாடுகள் வருகின்றன.

இவ்வாறு சட்டத்துக்கு முரணான வகையில் நடந்து கொள்பவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார். (ஐ-6)

## சமய [illegible]

யாழ்ப்பாணம், ஓக. 29
சுன்னாகம் கிழக்கு, ஊரிசாட்டி திருப்பதியுறை சிவபூதவராயர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.35 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ-ரி)

★ ★ ★

கோண்டாவில் மேற்கு கந்தர் வளவு ஸ்ரீமகா சண்முகப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை 10.45 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 29
அராலி காரைப்பிட்டி விநாயகர் ஆலய மணவாளக் கோலவிழாவை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் சங்காபிஷேகமும், மாலை அழகிய பூந்தண்டிகையில் சுவாமி வீதியுலாவும் இடம்பெறவுள்ளன. காலையும், மாலையும் விசேட நாதாஞ்சலி இடம்பெறும். (ஐ-8-30)

## 6 மாதச் சிறை

யாழ்ப்பாணம், ஓக. 29
சைக்கிள் திருடிய நபர் ஒருவருக்கு யாழ். மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவானால் ஆறுமாத கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சைக்கிள் திருடிய குற்றச்சாட்டின் பேரில் யோகராசா மகேந்திரம் (யாழ்ப்பாணம்) என்ற இந்த நபர் நீதிவான் மு. திருநாவுக்கரசு முன்னிலையில் பொலீஸாரினால் நேற்று ஆஜர் செய்யப்பட்டார். (உ-5)

## கிரிந்த கப்பல் பருத்தித்துறையில்

வடமராட்சி, ஓக. 29
அத்தியாவசியப் பொருள்களுடன் காங்கேசன்துறை வந்து சேர்ந்த "கிரிந்த" கப்பல் தற்போது பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி வருகிறது.

தனியார் வர்த்தகர்களுக்கு இக் கப்பலில் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. (ஐ-173)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 29
யாழ். உப்பு நீர் ஏரித் திட்டம் தொடர்பான கருத்தரங்கு ஒன்று நாளை காலை 10மணிக்கு இருபாலைச் சந்தியிலுள்ள மக்கள் நலன்காக்கும் பிரிவு பணிமனையில் நடைபெறவுள்ளது. (உ-5)

## முதலாம் திகதி முதல்

# சங்கீத, நடன ஆசிரியர்கள் பதவிக்கு 61பேர் நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 29
யாழ். மாவட்டப் பாடசாலைகளில் 61 அழகியற் கல்வி (சங்கீதம், நடனம்) பட்டதாரிகள் மற்றும் டிப்ளோமாப் பட்டதாரிகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெறவுள்ளனர்.

கல்வி வலயம் ஒன்றின் கீழ் உள்ள பாடசாலைகளில் 36 பேரும், கல்வி வலயம் இரண்டின் கீழ் உள்ள பாடசாலைகளில் 25 பேரும் இவ்வாறு ஆசிரிய நியமனம் பெறவுள்ளனர்.

ஆசிரிய நியமனத்திற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல்கள் சம்பந்தப்பட்ட வலயக் கல்வித் திணைக்களங்களின் விளம்பரப் பலகையில் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர் நியமனம் பெறும் பட்டதாரிகளை நாளை மறுதினம் 31 ஆம் திகதி காலை 9 மணிக்கு தத்தமது வலயக் கல்விப் பணிமனைகளுக்கு வருகை தருமாறு கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

ஆசிரியர் நியமனம் பெறும் பட்டதாரிகளின் பெயர் விவரங்கள் நாளைய உதயனில் வெளியிடப்படும். (உ-7-5)

# திருமணக் கார் நேற்று விபத்துக்குள்ளாகிச் சேதம்

யாழ்ப்பாணம், ஓக. 29
சோடனையுடன் சென்ற திருமணக் கார் நேற்றுக் காலை விபத்துக்குள்ளாகியது. காரின் முன்பக்கம் பெரும் சேதமடைந்தது. காரில் இருந்த திருமணக் குழுவினர் தெய்வாதீனமாகக் காயமின்றித் தப்பினர்.

நுணாவிற் பகுதியில் நடந்த இச் சம்பவத்தில் கொடிகாமத்தைச் சேர்ந்த மேற்படி கார் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் விபத்துக்குள்ளாகி, வீதியிலிருந்து விலகித் தென்னைமர வளவொன்றினுள் புகுந்து, தென்னை மரத்துடன் மோதுண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் சென்ற நுணாவில் வாசி காயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# மூன்று பிள்ளைகளை கொலை செய்த தந்தை தொடர்ந்து காவலில்!

யாழ்ப்பாணம், ஓக. 29
தனது மூன்று பிள்ளைகளையும் கொலை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அளவெட்டி வாசியை எதிர்வரும் முதலாம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு உத்தரவிட்டார்.

கடந்த ஜூலை 5 ஆம் திகதி தனது மூன்று பெண் பிள்ளைகளையும் கழுத்தில் கயிறு போட்டு சுருக்கிட்டு கிணற்றில் தள்ளி விழுத்திக் கொலை செய்து விட்டு தானும் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்ய முயற்சித்த சமயம் உயிர் பிழைத்ததாகக் கூறப்படும் கணபதிப்பிள்ளை விஜயகுமார் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று மீண்டும் இவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். சந்தேகநபர் இச்சம்பவம் தொடர்பாக எழுதிய கடிதமும், அவர் அருந்திய நச்சுத் திராவகப் போத்தலும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இக் கடிதத்தில் தனது மூன்று பிள்ளைகளினதும் கொலைக்கும் தானே காரணம் என்று அவர் தெரிவித்திருந்தாராம் இவரது கடிதமும், மருந்துப் போத்தலும் பகுப்பாய்வு நிபுணருக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும் என்று பொலீஸார் நீதிவானிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க இதனை பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (உ-5)

## முன்பள்ளி அபிவிருத்தி நிதியம்

யாழ்ப்பாணம், ஓக. 29
முன்பள்ளி அபிவிருத்தி நிதியம் அமைப்பதற்கான அங்குரார்ப்பணக் கூட்டம் வலி. கிழக்கு பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம் தலைமையில நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# சோதனை என்ற பெயரில் நள்ளிரவில் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஓக. 29
இராணுவச் சோதனை என்ற போர்வையில் இடம்பெற்றுவரும் திருட்டு, கொள்ளைச் சம்பவங்கள் குறித்து மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

உரும்பராயில் நேற்றுமுன்தினமிரவு இரண்டு வீடுகளில் கொள்ளை முயற்சி இடம்பெற்றுள்ளது. ஒரு வீட்டில் பெறுமதிமிக்க கடிகாரம், றேடியோ ஆகியன கொள்ளையிடப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டோருக்கு உதவச் சென்ற அயலவர்கள் நையப்புடைக்கப்பட்டுள்ளனர்.

வீட்டுக்காரரின் கூக்குரல் கேட்டு உதவிக்குச் சென்றவரான முத்தையா சிவசுந்தரலிங்கம் (வயது 47) என்பவர் தாக்குதலுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் சோதி வேம்படிப் பகுதியிலும் கடந்த செவ்வாய் இரவு இராணுவம் போல் நடித்து ஒரு வீட்டிலிருந்து பெறுமதிமிக்க பொருள்கள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன. (உ-15-139)

## நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 29
நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வீடமைப்பு அதிகாரசபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப் பட்டுள்ளார். (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Institute of Informatics Studies

( Jaffna , Sri Lanka )

NEW SESSION COMMENCES ON:
Weekend 5 th September 1998
Weekday 7 th September 1998 } at 10. 00 a. m.

☐ Come to us. We will take care of you.
☐ Be a WINNER.

IIS Will be the proud symbol for your Achievements.

Taking you into the
**INFORMATION AGE**

☐ First in everything !!!
Introduced Windows 95, MS Office-97, ACS, etc
Now Introducing:



**Windows 98**

Microsoft Windows 98

**VISUAL BASIC**
**NETWORK SYSTEMS**

Courses offered:

## Diploma in Ms-office

[ MS-Excel , MS-Access , MS-Word , MS-Power Point ]

## Diploma in Computer Programming
(Special graduation Course )

**Technician Diploma in Computer Hardware**

### Certificate Courses :

| | | |
|---|---|---|
| ☞ MS-Excel | ☞ MS-Access | |
| ☞ MS -Word | ☞ MS-PowerPoint | |
| ☞ Visual Basic | ☞ Pascal | ☞ C++ |
| ☞ Clipper | ☞ dBase | ☞ Lotus 123 |
| ☞ AutoCAD | ☞ Pagemaker | ☞ Corel DRAW |

* Excellent teaching.
* Payments can be made in instalments.
* 5% Discount on full payment.
* Excellent collection of books.
* Practicals around the clock.

★ A wait for the opening
Of
Our NEW BRANCH
At
CHAVAKACHCHERI
In September '98

For further details contact :



Director
**Institute of Informatics Studies**
68, Clock Tower Road , Jaffna.
Navalar madam , Nelliyady.
"Circle Centre" , Chankanai.

(C/4678)


# கண்ணிவெடி அகற்றும் பணி மீள ஆரம்பிக்கும்!

ஐ. நா. சபையின் கண்ணி வெடி அகற்றும் நிபுணர்கள் யாழ்ப்பாணத்தில் தமது பணிகளை மேற்கொள்வதற்கு வசதியாக தேவையான கருவிகள் அனைத்தையும் தருவிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

நேற்று கொழும்பில் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிபுணர் குழுவுக்குத் தேவையான தொலைத் தொடர்பு சாதனங்களை வடக்கே எடுத்து வருவதற்கு முன்பு அனுமதி மறுக்கப்பட்டதும்—

அதனால் ஐ. நா நிபுணர் குழு வடக்கில் தனது பணிகளை இடை நிறுத்தி வெளியேறியதும் – தெரிந்தவையே.

## ஷெல் தாக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

மாதம்) ஆகிய இரு சகோதரர்களுமே உயிரிழந்தனர்.

போரதீவு, பழுகாமம், முனைத்தீவுப்பகுதிகளில் ஷெல்களினால் பத்துமுதல்பதினைந்து வீடுகள் வரை சேதமடைந்ததாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொ. செல்வராஜாவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

## பட்டினி...

(முதலாம் பக்கத் தொடர்)

சென்று அதிக விலைக்கு விற்பனை செய்ததாகவும்—

எனவே எல்லோராலும் அதனை வாங்கமுடியத நிலை காணப்பட்டதாகவும் — தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பயணிகள் நேற்று நண்பகல் சுமார் 12 மணியளவிலேயே வவுனியா நகரை வந்தடைந்துள்ளனர். (164)


எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்!
'மணிரத்தினத்தின்'
ஷாருக்கான்,
மனிஷா கொய்ராலா
நடித்த
★ உயிரே
★ நிலாவே வா (Pyramid)
★ ஜீன்ஸ் (Pyramid)

ஓடியோ
CD வெளியீடுகள்

❖ காதல்
❖ வாலி
❖ கண் எதிரே தோன்றினாள்

என்றும் தரமான CD பதிவுகளுக்கு
**சுப்ப ஸோ**
**வீடியோ சென்ரர்**
யாழ்ப்பாணம்.

(சி/4685)


## ஐ. தே. க...

(முதலாம் பக்கத் தொடர்)

பேச்சுக்கள் நடத்தப்படலாம்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக, புலிகளுடன் பேசுவதற்கு ஜனாதிபதியுடன் உடன்பாடு கண்டேன். ஆனால் அரசு அந்த விடயத்தில் அக்கறை காட்டவில்லை. இதனால் தான் இன்று யுத்தம் தொடர்ந்த வண்ணம் உள்ளது. எனவே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதிலேயே நாம் அதிக கவனம் செலுத்துவோம்.

தொடர்ந்து கொண்டிருக்கும் போரினால் வடக்கு மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களையும் துன்பங்களையும் நாம் உணர்கின்றோம். அதற்காக எமது கவலையையும் தெரிவித்துக் கொள்கின்றோம். எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு வடக்கு மக்களுக்காகத் தொடர்ந்து குரல் கொடுப்போம் — என்றார். (உ-3-9)


## உடன் தொடர்பு கொள்ளவும்

ஒரு தொகைப் பணத்துடன், கறுப்பு நிறமுள்ள கைப்பை ஒன்று (Hand Bag) நேற்று நண்பகல் 11 மணிக்கும் 11.30 மணிக்கும் (புதிய நேரம்) இடையில் —

கன்னாதிட்டிச் சந்திக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது.

கன்னாதிட்டிச் சந்தி – கஸ்தூரியார் வீதி – வழியாக ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கொமர்ஷல் வங்கிக்குச் செல்லும் பாதையிலேயே கொழுவு தோல் இல்லாத அந்தப் பை காணாமற் போயிற்று.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 361, கஸ்தூரியார் வீதியில் உள்ள உதயன் பணிமனையில் என்னுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் தரப்படும்.

தவறிப்போன கைப் பையை மற்றவர் எவரேனும் கண்டெடுத்ததை அவதானித்தவர்களையும் தொடர்பு கொள்ளக் கேட்டுக்கொள்கிறோம்.

— காசாளர்
உதயன்

அராலி
## கரைப்பிட்டி விநாயகர் ஆலயம்
# மணவாளக் கோல விழா

30 . 08 . 98 ஞாயிற்றுக்கிழமை

காலை 1008 சங்காபிஷேகம்
மாலை தண்டிகை உற்சவம்

நாதாஞ்சலி: K. R. சுந்தரமூர்த்தி குழுவினர்
R சிவகுமார், ரஜீவ் } குழுவினர்
K. சிவகுமார் விசேட தவில்

— தேவஸ்தானம்

கரைப்பிட்டிக் கணபதியின் கழல் தனை வழுத்துகிறோம்.

அன்பளிப்பு: **பாலன் மில்ஸ்**
மாவடிச் சந்தி — வட்டுக்கோட்டை.

(58634)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-08-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி

# சஞ்சிகை

29 – 08 – 1998 சஞ்சீவி


தரமான நிழற்படப் பிரதிகள்
குறைந்த விலையில்
A4 அளவு ரூபா 2.50 மட்டும்
அடையாள அட்டைகள்
கவசிடுதல் (Lamination)
அருண்ஸ்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


## கருத்துக் கலசம்

மயூரா

### மனத்தூய்மை

எமது சமூகத்தை இறுக்கமாகப் பிணைக்கும் விழுமியங்கள் நலிந்து வருவதைப் பலரும் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆனால் இந்நிலையை நீக்குவது எவ்வாறு, அதற்கான செயல்முறைகள் என்ன, பொறுப்பு யாருடையது என்று சிந்திப்போர் மிகக் குறைவு; செயற்படுவோர் எவருமிலர் என்ற நிலை.

பிறரைத் திருத்து முன்னர், ஒருவர், தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும்; தாம் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக வாழவேண்டும். இதனைச் செய்வதற்கு மிகமிக அத்தியாவசியமானது என்ன?

தூய்மையான மனதுள்ள ஒருவனே மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கவும், பிறருக்கு அறிவுரை கூறவும் தகுதியுள்ளவன். தூய்மையான மனதிலிருந்தே நற்குணங்கள், நல்லியல்புகள் மலரும்.

போட்டி, பொறாமை, அழுக்காறு, வஞ்சகம், சூழ்ச்சி, பிறர் துன்பத்தில் இன்பம் காண்பது போன்ற அழுக்குகள் அகன்ற, களையப்பட்ட இதயமே தூய்மையான மனது.

தூய்மையான மனதில் திருட்டு, பிறர் சொத்தை அபகரித்தல், மது அருந்துதல், பிறர் மனை விரும்புவது, மோசடி, ஊழல், ஆணவம், வரம்பு மீறிய ஆசை, பழிவாங்குதல், ஈயாமை, பிறரைத் தூற்றுதல் ஆகிய தீய இயல்புகள் பற்றிக்கொள்ளமாட்டா. அவற்றை விலக்கி வைக்கத்தக்க பக்குவம் தூய்மையான மனதுக்கு மட்டுமே உண்டு.

சமூகத்தின் பெரியவர்கள் இளைஞர்களை எடுத்த எடுப்பில் கண்டிக்க முனையுமுன், அதற்குப் பொறுப்பாளிகள் யார் என்பதனைச் சிந்திக்க வேண்டும். மக்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் பெற்றோர்களாவர்.

இவர்கள் ஒவ்வொருவரும் தமது பிள்ளைகளுக்கு நற்குணமுடைய, தூயமனமுள்ள தாய், தந்தையராக வாழ்ந்து காட்டினால், முன்னுதாரணமாக வாழ்ந்தால் பிள்ளைகளும் அவ்வழியையே நாடுவர்.

மேலும் நற்குணங்களையும், நற்பழக்க வழக்கங்களையும், வாழ்க்கை முறையையும் எமது சமூக நீதிகளையும், பண்பாடுகளையும்தமது, பிள்ளைகளுக்கு ஊட்டவேண்டிய, சொல்லிக் கொடுக்கவேண்டிய பொறுப்பு வேறு எவரையும் விடப் பெற்றோருக்கே மிகமிக அதிகம்.

பிள்ளைகளை மற்றவர்கள் குறை கூறும்போது பெற்றோருக்கு அவமானமும் ஆத்திரமும் வருவதைத் தடுக்க என்ன வழி?

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற வழியைச் சொல்லித் தந்துள்ளான் வள்ளுவன். பிள்ளை சான்றோனாவது பெற்றோரிடமே உண்டு. அதற்குப் பெற்றோரிடம் மனத்தூய்மை அத்திவாரமாக அமையவேண்டும்.

## 31-12-1999 நள்ளிரவுக்குப் பின்.....

## கணனிகள் ஸ்தம்பிக்கும்!

டிசம்பர் 31.1999. நள்ளிரவு 12 மணி.

ஒருபுத்தாண்டை மட்டுமல்ல; ஒரு புதிய நூற்றாண்டையே வரவேற்கும் உற்சாகத்தில் உலகம் திளைத்திருக்கும் வேளை அது. ஆனால்...

கணனி உலகில் எல்லாமே தலைகீழாகிப்போக அக்கணத்தில் உலகெங்கும் பயன்படுத்தப்படும் கணனிகள் மனிதர்களின் வெறுப்புக்கும், கோபத்துக்கும் ஆளாகப் போகின்றன. அந்தக் கணத்தில் இருந்து எல்லாமே— ஏன் பாதி உலகமே—ஸ்தம்பித்துப்போய் விடப்போகிறது.

நாளாந்தம் கணனிகளுடன் பழகுபவர்களையும் கணனி மயப்படுத்தப்பட்ட எல்லா அமைப்புக்களையும் இப்போதே கவலை தொற்றிக்கொண்டு விட்டது.

இந்த கணனிக் கவலை எதனால் ஏற்பட்டது? ஏன் ஏற்பட்டது?—என்பது இன்னமும் கணனிகளையே கண்ணால் காணாத சமூகங்களுக்கு விளங்காமல் இருந்தால் அதில் வியப்பேதும் இல்லை. ஏனெனில் சதா கணனிகளிலேயே கையை வைத்துக் கொண்டிருக்கிறவர் கூட இந்தக் கவலையை விளங்கிக்கொள்ளவேயில்லை.

புதிய நூற்றாண்டில் மனித அறிவியல் முகம் கொடுக்கவுள்ள இந்த சவாலின் பெயர் 'வை 2K' (Y2K) இதனை 'Millennium Bug' என்றும் அழைக்கிறார்கள். இது ஒரு தலைவலி, சிக்கல் — கட்டிலில் இருக்கும் மூட்டைப் பூச்சிபோல.

"வை 2 கே" என்றால் என்ன?

சாதாரணமாக நாம் திகதியை 29-08-98 என்று தான் குறிப்பிடுவோம். இதில் கடைசி இரு இலக்கங்களான '98' என்பது 1998 என்பதையே குறிக்கும் என்பது அனைவருக்கும் தெரிந்ததே. மனிதர்களைப் போலவே கணனிகளும் வருடங்களை இவ்வாறே திகதியை 29-08-98 என்றே ஞாபகத்தில் வைத்துக்கொள்ளும். இங்கேதான் பிரச்சினையே இருக்கிறது.

31-12-1999க்கு மறுநாள் 01-01-2000 என்றுதான் நாம் எழுதுவோம். ஆனால் ஆண்டைக் குறிப்பிடும் போது கடைசி இரு இலக்கங்களைமட்டும் எழுதும் இலகுவான நடைமுறை இங்கே சிக்கலை ஏற்படுத்திவிட்டது. இதனால் உலகம் முழுவதும் கணனி மயப்படுத்தப்பட்டிருக்கும் முக்கிய தகவல்கள், கணக்கு வழக்குகள் அனைத்தும் 31-12-1999க்குப் பிறகு சிக்கலுக்கும் குழப்பத்துக்கும் உள்ளாகி மனிதர்களுக்கு தலையிடியைத் தரவுள்ளன.

முற்று முழுதாகக் கணனி மயப்படுத்தப்பட்ட தொழிற்றுறைகள், பொதுச்சேவைகள், அத்தியாவசிய பணிகளுடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கும் தேசங்களுக்கும் இது ஒரு நெருக்கடியை ஏற்படுத்துகிறது.

கணனிகள்...... ...அவற்றுக்கு இடப்பட்ட கட்டளைப்படி 01-01-2000 என்பதை 01-01-00 என்றே பதிவில் கொள்ளும்; கணனி மென்பொருளில் (Soft Ware) சேகரிக்கப்பட்ட ஏராளமான தகவல்கள் இவ்வாறே டிஸ்குகளில் பதிவு செய்யப்படுகின்றன. அதன்படி 01-01-00 எனக்கணனி குறிப்பிடுவது 01-01-1900 என்பதாகவே இருக்கும். அதாவது உலகம் இரண்டாயிரமாம் ஆண்டுக்குள் அடிஎடுத்துவைக்ககணனிகள் ஆயிரத்து 900ஆம் ஆண்டுக்குத் திரும்பிச் செல்லும்கணனிடிஸ்குகளில்ஆண்டுகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆனால் நூற்றாண்டுகள் தவறிவிடப்பட்டுவிட்டன.

அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில்மட்டுமன்றி இந்தியா போன்ற வளர்முக நாடுகளிலும் நாளாந்த நடவடிக்கைகளில் — உழைப்பில் — முயற்சியில் — கணனிகள் பெரும் பங்கு வகிக்கும் இக்கால கட்டத்தில் இப்படி ஒரு சிக்கல் எதிர்பார்க்கப்படாததுதான்.

கணனிகள் குழம்பினால் நளாந்த வாழ்க்கையே ஸ்தம்பித்துப்போகும் ஆபத்து மேற்கு நாடுகளில் உள்ளது.

உலகெங்கும்விமான—ரயில் போக்குவரத்துகள், வங்கி, 'இன்ஸ்சூரன்ஸ்' பணிகள், பங்குச் சந்தை, 'கிரடிட் காட்' கணக்குகள் (Credit Card Accounts), தொலைத்தொடர்பு அமைப்புகள், அத்தியாவசிய — அவசர — மருத்துவ சேவைகள், பாதுகாப்பு, செயற்கைக்கோள் தொடர்பு, அரசாங்க நிர்வாகம் எனப் பலதரப்பட்ட பணிகள்கணனி மயப்படுத்தப்பட்டிருக்கின்றன. 'வை 2கே' இந்த அமைப்புகளின் இயல்பான செயற்பாடுகளைக் குழப்பிவிடும்.

தனிப்பட்ட கணனிகளில் ஒருவர் பேணிவரும் பைல்களை இடைநடுவில் மூட வேண்டி வரும் (Shut-downs); இரண்டாயிரமாம் ஆண்டு முதலாம் திகதியன்று வங்கிக் கணக்கில் உள்ள சேமிப்பை அறிய விரும்பும் ஒருவர் ஏமாற நேரிடும்.

இந்த சிக்கல் தவிர்த்திருக்கக் கூடியதா?

பலரிடையே எழும் சந்தேகம் இது.

ஆம். தவிர்த்திருக்கக்கூடியதே. இது ஒரு தலைமுறை நிபுணர்களின் தவறு. மாபெரும் தவறு. அவர்கள் சற்றுநிதானமாகச் சிந்தித்திருந்தால் — நூற்றாண்டுகளை எண்ணிப் பார்த்திருந்தால்—இப்போதைய இந்தச் சிக்கலைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தவறு நிகழ்ந்துவிட்டது.

1950 களின் இறுதியில் கணனிகளில் ஏராளமான தகவல்களைச் சேமித்துவைக்கும் நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த நுட்பத்தை அறிமுகப்படுத்தி, செயற்படுத்திய நிபுணர்கள் தவிர்த்திருக்கவேண்டிய தவறு இது

'Hollerith Card" எனப்பட்ட செவ்வக வடிவ டிஸ்குகளில் தகவல்களைச் சேகரிப்பதே அப்போதைய தொழில்நுட்பமாக இருந்தது. சுமார் 75 எழுத்துக்களை, அல்லது எண்களை மட்டுமே சேமிக்க அந்த டிஸ்குகளில் இடம் இருந்தது. எனவே அவர்கள் தகவல்களைப் பதிவு செய்வதில் இயன்றளவு சிக்கனத்தைக் கடைப்பிடித்தார்கள் திகதியைக் குறிப்பிடும் போது 03-10-1969 என்பதை 3-10-69 எனக் குறிப்பிட்டு இரண்டு இலக்கங்களைக் குறைத்தனர். அதன் பின்னர் வந்த காலகட்டத்தில் நவீன தொழில்நுட்பங்கள் வளர்ந்தன. அதன்மூலம் ஏராளமான தகவல்களைச் சேமித்துவைக்கும் நவீன


**- நல்லூர் தாஸ் -**

கணனி சி. டிஸ்க்கள் உற்பத்தியாகி அவை மேலும் பல்கிப் பெருகிவிட்டன. ஆனால் இவற்றில் எல்லாம் ஆண்டைப் பொறுத்தவரை இரண்டு இலக்கத்தைக் குறிப்பிடும் முறை தொடர்ந்து வந்தது. நவீன டிஸ்குகளிலும் ஆண்டை முழுமையாகக் குறிப்பிடத் தவறினர். 1900 களில் சிக்கல் இருக்கவில்லை. ஆனால் 2,000 ஆம் ஆண்டு வரும்போது சிக்கல் ஏற்படும் என்பதை எண்ணிப்பார்க்க எல்லோருமே தவறிவிட்டனர்.

இப்போது இரண்டாயிரமாம் ஆண்டு நெருங்கிவிட்டது. இன்னும் 520 நாள்கள் மட்டுமே இருக்கையில் 'வை 2கே" சிக்கல் பூதாகாரமாகத் தெரிகிறது. முதலில் கவலைப்பட்ட கம்பியூட்டர் உலகம் பின்னர் உஷாரடைந்து மாற்று ஏற்பாடுகளைக் கண்டுபிடிப்பதில் தீவிர கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டது. பல நாடுகளும் அரசுகளும் கூட உஷாரடைந்து செயற்படத் தொடங்கிவிட்டன. எப்படியும் 'வை 2கே" சிக்கலை எதிர்கொண்டு சமாளிக்கத் திடசங்கற்பம் பூண்டுள்ளன.

இந்தச் சிக்கலால் பெரிதும் பாதிக்கப் படப்போவது வளர்ச்சியடைந்த நாடுகள்தான். ஏனெனில் அந் நாடுகளிலேயே சகல துறைப் பணிகளும் கணனிமயமாக்கப்பட்டுள்ளன. எனவே அந்நாடுகள் இது விடயத்தில் முழு உஷாராகவுள்ளன. எனினும்

(XI ஆம் பக்கம் பார்க்க)




டிசம்பர் 31. 1999 நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் உலகெங்கும் பாவனையில் உள்ள கணனிகள் சிக்கலுக்கும், குழப்பத்துக்கும் உட்படவுள்ளன. புதிய நூற்றாண்டை வரவேற்கும் வரலாற்று சிறப்பு மிக்க தருணத்தில் கம்பியூட்டர்... உலகில் ஒரு கவலை...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதைகுழி விவகாரத்தை முற்றாக புதைத்துவிடவா இந்தத் தாமதம்?

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தைக் கணிசமான குடும்பங்களுக்கு நிறுத்துவது என்ற திட்டம் குடாநாட்டில் நடைமுறைக்கு வந்துவிட்டது. இந்தத் திட்டம் என்ன அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பது குறித்து உத்தியோகபூர்வமான அறிவிப்பு எதுவும் பகிரங்கமாக அரச சார்பில் இதுவரை வெளியிடப்படவில்லை.

அரசாங்க அதிபர்—பிரதேச செயலாளர்—கிராம சேவையாளர் மட்டத்திற்கு உள்ளேயான மூடுமந்திரமாகவே நிவாரண நிறுத்த விதிமுறை உள்ளது. ஒரே பிரதேச செயலர் பகுதிக்குள் அடங்கும் கிராமசேவையாளர் பிரிவுக்கு பிரிவு வெவ்வேறு அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாக மக்கள் முறைப்படுகிறார்கள்.

நிவாரணம் பெறுவோரின் எண்ணிக்கையைக் குறைப்பதென அரசாங்கம் எடுத்த முடிவே தமிழ் மக்களுக்குப் பெரும் பாதிப்பை உண்டாக்கி இருக்க—

உள்ளூர் அதிகாரிகளின் அளவுகோல்கள் கோணியதால் பொதுமக்கள் திட்டித் தொலைப்பதனைத் தவிர எதுவும்செய்யமுடியவில்லை.

நிவாரண நிறுத்தம் தொடர்பாகப் பொதுவான விதிமுறைகள், வழிகாட்டுதல்கள் மக்களுக்குப் பகிரங்கப்படுத்தப்பட்டிருப்பின் பிழை, பாரபட்சம், செல்வாக்கு, மோசடி நடந்திருப்பதை அவர்களால் வகுத்துப் பகுத்து அறிய முடியும். ஆனால் அவை மக்களுக்குத் தெரியப்படுத்தப்படாத இரகசியங்களாக இருப்பதால் யாரிடம் போய் முறையிடுவது என்று தெரியாமல் விழிக்கிறார்கள்.

அரசாங்கமோ, அதிகாரிகளோ ஒரு திட்டத்தைத் தாம் விரும்பியது போல, எதேச்சாதிகாரமாக நிறைவேற்றுவதற்கு மக்களுக்கு விளக்கம் கொடுக்காமல், விதிமுறைகளைப் பகிரங்கப்படுத்தாமல் மூடு மந்திரமாக வைத்திருப்பதை விடச் சிறந்த முறை வேறு எதுவுமாக இருக்க முடியாது!

ஆனால் ஜனநாயக ஆட்சி முறை உள்ள ஒரு நாட்டில் இது எவ்வாறு பொருந்தும்? இதுவே பொதுவிதி என்றால் இந்தப் பிரதேசத்தில் ஜனநாயகம் ஆட்சி செய்வதாகக் கூறமுடியாது. ஒரு சிலரின் எதேச்சாதிகாரம் ஆட்சி செய்கிறது என்பதே அர்த்தம்.

மக்களுக்குத் தெரியக்கூடிய, ஒளிவு மறைவில்லாத நிர்வாகத்தையே நடத்துவதாக, நடத்த விரும்புவதாகக் கூறும் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியில், இத்தகைய மூடிமறைக்கும் போக்குக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிவாரணக் குறைப்புக்குப் பயன்படுத்தப்பட்ட அளவுகோல் எது? விதிமுறைகள் என்ன? என்பதை இனியாவது அரசாங்க அதிபர் ஒரு பகிரங்கப் பத்திரிகை அறிக்கை மூலம் வெளிப்படுத்த வேண்டும். இன்னும் காலம் பிந்தவில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிவாரணக் குறைப்புத் திட்டம் வாபஸ் பெறப்படும் என்று ஜனாதிபதி வாக்குறுதி அளித்து விட்டாரே, அதன் பின்னர் திட்ட விதிமுறைகள், அளவுகோல்களை வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்பது பயனற்றது என்று அரச அதிகாரிகள் தள்ளலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நடைமுறைக்கு வந்துள்ள நிவாரணக் குறைப்பு வாபஸ் பெறப்படும் என்று ஜனாதிபதி, ஈழமக்கள் ஜனநாயக முன்னணியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவிடம் வாக்குறுதி அளித்திருப்பது உண்மைதான். ஆனால் அவரின் வாக்குறுதி செயல் வடிவம் பெறுமா, அல்லது வெறும் உத்தரவாதமாகவே காற்றோடு காற்றாகக் கலந்து விடுமா என்பதில் தமிழ் மக்களுக்குப் பெரும் சந்தேகம் உள்ளது.

இதற்கு முன்னர் பல தடவைகள், பல விடயங்களில் தமிழர்களின் குறைகளைத் தீர்ப்பதாக அளித்த வாக்குறுதிகள் வெறும் வாக்குறுதிகளாகவே உள்ளன. குடாநாட்டில் காணாமற் போன இளைஞர், யுவதிகளின் நிலையைக் கண்டறியப் பெற்றோர்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய விசாரணைக் குழுவை நியமித்து, ஆறு மாத காலத்திற்குள் உண்மை நிலையை அறியவகை செய்வதாக ஜனாதிபதி தம்மைச் சந்தித்த பெற்றோர்களிடம் கூறியிருந்தார். அந்த வாக்குறுதி என்னாயிற்று? மறந்த கதையாகி விட்டது. அதே போன்று

முயற்சி இது: யாழ்ப்பாண மக்களை அல்லது தமக்குப் பின்னால் நிற்கும் தமிழ்க் கட்சிகளைத் திருப்திப்படுத்தி விட்டால் போதும் என்ற எண்ணத்துடனேயே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்றவர்களும் சரி, வன்னி வாழ்மக்களும் சரி அவர்கள் தமிழர்களே; யாழ்ப்பாண மக்களின் உறவினர்களே; இரத்த உறவினர்களே; சகோதரர்களே; உடன் பிறப்புக்களே.

அவர்களை வஞ்சித்து யாழ்ப்பாணத்தவருக்குச் சலுகை செய்யமுயற்சிப்பது, அந்தச் சலுகையை ஏற்றுக் கொள்வது ஆகிய இரண்டுமே அடிப்படையில் வெறுக்கத்தக்க செயல்களாகும். இவற்றை வெறும் அரசியல் ''ஸ்ரண்டு''களாக நடத்திக் காட்ட முயலக்கூடாது.

வன்னிப்பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளது; அங்கு அனுப்பப்படும் பொருள்களில் ஒரு பகுதி அவர்களுக்கும் போய்ச் சேருகிறது. ஆதனால் அங்கு நிவாரணக் குறைப்பு அவசியம்; அதனை வாபஸ்பெறமுடியாது என்று அரசாங்கத்தரப்புக் கூறலாம்.

செய்து புதைக்கப்பட்ட அதே செம்மணிப் பகுதியில்—

இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட 300 தொடக்கம் 400 வரையான குடாநாட்டு இளைஞர், யுவதிகளின் சடலங்களும் புதைக்கப்பட்டுள்ளன என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகி 58 நாள்கள் கழிந்தோடி விட்டன!

ஆனால் அந்தப் புதைகுழிகளைத் தோண்டி, எத்தனை பேர் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர், அவ்வாறு புதைக்கப்பட்டவர்கள், யார் யார் பெற்றெடுத்துப் பொன்னெனப் போற்றி, தாலாட்டிச் சீராட்டி வளர்த்த பிள்ளைகள் என்று அறிவதற்கு அகரம் தானும் இன்னும் எழுதப்படவில்லை.

இந்த விவகாரத்தில் அரசு ஆமை வேகத்தில் நகர்வது குறித்து இப்பத்தியில் இரண்டு மூன்று தடவைகளுக்கு மேல் சுட்டிக் காட்டி விட்டோம். ஆனால் விவகாரம் விசையாகச் செய்வதற்கான எந்த அறிகுறியும் இன்னும் இல்லை.

விரைவாகச் செய்ய வேண்டிய புதைகுழிகளைத் தோண்டும் வேலைக்குப் பதிலாக அதனைத் தடுத்து விடும்

அரசு அக்கறையாக உள்ளதா என்ற சந்தேகமும் எழுகிறது.

அவ்வாறு அரசு நேர்மையாக நடந்து கொள்ள நினைத்தாலும், குற்றம் இழைத்தவர் தரப்பு தடுக்கவே தன்னாலான சகல முயற்சிகளையும் சூழ்ச்சிகளையும் கட்டவிழ்ந்து விடும் என்று நூறு சதவீதம் எதிர்பார்க்கலாம்.

ஆகையால் புதைகுழி தோண்டும் விவகாரத்தை இனியும் இழுத்தடிக்கக் கூடாது. அடுத்த மாத மத்தியில் குடாநாட்டில் மழை காலம் ஆரம்பமாகி விடும். ஆகையால் புதைகுழிகளைத் தோண்டும் வேலைகள் இன்னும் இரண்டொரு தினங்களில் ஆரம்பிக்கப்படாவிடில் எல்லாம் வெறும் பம்மாத்தாகவே முடியும்!

சோமரத்ன ராஜபக்சவைக் கூட்டிக் கொண்டு வந்து புதைகுழிகள் உள்ள இடங்களை முதலில் காண்பிக்கச் செய்ய வேண்டும்; அதன் பின்னர் புதைகுழிகளைத் தோண்டுவதற்கு நிபுணர்களை அழைத்துக் கொண்டு வர வேண்டும்; புதைகுழிகளைத் தோண்ட ஆரம்பிக்க வேண்டும்; அந்த வேலையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

இந்த நிரலில் பணிகளைத் தொடங்கிச் செய்யவே பல நாள்கள் பிடிக்கும். அப்போது மழை தொடங்கினால் எல்லாவற்றையும் தொப்பெனப் போட்டு, இயற்கை மீது பழியைப்போட்டு காலத்தைக் கடத்துவதற்காகவும் இவ்விவகாரத்தில் வேண்டுமென்றே இப்போது தாமதம் செய்யப்படலாம் அல்லவா?

## தமிழ்க்கட்சிகள் அரசுக்கு துணைபோவதாக தமிழர் மத்தியில் எழுந்துள்ள சந்தேகம்

நிவாரணக் குறைப்பு வாபஸ் வாக்குறுதியும், ஏன் வெறும் வாய் மொழியாகவே இருக்க முடியாது?

சரி, அவரது வாக்குறுதி உத்தரவாக மாறி, நடைமுறைக்கு வருவதாயினும் மாதங்கள் சில செல்லுமே; நிவாரணக்குறைப்புக்குறித்து முடிவு செய்யப்பட்டது ஜூன் மாத மத்தியில்; ஜூலையில் நடைமுறைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் புதிய திட்டத்தின்கீழ் கடந்த வாரமே உலர்உணவு நிவாரணம் வழங்குவது ஆரம்பமாகியது.

எனவே இது விவகாரத்தில் ஜனாதிபதி மறதி இல்லாமல் உடனடியாகச் செயற்

### உள்ளும் புறமும்

குருமணி

பட்டாலும் ''பழையவர்களுக்கு'' மீண்டும் நிவாரணம் கைக்கு வர இன்னும்இரண்டு வாரங்களுக்கு மேல் செல்லும்! திட்டம் வாபஸாகிறதோ இல்லையோ நிவாரணக் குறைப்பின் அளவுகோல் எது என்பதனை மக்களுக்கு அரச அதிகாரிகள் தெரியப்படுத்தவேண்டும்.

அரசியல்வாதிகளைப் பின்பற்றி அரச அதிகாரிகளும், தமிழ்ப் பகுதிகளில் பணிபுரியும் அரச அதிகாரிகளும் மக்களுடன் ஒளித்துப் பிடித்து விளையாட முனையக் கூடாது.

### அரசியல் ஸ்ரண்ட் வேண்டாம்

இடம்பெயர்ந்தோர் நிவாரணக் குறைப்பு யாழ்ப்பாண மாவட்டத்தில் வாபஸ் பெறப்படும் என்றும் வன்னியில் தொடரும் என்று ஜனாதிபதி வாக்குறுதி அளித்திருப்பது ஏற்புடையதல்ல; வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

தமிழ்மக்களை பிரித்துக் காட்டி அவர்களிடையே பேதங்களை உருவாக்கும்

நிச்சயமாக அது அரசின் இயலாத் தன்மையையே வெளிக்காட்டும். இயலாமையும் தவறும் தன்பக்கத்தில் இருக்க, அப்பாவிப் பொது மக்களை அரசு தண்டிக்கிறது.

அதுவும், வன்னி வாழ் மக்களின் நிலை, எழுத்தில் வடித்தால் பேனாவும் மைக்கும் பதிலாகக் கண்ணீரையே சிந்தும் என்ற வாழ்வின் அழிவு எல்லைக்கே தள்ளப்பட்டு, வரக்தியும், நிர்க்கதியும் நிறைந்து, நடைப்பிணங்களாக வாழும் பரிதாபகரமானதாகிவிட்டது. அரசு அவர்களைத் தண்டிக்க முயல்வது பெரும் அபத்தமானதாகும்.

ஆகையால் தமிழ்க் கட்சிகள் நிவாரணக் குறைப்புக்கு எதிரான தமது அழுத்தங்களையும், போராட்டங்களையும் கைவிடக்கூடாது; சோர்ந்துவிடத்தானும் ஆகாது.

ஒரு காலத்தில் தமிழ் மக்களைப் பிரித்து வைத்துப் பேதம் காட்டியே சிங்களத் தலைவர்கள் ஆட்சி நடத்தினார்கள். தந்தை செல்வாவின் காலத்தில் பேதங்களுக்கும், பிளவுகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டு ஈழத் தமிழர்கள் ஒன்றிணைந்தார்கள்; ஒரே குடும்பம் என்ற உணர்வு பிறந்தது.

அந்த நிலையை உடைத்தெறிய முனையும் சிங்களத் தலைவர்களுடன் ஒத்தூதும் தமிழ் அரசியல்வாதிகள் மக்கள் ஆதரவை இழந்து திக்கற்று, அரசியல் சூனியத்தால் மூழ்கடிக்கப்படுவர் என்பதனை மறந்துவிடக் கூடாது. அதனை மனதில் இருத்தித் தமது அரசியலை மக்கள் சக்திக்கு ஆட்படுத்த வேண்டும். எச்சரிக்கையாக நடந்து கொள்வது எப்போதும் நல்லது.

செம்மணிப் புதைகுழி விவகாரமும் அடுப்பில் இருந்து நெருப்புக்குள் விழுந்த கதையாக மாறியிருக்கிறது!

கிருஷாந்தி குமாரசாமி என்ற மாணவியும், அவரின் [illegible] ஆகியோரும் கொலை

சூழ்ச்சிகளே தலையெடுத்துள்ளன. செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டி இராணுவ அட்டூழியத்தை வெளிக்கொணர்வதில் மிக மிக முக்கிய பங்கு வகிக்கும், இராணுவச் சிப்பாய் சோமரத்ன ராஜபக்சசிறைச்சாலை அதிகாரிகளால் தாக்கப்பட்டிருக்கிறார். இது புதைகுழி விவகாரத்தையே புதைத்து விடும் சூழ்ச்சி.

ராஜபக்ச தாக்கப்பட்ட சம்பவம் முழு விவகாரத்தையும் அழிப்பதற்கான முயற்சியாக இருக்கும் என்று உதயனில் சந்தேகம் தெரிவித்திருந்தோம். அது உண்மையே என்பது அடுத்த நாளே வெளிச்சமாகியது.

செம்மணியில் புதைகுழி எதுவும் இல்லை என்றும், மரணதண்டனை கிடைத்ததால் பாதிக்கப்பட்ட மனநிலையில் இருந்த வேளையே புதைகுழிகள் இருப்பதாகப் பொய் கூறியதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் பெறும் பொருட்டே — கடிதத்தில் கையொப்பம் இடுமாறு வற்புறுத்தியே — சோமரத்ன ராஜபக்சவை சிறைச்சாலை அதிகாரி ஒருவரும் காவலர்கள் மூவரும் சேர்ந்து தாக்கியுள்ளனர்.

அவ்வாறு செய்துவிட்டு, ராஜபக்ச கடிதம் ஒன்றை விழுங்க முயற்சித்தார் என்றும் அதனைப் பறிக்க முயன்ற போதே சிறு காயமுற்றார் என்றும் முழுப் பூசனியையும் சோற்றில் புதைக்க முயன்றது அரசு!

இராணுவ அக்கிரமத்தை வெளிக் கொண்டுவரக்கூடிய புதைகுழி விவகாரத்தை முற்றாக விழுங்கி விடுவதற்காக, ராஜபக்ச பழிவாங்கப்படலாம்; ஏன் பலியும் வாங்கப்படலாம் என்ற சந்தேகம் மக்களிடம் வலுத்திருந்தது.

அந்தச் சந்தேகம் சரியானதே என்பதை சோமரத்ன ராஜபக்ஷ தாக்கப்பட்ட சம்பவம் மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

செம்மணி புதைகுழி விவகாரத்தில் நேர்மையாக நடந்து கொண்டு, உண்மையை வெளிப்படுத்துவதில்

இந்தத் தாமதத்தைத்தவிர்க்குமாறு அரசைத் தட்டிக் கேட்பதற்கு தமிழ்க்கட்சிகள் தயங்குவது ஏன்? ஏதோ நடைபெறும் போது பார்த்துக் கொள்வோம் என்ற இக் கட்சிகளின் போக்கு, புதைகுழிகளைத் தோண்டுவதை தாமதிக்கும் அரசின் செயலுக்கு இவையும் துணை போகின்றனவா என்று மக்களிடம் எழுந்துள்ள ஐயத்தை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது.

புதைகுழிகள் விடயத்தில் தாம் அரசுக்குத் துணை போகவில்லை. என்று மக்களுக்கு ஐயந்திரிபற செயலில் காட்ட வேண்டிய தேவை தமிழ் அரசியல் கட்சிகளுக்கு ஏற்பட்டுள்ளது. புதைகுழிகளைத் தோண்டுவதை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்று மக்கள் எழுச்சிப் போராட்டங்களை நடத்த வேண்டும். அதனையும் விட அவசரகாலச் சட்ட நீடிப்புக்கு எதிராக வாக்களித்து அரசை ஆட்டங்காணச் செய்து நெருக்கடியைக் கொடுக்கலாம்.

தமிழ்க்கட்சிகள் அவ்வாறு செய்யத் தயங்கினால், இது விவகாரத்தில் தாமதம் செய்து, இராணுவக்கொடுமையை மறைக்கும் அரசின் முயற்சிக்கு தாம் துணை போகவில்லை என்று அவை அடித்துச் சொன்னாலும் மக்கள் நம்பப்போவதில்லை. தமிழ்மக்களுக்கு— தமக்கு — இக்கட்சிகள் பெரும் துரோகம் செய்வதாகவே அவர்கள் உணர்வார்கள்!

செம்மணியின் பூகர்ப்பத் தன்மைகள் தமிழ்க்கட்சிப் பிரமுகர்களுக்கே அரசாங்கத்தில் உள்ளவர்களைவிட நன்கு தெரியும். தாமதிக்கப்படும் ஒவ்வொரு நாளும் தமிழ் இளைஞர் யுவதிகள் கொலை செய்யப்பட்டதை மறைத்து வரும் முயற்சிக்கான வெற்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# கிழப்பருவத்தினரின் இழப்புணர்வும்

முதுமையும் தளர்ச்சியும்

தளர்ச்சிப் பருவத்தை அடுத்து வருவது கிழப்பருவம். இவர்கள் அனேகமாக 65 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருப்பர்.

நவீனவிஞ்ஞான மருத்துவத் துறையில் ஏற்பட்டு வரும் உடல் நலம் பேணும் மாற்றத்தினால் இவர்களின் தொகை அதிகரித்துக் கொண்டே வருகிறது. அன்றியும் இவர்களைப் பராமரிப்பதும் பாதுகாப்பதும் பெரும் பிரச்சினையாகவும் உள்ளது.

இவர்களை —

குடும்பப் பிரிவுகள் இல்லாமல்



தலைவன் — தலைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகளோடு ஒன்றாக இருந்து வாழ்பவர்கள்; தலைவனைப் பிரிந்து தலைவி மட்டும் பிள்ளைகள் பேரப்பிள்ளைகளோடு வாழ்பவர்; தலைவியைப்பிரிந்து அவ்வாறு வாழ்பவர்; பிள்ளைகளே பிறக்காமல் உற்றார், உறவினரின் தயவில் வாழ்பவர்கள்; எவருமே இல்லாமல் முதியோர் பராமரிப்பு நிலையங்களில் வாழ்பவர்கள்; சொத்துச் சுகங்கள் எல்லாவற்றையும் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு ஏதிலிகளாக வாழ்பவர்கள்; ஒய்வூதியத்தில் வாழ்க்



கையை ஓட்டுபவர்கள் — என பலவாறு பிரித்துப் பார்க்கலாம்.

இவர்கள் ஊசாட்டமில்லாதவர்கள் என்றே கருதப்படுகின்றனர். எனினும் மிகச்சிலர் உறுதியும் உற்சாகமும், தனித்துவமும் உள்ளவர்களாகப் பலதுறைகளிலும் வீற்றிருக்கிறார்கள். இவர்களுடைய பட்டறிவுகளும், ஆளுமை விருத்திப் பண்புகளும் சமுதாயத்திற்குப் பெரிதும் பயன்படுவதையும் காணலாம். இத்தகையோரில் உலகமேதாவிகளாகவும், இலக்கிய பிரமாக்களாகவும் பலர் இருந்தார்கள்; இப்போதும் இருக்கிறார்கள்;

''ஊருணி நீர் நிறைந் தற்றே
உலகுஅவாம்
பேரறி வாளன் திரு''

என்று வள்ளுவர் கூறுவது போல, உலக நன்னடையை விரும்பிச் செய்யும் பெரிய அறிவினை உடையவர்களுடைவம், ஊர்வாழ்வார் விரும்பி நன்னீர் பருகும் ஊற்று நிறைந்தாற் போன்று எல்லோருக்கும் பயன்படும். அதே போன்று தம்குறை தீராது தளர்ந்து பிறர்க்குறும் வெங்குறை தீர்க்கும் விழுமியோர்களாக இவர்கள் விளங்குகின்றனர்.

வாழ்வின் நிலையாமை உணர்வு

கிழப்பருவத்தினரிடையே வாழ்வின் நிலையாமை உணர்வு தோன்று

கின்றது. எல்லோரும் வெறுத்து ஒதுக்கிவிட்டாலும் கூட இந்த உணர்வே மேலோங்கி நிற்கின்றது. ''ஊரும் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற பேரும் சதமல்ல, பெண்டிர் சதமல்ல, பிள்ளைகளும் சதமல்ல'' என்றும் —

> மனித வாழ்வில் பல்வேறு வளர்ச்சிநிலைப் பருவத்திலும் மனிதப் பண்பியல்புகளை — நல்லது கெட்டதை — தனக்கே உரிய பாணியில் தொடராக விளக்கி வருகின்றார் இக்கட்டுரையாளர். அக் கட்டுரைத் தொடரில் —ஏழாவது—இறுதி அத்தியாயம் இது.

''விட்டு விடப் போகுதுயிர், விட்டவுடனே உடலைச் சுட்டுவிடப் போகின்றார் சுற்றத்தார்'' என்றும் —

''ஆடியடங்கும் வாழ்க்கையடா ஆறடி நிலமே சொந்தமடா'' என்றும் —

ஒரு ''சுடலை ஞானம்'' வரப் பெற்றவர்களாகக் காணப்படுவர். ''ஆடித்திருந்து நான் கற்றதும் கேட்டதும் அவலமாய்ப் போதல் நன்றோ?'' என்று ஒரு மெய்யடியார் கூட ஆதங்கப்படுகின்றார் என்றால் கிழப்பருவத்தினரின் மன நிலையைச் சொல்லியா தெரிய வேண்டும்?

பதும், சுகிப்பதும்தான் கைகண்ட பலனோ என்று ஐயுறவும் செய்கின்றார். ஒருசோக உணர்ச்சியே இவரது பாடல்களில் அடிநாதமாக அமைந்துள்ளது. இச்சோக உணர்ச்சி இவருடைய பாடல்களைப் படிப்போருள்ளத்தில் எழுந்து நின்று நிலை பெறச் செய்யவல்லது எனினும், ஒரு பகுதி அறிஞர்கள், இச்சோக உணர்ச்சியில் ஈடுபடாது, ஒன்றிலும் நம்பிக்கை அற்றவன் இகழ்ந்து நகையாடும் அடங்காச் சிரிப்பொலியையும் மதுஇன்பம், மங்கையரின்பம், மதுரமான பாட்டின்பம் இவற்றை வற்புறுத்தும் உபதேச ஒலிகளையும்

நா. க. சண்முகநாதபிள்ளை

இவர் பாடல்களில் கண்டனர். பொதுவுடைமைவாதிகள், பகுத்தறிவு வாதிகளும் இப்படியே கண்டனர்.

ஆனாலும் ஆன்மாக்கள் துடிதுடித்து வருந்தும் துன்பநிலை இவரின் கவிதைகளிலே ஆங்காங்கே காணப்படுவதும் உண்மையேயாகும். உதாரணமாக —

''வந்த வந்த மனிதரெல்லாம்
வளைவும் நெளிவும் கண்டு
என்னைச்
சந்தமில்லாப் பானையெனத்
தள்ளிவைத்துச் சென்றனராகி
அந்த நாள் அக் குயவன்கை
ஆட்டத்தாலே நேர்ந்தபிழைக்கு
இந்த நாளில் ஏழைஎனை
ஏனோ குறைகள் கூடுவரே!

நன்மையும் தீமையும் ஒருங்கு வாழும் இடமாக எம்மைப் படைத்து விட்டு, நாம் செய்யும் தீமைகளுக்கு எம்மை இறைவன் தண்டிப்பது நீதி

பாதம் போற்றி வாழ்வாயே!''

எனவே கிழப்பருவத்தினர் உற்றார், உறவினரோடு உராய்ந்து காலத்தைப் போக்கிடாமல் கடவுள் நம்பிக்கையோடுவாழ்தல்பயன்தரும்.

ஏனையோருக்கும் இதோ ஓர் எச்சரிக்கை; கிழப் பருவத்தினரின்



சாபத்திற்கு நீங்கள் ஆளாகாதீர்கள்; இயன்றளவு அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருங்கள்; அவர்களின் நல்லாசிகளைப் பெற்றுய்யுங்கள்;

கூனியின் முதுகு வளைந்திருக்கின்றது என்று எண்ணி சிறு வயதில் இராமன் அவளின் முதுகில் அம்பு விட்டு வேடிக்கை பார்த்தான்.

# மரணத்தைப் பற்றிய விழிப்புணர்வும்

என்றாலும் பூரணமாக ''உள்ளத்தால் பொய்யாது ஒழுகி, உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இருக்கும்'' ஒருவர்—கடந்த கால வாழ்வை மீளவும் வாழ்வதற்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால் அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில் இருப்பாரேயானால் — அவரே வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவராவர். இவர் போன்ற கிழப்பருவத்தினர் திருப்தியுடன் மரணத்தை ஏற்கத் தயாராகின்றனர்; ஏனெனில் இவர்கள் ''தெய்வத்துள் வைக்கப் படுவர்.''

உமார் சய்யாம் தத்துவம்

உமார் சய்யாம் என்ற பாரசிகக் கவிஞர் வாழ்க்கை நிலையாமையைப்பற்றிப் பாரசிக மொழியிலே அருமையான பாடல்களைப் பாடியுள்ளார். இவருடைய பாடல்களை கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் தமிழில் அருமையாக மொழி பெயர்த்துள்ளார். உமார் சய்யாம் மக்களுடைய இம்மை — மறுமை முதலிய பொருள்களை ஆழ்ந்து சிந்தித்து அற்புதமான பாடல்களை இயற்றினார். இவர் சிந்தித்துக் கண்ட முடிவு இன்ப உணர்ச்சிகளை விளைவிக்கத்தக்க



தன்று. இவர் பாடல்களிலே வாழ்வு முடிந்த பின் மறுமையைக் குறித்து யாதொன்றும் உறுதியாகக் கூற முடியாது என்ற கொள்கை தொனித்துக் கொண்டிருக்கும். இவ்வுலகில் உண்பதும்...

யாகுமா என்று கவிஞர் கேட்கின்றார். வாழ்வின் இரகசியங்களை ஆழ்ந்து நெடுங்காலம் சிந்தித்த கவிஞர் இன்பதுன்பங்களைப் பின்வருமாறு கூறுகின்றார்.

''ஊனா குடலம் இதுவீழின்
உண்டாகு வாழ்வின் நிலைபற்றி
ஆனா ஆசை மிகவே என்
ஆன்மா வினைநான் வேண்டி
நின்றேன்
நானா உலகம் நெடுநாளாய்
நாடி யலைந்து வந்ததுதான்
'யானே சொர்க்கம் நரகமெலாம்'
என்றே கூறி நின்றதுவே.''

துன்பம் வருதல் இயல்பு என்பதையும் அதனைத் தடுத்தல் இயலாது என்பதையும் பின்வரும் செய்யுள் உணர்த்துகின்றது.

''எழுதிச் சொல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற் செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கியொரு
வார்த்தை மாற்றம் செய்திடுமோ?
அழுத கண்ணீர் ஆறெல்லாம்
அதிலோர் எழுத்தைமாற்றிடுமோ?''

ஆன்மீக உணர்வு

வாழ்வு பற்றிய இவரின் கொள்கை நம்மனத்தைக் கவர்ந்தாலும் மிக அபாயகரமாகவும் உள்ளது. தனக்குரிய பொறுப்பை உணராத வகையில் இது மனிதனை வழிநடத்துகின்றது. மனிதன் செய்யக் கூடியது ஒன்றுண்டு. கிழப்பருவத்திலும் மனத்திட்பத்தோடு இருக்கவேண்டும். வரப்போகும் மறுமை வாழ்வில் எதுதான் உள்ளதென அறிய அவன் தைரியத்தோடு செல்ல வேண்டும். 'யானே தும் பிறப்பஞ்சேன் சாவதற்கு என் கடவேன்'' என்றும் ''தந்தது உன் தன்னை; கொண்டது என்தன்னை'' என்றும் இறை அனுபவத்தில் திளைக்கவேண்டும். இவ்வாறு செய்வது எம்முன்னே உள்ள தெய்வத் தன்மையை வெளிக்கொணர்வதாகும்.

உமார் சய்யாமின் பாடல்கள் மயக்கம் தருவதாயினும் பின்வரும் ஒரு பாடல் தெய்வ நம்பிக்கையை ஊட்டுகிறது.

''வீடும் பழவீ டாகுதடா!
விட்டம் கூரை சுவரெல்லாம்
ஆடி அசைந்து விழுநாளும்
அண்டி அண்டி வருகுதடா!
நாடி இதனை இன்றும் நீ
நம்பி மோசம் போகாமல்
பாடிப் பாடி எம்பெருமான்

ஆனால் அவளின் சாபம் பிற்காலத்தில் அவனைக் காட்டிற்கு அனுப்பியது. விளையாட்டு வினையாக முடிந்தது.

பல கிழப் பருவத்தினர் வீட்டில் பொறுப்புள்ள மெய்ப்பாதுகாவலர்களாக இருந்து பிள்ளைகளையும், பேரப்பிள்ளைகளையும் பாதுகாத்தும் தமது அனுபவ முதிர்வால் அவர்களை நெறிப்படுத்தியும் — வருவது நாம் அறிந்ததே. பாட்டி பாட்டன் என்றால் பேரப்பிள்ளைகளுக்குக் கொள்ளை ஆசைதானே. ''மாமியார் மெச்சிய மருமகளாயிருப்பதில் தான்'' சங்கடங்கள் ஏற்படுகின்றன. ''மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன்குடம்'' என்ற முதுமொழியும் உண்டுதானே! விட்டுக் கொடுத்து ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் வாழப் பழகிக் கொள்ளவேண்டும்.

கிழப்பருவத்தினர் இரண்டாவது குழந்தைப் பருவத்தில் வாழ்பவர்கள். எமமை முன்நாளில் ''வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள் மேலும் கட்டி வளர்த்தெடுத்தவர்கள்'' அவர்கள். பாவம்! பெற்ற பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் பித்தானால் என்னசெய்வார்கள்?

ஆகவே ''நல்லநல்ல பிள்ளைகளை நம்பிவாழ்ந்தவர்களை'' பாதுகாப்போமாக!

''நல்ல குருநாதன் நம்மை வாட்டுவது
கொல்ல வல்லக் கொல்ல வல்லக்
கொடுப்பதற்கே.''

★

## கோப்பியின் கதை

எதிர்பாராமல் சில பொருள்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. அவற்றில் கோப்பியும் ஒன்று.

அரபு நாட்டில் காலிடி என்ற முஸ்லிம் இளைஞன் வளர்த்து வந்த ஆடுகள் ஒருநாள் ஒரு செடியில் காணப்பட்ட சிவப்பு நிற விதைகளை தின்று விட்டன. சிறிது நேரத்தில் அவை உற்சாகம் அடைந்ததை அந்த இளைஞன் அவதானித்தான்.

உடனே அந்த இளைஞன் விதைகளைப் பறித்துத் தனது குருவிடம் கொடுத்தான். குரு அதனை அவித்து சாற்றை மாணவர்களுக்கு கொடுக்க அவர்களும் உற்சாகம் அடைந்தனர்.

காலப்போக்கில் இது கோப்பி என்ற பெயரைப் பெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுமை நினைவுகள்...

பசுமையான நினைவுகளை
மீட்டும் போது
மனதால் சிறியவனாய்
மாறுகின்றேன்...
அவை மீளாத நினைவுகள் தான்...
பள்ளிப் பருவமது
மென்மையான இன்பமெல்லாம்
சுமந்து நின்ற காலமது...
எப்படித்தான் மறந்திடலாம்
பொன்னான காலமதை...?
திமிராக நடை நடந்துவரும்
வகுப்பு நங்கையரை
அடக்கியாண்ட காலமது
சப்பிய பபிள்க்கம் எல்லாம்
இருக்கைகளிலிருந்து அவர்
ஆடைவரை இழுத்து நிற்கும்
எழுந்து நின்றால்...
கொட்டிய கோன்களின் காரணமாய்
குட்டிய ஆசிரிய கரங்களின்
வேதனைகள் நம் தலைகளை
விறைக்க வைக்கும்...
நால்வராய் ஐவராய்
சுமந்து செல்லும் கார்களெல்லாம்
அப்போ எமக்குத் துச்சமல்லோ...!
''றலி'' சைக்கிளுண்டு
அந்தப் பாரம் சுமந்து நிற்க;
கால் பந்து ஆடவென்று
மைதானம் செல்வதுண்டு.
அது விளையாட்டிற்கென்று
ஒதுக்கப்பட்ட நேரமல்ல;
ரீயூசனில் மீற்றர் போடும் நேரம்,
கோல் கம்பம் பின்னாலே
காற்று வாங்கும் பாடப்புத்தகங்களை
விளையாட்டு குசியாலே
மாடுகள் தின்று முடிக்கும்.
வெறுங்கையாய் வீடு சென்று
முழங்கையால் அப்பரிடம் குத்து வாங்கி
அம்மாவிடம் ஒத்தணம் வாங்கியதை
நினைக்கையிலே புன்னகை பூக்கிறது...
வீதிகளில் எழுந்து நிற்கும்
நாற்பதடி கட் அவுட் எல்லாம்
ரியூட்டரி கொட்டகையில் நம்மை
அவுட்டாக்கிய பொன்னான காலமது...
திரைப்படக் கொட்டகைகள்
எமக்கு புகலிடம் தந்ததாலே
காதல் பாடம் கற்றுக் கொண்டோம்...
ஒளிவிளக்குப் பார்த்த போது
விளக்கு ஒளி அணைய
கையில் ஒளிக்குச்சி மின்னும்
பக்கத்து இருக்கையிலே
சித்தப்பாவிடம் நெருப்பு
வாங்கிப் புகைவிட்ட
நீரும் நெருப்பும் திரைப்படத்தை
நினைத்தாலே புல்லரிக்கும்...
அன்று! கண்ணீர் விட்ட
கதைகளெல்லாம் இன்று!
சிரிப்பாலே கண்ணீர் விடும் கதைகள்...
எம்ஜி ஆரு சிவாஜியென்று
இன்பமாய் கன்னைகளைப்
பிரித்து நின்றோம்.
கல்லூரி விட்டகன்ற
நாளெதுவோ அன்றிலிருந்து
இன்றுவரை இன்பமில்லை...
பிரிவு அதனால் துன்பம் ஒன்றே!

— ச. தியானேஸ்வர சர்மா —

## ஆதிக்கத்தின் அ(சி)ங்கம்

உலக மந்திரியை
உரிக்கிறார்கள்......!
அகிலமாளும் அதிபருக்கு
அசிங்கமா?
கிளின்ரன் ஐயாவிற்கு
கிளைமோர் தாக்குதலா?
வல்லரசு நாயகனுக்கு
வில்லனா......?
யாரது...?...
மானம்போயினும்
ஈனமில்லையென
மோனலிசா ஆகிய
மொனிகாவே,
நீ அரகேற்றுவது
அந்தரங்க ஆபாசமல்ல
ஆதிக்கத்தின் அசிங்கம்!
பாலியல் பாதையில்
பண்பற்றுப் போனால்,
ஊனமாவது
உடல் மட்டுமல்ல
உயர் பதவியும்தான்.

— மானியூர் ரட்ணேஸ் —

## வள்ளியுஞ் சொல்லலையோ!

ஆற்றோரக் கந்தா அடிசி லிடுமன்னா
கற்றிழந்த பந்தோநாம் கைசோர—ஊற்றிருக்க
நேற்று முறிந்த நிவாரண மொந்தைகுக்
காற்றாய்ப் பறப்பதைக் காண்.

ஆனைப் புதைகுழியைச் சிங்கம் கிளறித்தன்
ஊனைப் பெருக்கி உலகெலாம்—தானேதான்]
சிம்மத்துப் சிங்களை கர்ச்சித்த மாதிற்குச்
செம்மணி யூட்டும் சினம்.

சூரியக் கந்தை இடுகாடாய் மாறியதைப்
பாரெங்கும் சொல்லிப் பறைதட்டி—நேரிழையாள்
கோஷமுட னேற்ற கொலுவின்று செம்மணித்
தூஷணையா வாடுதே தூர்ந்து.

விழுதெனத் தோன்றிய விந்துகளை விட்டாற்
பழுதெனக் கண்டபடு பாவி—தொழுதழுதும்
உப்புவயல் தோண்டி உழுது விதைத்தகதை
செப்புவா ரில்லையோ சேது?

மூத்துக் குமரா முதுபெரும் முத்தமிழ்
மூத்தொளி வீசும் முனிபாலா—எத்தரிங்கு
கொள்ளிக்குந் தாராது கொத்திப் புதைத்தகதை
வள்ளியுஞ் சொல்லலையோ வந்து!

வண்டு விழியாள் வனத்தழகி வள்ளியொடு
தொண்டைமா னாற்றருகே தூங்குமுன்—தொண்டர்தமைக்
குண்டாற் துளைத்து குழியுட் புதைப்பதைத்
தொண்டா யெடுத்தாரைத் தோண்டு.

புதையலைக் காட்டிப் புகழேணி யேறிப்
பொதியியன்றைக் கண்ட பதுமை—கதிர்வேலா]
செம்மணிச் சேறள்ளச் சிறித் தயங்குவதே
அம்மணிக்கோ ராழ்குழி யாச்சு.

சப்பி விழுங்கிடத் தொண்டெக்குன் சுள்ளென
உப்புக் கரிக்குமிக் கப்பல்—விபரீதம்
தப்புப் பொருளால் தப்பிதம் நேர்ந்ததெனச்
சுப்பறம்மா சொல்லுற ஜோக்.

சோற்று முடங்களாய்ச் சோம்பித்திரியுமெமை
ஆற்றுப் படுத்துவார் யாருளரோ!—ஆறுமுகா!!
வேற்று முகமொன்று கூற்றுமுக மாய்வந்து;
ஆற்றிவரு மான்ம அழிப்பு;

— அங்குசன் —

## காலம் மாறும் கோலம்!

பங்கையாசனன் படைத்துவிட்ட பாரினிலே
எங்கும் நடக்கும்; ஏதோ ஒருநாள்
தங்கம் தகரமாகி தாவுபுலி மானாகி (?!)
அங்கங்கள் மாறி மனிதர் அவலட்சணமாகி (?!)
சிங்கங்கள்கூட சிறுமுயல்கண்டு வெகுண்டோடி (?!)
பங்கப்படுகின்ற பதர்காலம் வருமாற் போல்......
இங்கே நடக்கின்ற ஈரொரு மாற்றத்தை
உங்கள் முன்வைக்கின்றேன்; உணர்வீர்பின் இயல்பாய்தான்.

எந்தன் வீடு, என் மனைவி பிள்ளைகாள்
பந்தம் மிகக்கொண்டோர்; பதவி நண்பர்கள்
இந்த வேலிதான் எனைச் சுற்றி என்றும்—நான்
சொந்தத்தில் சுகம் காண்பேன்; பிறர் சேரேன்—இன்னும்
கந்தல் குணங்கள் கணிசமாய்க் கொண்ட சிலர் இன்று
செந்தணலில் அகப்பட்டாற்போல், சித்தம் கலங்கி, தன்
சொத்து சுகம் ஏன் சுற்றம் தாரம் எல்லாம்
மெத்த இழந்து மேவுகின்றார் பித்தன் நாமம்!

படபடபடபட எனவரச் சத்தம் — பதறியே மனம்
கடகடகடகட என மிக அடித்து—கனத்த உடலும்
வெடவெடவெடவெட எனவே நடுங்கி—வெய்துயிர்க்கமுன்
சடசடவெடிக்கும்; சடலங்கள் சாயும்—காலம் மாறி
அடித்தே சிதறுதேங்காய் உடைத்து அரகரா சொல்லி
பிடித்தே வடத்தை புயபலம் இணைத்து பீடுடன் இழுக்க
படபட வந்தது; புஷ்பமெறிந்தது—பதறியே ஓடி
எடுத்தணிந்தனர் காதினில் பக்தர் என்ன கோலம்?

இன்னும் உண்டும் எத்தனை மாற்றம்
எனினும் இவைகள் இன்னரு மூவமைகள்
இப்போ(து) புரியும் எதுவும் எப்போதொருகால்
தப்பாமல் மாறும் தன்னியல்பை மீறி.

— அனலையூர்ச் சேந்தன்

## தொல்லை

படிக்கப் போகச் சுதந்திரம் இல்லை
பகலில் இரவில் நிம்மதி இல்லை
குடிக்கப் போகும் குடியருக் கெல்லாம்
கசிப்பும் கள்ளும் குறைந்ததே இல்லை

தெருவில் சைக்கிள் ஓடிச் சென்றால்
தடையில் இறங்கி உருட்டும் தொல்லை
சிரமம் இன்றிச் சும்மா இருந்தால்
சலித்த 'ரவுண்டப்' என்னும் தொல்லை

சும்மா இருந்த எம்மைப் பிடித்து
சிறையில் அடைத்து உதைக்கும் தொல்லை
அம்மா அப்பா அழுது புலம்ப
எம்மைக் காட்டா தொழிக்கும் தொல்லை

குண்டோ ஏதும் வெடித்து விட்டால்
கொடுமை பலவும் செய்யும் தொல்லை
கொண்டு செல்லும் ஆட்கள் எல்லாம்
கோபப் பசிக்கா ளாகும் தொல்லை

— ஜெ. நிவேதன் —

## கவிதை முற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோய்வு அது!

மாசிப்பனி மூசிப் பெய்ய
மார்பது மூச்சோ மேலது கீழாய்
ஊரை அழைத்து உரத்த குரலில்
உழலும் போது ஒருநாள் மாலை
வேருடன் சரியும் வேம்பினைப் போல
விழுந்துநின்றதில்வாங்கியமூச்சொடு
காரை அழைத்து(க்) கடுகதிபோன்று
கூட்டிச் சென்றனர்
'கொஸ்பிற்றலுக்கு'!

சாய்வுக் கட்டிலில் சரியெனச் சொல்லி
சுவிச்சைப் போட்டு வாயினில்
பிடித்து
நோய்வரும்போதே வந்திடு என்று
நின்றவர் அங்கு கூறியே நிற்க
ஆயத்தமான தள்ளு வண்டியில்
அனுப்பினர் வார்ட்டில் இருந்திடு
என்று
தாயவள் என்னைக் கூவியவாறே
தடக்க தடக்க பின்னே வந்தாள்.

படிக்கும் மாணவர் பலபேர் வந்து
பொறுமையிழக்கும் சோதனை
செய்ய
கடிக்கும் நுளம்பு ஒரு புறமாக
கதறும் சத்தம் மறுபுறமாக
இடிக்கும் வார்த்தையும் இரவோடு
பகலாய்
இழுத்த மூச்சால் வாங்கிக்
கொண்டேன்
அடிக்கும் 'பம்பி' ஒன்றினைத்தந்து
அடுத்த 'கிளினிக்' வா என
விட்டனர்.

— நோயாளி —

## தாண்டதால் மீண்டது!

சீமெந்து அமிழ்ந்து போக இங்கு
சீனி விலை உயர்ந்து போய்ச்சு
மோட்டார் சைக்கிள் அழிந்துபோக
இங்கு மண்எண்ணெய் ஒழி(ளி)ந்து
போய்ச்சு!
மாண்டு போன கப்பலால் இங்கு
பலவரிசை நீண்டு போச்சு
தாண்டு போன பொருள்களால் இங்கு
''சாமான் காட்'' மீளல் ஆச்சு
நிவாரணம் இல்லை என்று
நிம்மதிகள் கெட்ட வேளை
பொருள்களுக்குத் தட்டுப்பாடாய்
ஆனதுவே இவ் வேளை!
மறுபடியும் சங்கங்கள் தேவையான
இடமாச்சு—யாழ்
மண்ணிற்கும் மக்களுக்கும்
பழகிப்போன வகையாச்சு!
மண் எண்ணெய்க் கான்களுடன்
மறுபடியும் ஓர் வரிசை—யாழ்
மண்ணுக்கு எப்போதோ இது
கொடுக்கப்பட்ட சீர்வரிசை
எண்ணில்லாதோர் இடிபட்டு அடிபட்டு
நெரிபடும் இவ்வரிசை
பண்பில்லாது இடையிலே புகுவார்க்கு
மற்றவர் காட்டுவார் கைவரிசை
தாழ்த்தார்கள் கடலில் கப்பலிற்
பெரிசை
தந்துதவுமோ உணவு இந் நிலத் தரிசை
போனதடா இவ்வளவு நாளிருந்த
உரிசை
ஆனதடா மறுபடியும் சீனிக்கு வரிசை!

—ஊரெழுவூர்க் கிருபா—

## 'ஹைக்கூ' கவிதைகள்

நட்சத்திரம்
இருட்டில்
கண்ணடிக்கும்
வெளிச்ச வாலிபர்கள்

★ ★ ★

மெழுகுவர்த்தி
கண்ணீரோடு
ஒளிரும்...
ஒரு — மினி தியாகி.

★ ★ ★

மலை
மண்மகளின்
மார்புகள்.

★ ★ ★

கடல்
துவர்க்கிறதே
யாருடைய கண்ணீர்?

— ஆரண்யா —

சஞ்சீவி சிறுகதை

# ஒரு வேளைக்காவது...

குழந்தை பாயில் புரண்டு புரண்டு விம்மிக் கொண்டிருந்தது.

"அம்மாட்டை" விம்மல்களுக்கிடையில் மழலைக் குரல் விக்கலாய் வெளிப்பட்டது. அழுக்குப் பாயின் ஓரங்கள் பிசுறு தட்டி குழந்தையின் செம்பட்டை முடியோடு உரசுவதை, கன்னத்தில் கறுப்பாய் படிந்திருந்த அழுக்கை அதன்மேல் வழிந்திருந்த கண்ணீர் ஈரத்தை தரையில் உதைக்கின்ற பிஞ்சுக் கால்களை காலைப் பொழுதில் செந்தூரன் சோர்வோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

"அம்மா கத்தாதையடி" எரிச்சலாய் முகஞ்சுளித்துச் சொன்னான். குழந்தையின் அழுகை கூடியது. உடனே குரலைத் தாழ்த்தி "என்ரை சசிக்குட்டியெல்லே அழாதையணை" கொஞ்சியபடியே குனிந்து அவளை அள்ளிக் கொண்டான். முதலில் திமிறிய குழந்தை பின் அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டது. கண்ணீரால் நனைந்த கன்னத்தைத் தோளில் புதைத்துக் கொண்டது.

அவன் அவளைத் தூக்கிக் கொண்டு எழுந்தான். அவளைத் தூக்குகின்ற பலம் அவனுக்குப்போதாது தான். அவனுக்கு ஒன்பது வயது தான் ஆகிறது. அவனுடைய மெல்லிய உடம்பின் இடுப்பில் தொற்றிக் கொண்டிருந்த ஊசிகள் குத்திய காற்சட்டை வழுவியது. அதை இழுத்து விட்டுக் கொண்டு தெருவில் இறங்கினான். குழந்தையின் விம்மல்கள் இடையிடையே அவன் தோளில் அதிர்வாய் இறங்கியது.

"... அழாதையணை அண்ணா பிள்ளைக்குப் பாண் வாங்கித்தல்லாம்... அங்கை... கடை திறந்திட்டுது"

தெருவின் இடது பக்கத்தில் தொலைவில் ரத்தினண்ணையின் கடை தெரிந்தது. வலது பக்க முடிவில் ஆலமர நிழலில் சங்கக்கடை வாசல் தெரிந்தது. இன்னும் திறக்கவில்லை.

சில பிள்ளைகள் நடந்து பள்ளிக்குச்சென்று கொண்டிருந்தார்கள். "அடிவாங்கப்போகினம்" என அவன் மனதில் எண்ணிக்கொண்டே ரத்தினம் ஸ்ரோர்ஸை நோக்கி நடக்கத் தொடங்கினான். குழந்தையை இடுப்பில் சுமந்து உடலைச்சாய்த்து நடந்தான்.

கடையில் காலை வியாபாரம் மும்முரமாய் இருந்தது. பைகளுடன் பெண்களும் ஆண்களும் நின்று கொண்டிருந்தார்கள். இவன் தாழ்வாரத்தில் தொங்கிக் கொண்டிருந்த வாழைக் குலைகளுக்கருகில் நின்று கொண்டான். அதிலிருந்து பார்க்க ரத்தினமண்ணையின் பார்வையைச் சந்திக்கலாம்.

ரத்தினமண்ணையை கேட்க அவனுக்குத் தயக்கமாயிருந்தது. வழக்கம்போல கோபமாய் ஏதாவது சொல்லக்கூடும். ஆட்கள் குறையட்டும் என்று அவன் எண்ணிக் கொண்டான்.

ரத்தினம் அவனைக் கண்டு கொண்டதை அவன் அவதானித்தான். ஆனால் அவர் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளாமல் வேலையில் மும்முரமாயிருந்தார்.

சசி தலையை உயர்த்தி மனிதர்களையும் கண்ணாடிப் போத்தல்களையும் வேடிக்கை பார்த்தாள். கடையில் நிற்பவர்கள் பேசிக் கொள்வதையும் அவர்களுடைய பரபரப்புக்களையும் அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த பொருள்களையும் பார்த்துக் கொண்டிருப்பது அவனுக்கு சுவாரஸ்யமாயிருந்தது. கொளுத்தியிருந்த ஊதுபத்தி வாசனை இதமாயிருந்தது. குழந்தை அடிக்கடி அவனைச் சுரண்டி போத்தல்களைக் காட்டிச் சிணுங்கியது. அவனுக்கு கால்கள் உளைந்தன. ஆட்கள் குறைந்துபோய் ஒன்று இரண்டு பேரானபோது, ரத்தினமண்ணை வாழைக் குலையருகே வந்து குலையைச்சுற்றி ஒரு சீப்பை அரிகின்ற தருணத்தில் கேட்டான்.

"...அம்மா பாண் வாங்கச் சொன்னவ... பிறகு தான் காசு தாறனெண்டவர்!..."

பழச்சீப்பை கையிலெடுத்துக்கொண்டு ரத்தினம் நெற்றியைச் சுருக்கினார்.

"...அடடேய் வெள்ளணச் சொல்லாதயன் எல்லாப்பாணையும் குடுத்திட்டன் சாய்..."

அவர் சொல்லிக்கொண்டு தராசடிக்குப் போனார். அதற்கு பிறகு அவனை அவர் மறந்து போனவர்போல வேலையில் மும்முரமானார்.

அவனுக்கு ஏமாற்றமாயிருந்தது. குழந்தையோடு வெளியில் வந்தான். கடைக்கு வெளியே மதிலோடு நின்று தெருவைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

"...நெடுகலும் பிறகு தரலாம் தாங்கோ... தாங்கோ எண்டா என்ன செய்யிறது... பாவந்தான்... அவனுக்கு விளங்கேல்லை குடிச்சுக் கொண்டு திரிகிறான்..."

உள்ளே ரத்தினமண்ணை சொல்வது கேட்டது. மோட்டார் சைக்கிள் ஒன்று வேகமாய்ப் புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்றது. அவன் தடுமாறி நடந்து மீண்டும் திண்ணைக்குத் திரும்பினான். தெருவைப் பார்த்தபடி உட்கார்ந்தான். குழந்தை மடியிலிருந்து மழலையாய்க் கேட்டது.

"பாண்"... சிணுங்கியது. சோர்வாய் அவனில் சாய்ந்திருந்தது. அவனுக்கும் அடிவயிற்றில் மெல்லிய நெருப்பாய்... கால்கள் பலமிழப்பது போல உணர்வு. பசிக்கிறது. நேற்று நடந்த களேபரத்தில் சாப்பாட்டைப் பற்றி ஒருவரும் யோசிக்கவில்லை.

அவன் குழந்தையைத் திண்ணையில் இருத்தி விட்டு உள்ளே சென்றான். 'உள்' என்பது சில அடிகள் அகலமான ஓடை. அதில் அடுப்பும் சில அலுமினியப்பாத்திரங்களும் கிடந்தன. மறுகரையில் பாய், கொடி, துணிகள் என்று மூலை இருட்டாயிருந்தது. சட்டிகளில் தேடினான். ஒன்றுமிருக்கவில்லை. தண்ணீர் கூட ஒழிந்து போயிருந்தது. அம்மாவும் அப்பாவும் தம்பியும் அதிகாலை அவசரமாய்ப் புறப்பட்டுப் போனார்கள்.

சின்ன அலுமினியப் பானையை எடுத்துக்கொண்டு குழந்தையைத் தூக்கிக் கொண்டு கிணற்றடிக்குப் போனான். பனைகளைக் கடந்து கிணற்றடியை அடைந்தபோது பெண்கள் குறுக்குக் கட்டுகளோடு குளித்துக் கொண்டும் துவைத்துக் கொண்டும் நின்றார்கள். பானையை வைத்து விட்டு குழந்தையைக் கீழே இறக்கினான். கல்லில் உடுப்பை கும்மிக் கொண்டிருந்தவள் கும்முவதை நிறுத்தி விட்டுக் கேட்டாள்.

"...கொப்பருக்கென்னடா?"

"இரவு என்னவோ செய்யுதெண்டு கத்திச்சத்தியெடுத்தவர். கொஞ்சநாளா முகமெல்லாம் இரைஞ்சு கால் வீங்கி இருந்தது. அம்மா சண்டை பிடிச்சு ஆசுப்பத்திரிக்குக் கொண்டு போயிட்டா."

"...அவளின்ரை தலைவிதி... நல்லாய்க் கசிப்பை யடிக்கச் சொல்லு... சுகம் வரும்." அவள் சொல்லி விட்டு மீண்டும் கொஞ்சம் வேகமாக கோபத்தை காட்டுவது போல துணியை கும்மத் தொடங்கினாள்.

அவன் கையில் நீரேந்திக் குடித்தான். குழந்தையும் குடித்தது.

மீண்டும் திண்ணைக்கு வந்த போது சங்கக்கடை வாசலில் லொறியொன்று நின்று கொண்டிருந்தது. தோளில் குழந்தை [illegible]யாயிருந்தது. அழுதழுது களைத்துப்போய் தூங்கி விழுந்தது. அவன் அவளை மெல்லச்சரித்து பாயில் கிடத்தினான். நெஞ்சு சீராக ஏறியிறங்க வாய்திறந்து தூங்கிக் கொண்டிருந்தது. அவன் சிறிது நேரம் அங்கிருந்து சங்கக்கடை வாசலைப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு குழந்தையை உட்பக்கமாய் பாயோடு நகர்த்தினான். மொய்க்கின்ற இலையான்களை விசிறிக் கலைத்தான்.

திருப்தியோடு எழுந்து சங்கக்கடைக்கு ஓடினான். கடையின் திண்டிலேறி தூணோடு நின்று கொண்டு லொறியிலிருந்து மூட்டைகளை இறக்குவதைப் பார்க்கத் தொடங்கினான்.

லொறியின் பின்தட்டு சங்கிலியில் தொங்கிக் கொண்டிருந்தது. உள்ளிருந்த ஒருவன் மூட்டையை சரசர வென்று இழுத்து வந்து விளிம்போடு தள்ள மற்றவன் கீழிருந்து முதுகில் ஏந்தி முடுக்கி விடப்பட்டவன் போல உள்ளே வேகமாய்ச் சென்றான். எல்லோரும் தேகமெல்லாம் மாப்பூசி நின்று கொண்டிருந்தார்கள்.

அவர்கள் நின்ற கோலம் சிரிப்பூட்டியது. சமய பாடத்தில் பிட்டுக்கு மண் சுமந்த பிரானின் நினைவு வந்தது. ராகினி டீச்சர்தான் சொல்லித்தந்தார். இன்றைக்கும் பள்ளிக்கூடம் போகவில்லை. நாளைக்கும் போக முடி



யுமோ என்று தெரியவில்லை. மூட்டை தூக்குவதைப் பார்க்க சந்தோஷமாக இருந்தது. பசி தெரியவில்லை. அவனும் போய் முதுகைக் கொடுத்து தூக்கி விட வேண்டும். ஆனால் அவனுக்கு எட்டாது வளர வேண்டும். வளர்ந்து மூட்டை தூக்க வேண்டும். ஆனால் அம்மா அதைப் பற்றிச் சொல்லவில்லை அப்பா படிக்கவில்லை; அம்மா படித்தவள் ஐந்தாம் வகுப்பு வரை. அது அவளுக்குப் பெருமை. இரவு நேரங்களில் தெருவோர குளிர் தென்றலோடு இருட்டில் கதையாய்ச் சொல்லுவாள். படித்து லோங்ஸ் [illegible]

அவனுடைய சிந்தனை தடைப்பட்டது. தட்டின் விளிம்பில் மூட்டையொன்று பொத்துக் கொண்டு வெள்ளையாய் சீனி சொரிந்தது. பார்த்துக் கொண்டிருக்க குவிந்து சிறிய மலை போல விளிம்பில் நின்றது. அவனுக்கு எச்சில் சுரந்தது.

திண்டிலிருந்து குதித்து மூட்டைக்காரன் உள்ளே போகக் காத்திருந்து எட்டி வழித்து அதை அள்ளினான். காலில் சுரீர் என்று வலி எழுந்தது.

"இதுக்குள்ளை வராதை மூட்டைக்குள்ளை நசிஞ்சு— ஓர்றா... அங்காலை..."

தலையில் சாக்கால் முக்காடு போட்டவன் ஆடுகால் தசையில் சின்னச் சங்கிலியால் தட்டிச் சொன்னான்.

கையில் சீனியோடு திண்ணைக்கு ஓடினான். வலியால் கண்கள் கலங்கின. சீனித்துகள்களை வாய்க்குள் இட்டு கைவிரலைச் சப்பினான். மண்கடியுண்டது. வலியும் இனிப்பும் போட்டி போட்டன. காலைத்தேய்த்து விட்டுக் கொண்டான். சிலேட்டு வரிகள் போல கறுத்தத் தோலில் கோடுகள் விழுந்திருந்தன.

எல்லாம் கொஞ்ச நேரம் தான். இனிப்பு மங்கிப்போய் அடிவயிற்றில் மீண்டும் குறுகுறுப்புத் தொடங்கி விட்டது. மனம் எதையாவது 'தின் தின்' என்று அலட்டத் தொடங்கியது. அவன் தூரத்தில் தெரிந்த வேப்பமரத்தைப்பார்த்தான். காற்றுக்கு இலைகளாடிக் கொண்டிருந்தன. அவனுக்கு தோட்ட வெளி புளியமரம் நினைவுக்கு வந்தது.

குழந்தை உறங்கிக் கொண்டிருந்தது. இப்போது தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளாதது போலத் தோன்றியது. 'ஓடிப்போய் வந்திடலாம்' அவன் சமாதானப் பட்டுக்கொண்டு தெருவிலிறங்கி ஓடத் தொடங்கினான். களைப்பாகத் தானிருந்தது. பனைகளினூடே ஓடி கிணற்றடியைக் கடந்து ஒற்றையடிப்பாதையால் ஓடி தோட்ட வெளியின் விளிம்பையடைய மூச்சிரைத்தது.

மறுபக்கமாய் இருட் பச்சையாய் புளி நிழல் பரப்பி நின்றது. புளியம் பழங்கள் உருசியானவை. புளியங்காய்களைக் கூசி புளிப்பை உணர்ந்து சாப்பிட அவனுக்குள் ஆவல் பொங்கியது.

தோட்ட வெளியில் நாலைந்து பேர் புளியமரம் பக்கமாக கொத்திக்கொண்டு நின்றார்கள். புளியமர நிழலில் யாரோ உட்கார்ந்திருந்தார். அவன் சற்று அருகில் சென்று பார்த்தான். தணிகாசலம் ஒரு ரேடியோவை மடியில் வைத்துக் கொண்டிருந்தார். அவனுடைய எதிர்பார்ப்பு சட்டென்று வற்றிக் காய்ந்து போனது. அவர் 'டோய்' என்று கனத்த குரலில் கத்திக் கொண்டு துவரந்தடியோடு ஓடிவருகையில் புளிய மரத்திலிருந்தால் கூட குதித்துகிலிகொண்டுஓடுவார்கள்.

அவன் சட்டென்று அவர்களைக் காணாததுபோல திரும்பி வேறு திசையில் நடந்தான். அவனுடைய கால்கள் இப்போது இன்னொரு திசையில் இழுத்துச் சென்றன. வீரபத்திரர் கோயிலின் பின்னே உள்ள பற்றைக் காணிக்குள் அவன் சென்றான். ஒற்றையடிப்பாதையிலிருந்து விலகி செடிகளும் பற்றைகளும் நிறைந்த அந்த வளவுதான் அவர்களுடைய காடு. வேட்டைக்காரன் ஒருவன் இரை தேடுவதுபோல முட்களில் மிதிக்காது லாவகமாக குனிந்து நிமிர்ந்து ஏதாவது கிடைக்குமா என்று தேடத்தொடங்கினான்.

ஈச்சம் பற்றைகளின் இருண்ட மையப்பகுதிகள் வெறுமையாயிருந்தன. அன்னமுன்னச் செடிகள் காய்ந்து கறுத்துப்போன எச்சங்களைக் கைகாட்டின. மூலைப் பள்ளத்தில் நிழலாய் நின்ற அணிஞ்சில் மரத்திலிருந்து கரிய பறவை ஒன்று இவன் வரவைக் கண்டு எழுந்து பறந்தது. பழங்களைக் காணவில்லை. இலந்தை மரத்தின் முட்களுக்கிடையில் ஒன்றோ இரண்டோ எட்டாத உயரத்தில் இருந்து விழமறுத்தன. கல்லெறிந்து கைகள் சோர்ந்து போயின. அவன் சோர்ந்து போய் மீண்டும் இலக்கின்றி நடக்கத் தொடங்கினான். தங்கையின் நினைவு அவனுக்கு மறந்து போய்விட்டது. நாகதாளிப்பற்றையில் ஒரு முள்ளில் சிட்டுக்குருவி ஒன்று இருந்தது. நாகதாளிப் பழத்தின் குங்குமச்சிவப்பின் நினைவில் பழத்தை தேடினான். கிடைக்கவில்லை. பன்னைச் செடிகளின் மெல்லிய சுவரும் இனிப்பும்பழங்களைக் கூடக் காணவில்லை.

மீண்டும் ஒற்றையடிப் பாதையில் ஏறியபோது உடல் மிகவும் சோர்ந்திருந்தது. மெல்ல நடந்துகொண்ட அவன் கண்கள் காரை முட்பற்றைகளில் காய்களைத் தேடின. ஒன்றிரண்டு கிடைத்து கசப்பாய் வாய்க்குள் இறங்க பசியின் உக்கிரம் குறையவில்லை. கூடியது.

ஒற்றையடிப்பாதை முடிகின்ற இடத்தில் தான் வேலிக்கூடாக அந்த வீடு தெரிந்தது. நிழலாய் மாங்காய்கள் கொத்தாய் தொங்க மாமரம் நின்றுகொண்டிருந்தது. ஒரு கணந்தான். அவனுக்குள் மீண்டும் நம்பிக்கை துளிர்த்தது.

ஒற்றையடிப்பாதையால் ஒழுங்கையில் ஏறிச் சுற்றி தெருவோரத்தில் வீட்டின் மதில் சுவர் கேற்றில் வந்து சேர்ந்தான். கேற்றடியில் குந்தியிருந்து கம்பிகளைப் பற்றி உள்ளே பார்த்தான். குரோட்டன் செடிகளுக்கும் பூச்சாடிகளுக்கும் அப்பால் கதவு பூட்டியிருந்தது. இடுகடைப்புக்குப் பின்னால் யாரோ குளித்துக்கொண்டிருந்தார்கள்.

"வீட்டுக்காரர்... வீட்டுக்காரர்"... அவன் கூப்பிட்டான்.

**-வரசித்தன்-**

'யாரது...வாறன்... கொஞ்சம் பொறுங்கோ..."

கம்பியைப் பிடித்தபடியே அவன் காத்திருந்தான். சற்றே நரைத்த—நனைந்த— தலையைத் துவட்டியபடியே நீண்ட கவுனணிந்து சின்னம்மா வெளியில் வந்தாள்.

"...என்ன...?"

"...மாங்காய் பொறுக்கட்டே..." அவன் தயக்கமாய்க் கேட்டான்.

"...இஞ்சை மாங்காய்... அதெல்லாம் பிஞ்சு"

அவன் கேற்றோடு ஒட்டுண்டவன்போல சோர்ந்துபோய் தொடர்ந்தும் உட்கார்ந்திருந்தான். சின்னம்மா தலையைத் துவட்டியபடியே அவனைப் பார்த்தபடி ஏதோ யோசித்தாள்.

"...சரி வந்து தேடிப் பார்..."

அவன் கதவைத் திறந்து உள்ளே ஓடினான். அவளும் கூடவே வந்தாள். சருகுகளிடையே வெம்பிய பிஞ்சுகள் சில கிடைத்தன. வாயில் கடிக்க கசந்தன. அவன் ஏமாற்றமாய் அண்ணாந்து பார்த்தான். மாங்காய்கள் கொத்தாய் தொங்கின.

அவள் அவனைப் பார்த்துக்கொண்டே இருந்தவள் கேட்டாள்.

"...நீ யாற்றை பெடியன்?"

"செல்லத்தின்ரை..."

"...செல்லம்...எந்தச் செல்லம்...எங்கை இருக்கிறனி?"

"......ஸ்ரேசனிலை... ..."

அவன் சொல்லிக் கொண்டு மீண்டும் அண்ணாந்து மாங்காய்களைப் பார்த்தான்.

"...எனக்கொரு வேலை செய்து தந்தியெண்டா உனக்கு நிறைய மாங்காய் தருவன்"

(X ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக பயங்கரவாதத்துக்கு எதிராக அமெரிக்கா தொடுத்துள்ள போர்

''பயங்கரவாதத்துக்கு எதிராக நாம் எதையெல்லாம் செய்ய முடியுமோ, செய்யவேண்டுமோ அதையெல்லாம் செய்வோம். அமெரிக்கா பயங்கரவாதத்துக்கு இலக்காகி இருக்கிறது. அது என்றைக்குமே அதன் இலக்காகத் தான் இருக்கும். ஏனெனில் அனைத்துக்கும் நாமே தலைமை வகிக்கிறோம்...''

—இது அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் வார்த்தைகள்.

''...இதுகடைசி நடவடிக்கை அல்ல; மற்ற நாடுகளிலும் பயங்கரவாத இலக்குகள் எனச் சந்தேகிக்கும் இலக்குகள் மீது எவ்வேளையிலும் தாக்குதல் நடத்தப்படுவது சாத்தியமே... எதிர்காலத்தில் இது போன்று மேலும் செய்யத் திட்டமிடுகிறோம்...''

— இது அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் வில்லியம் கோஹனின் வார்த்தை.

''பயங்கரவாத அச்சுறுத்தல் என்பது நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் ஒன்று. இதனை அமெரிக்கர்கள் நன்கு விளங்கிக் கொள்வது அவசியம். நாங்கள் ஒரு நீண்ட காலப் போராட்டத்தில் இறங்கியுள்ளோம்...''

—இது அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் மெடலின் அல்பிறைற் அம்மையாரின் வாசகம்.

ஆப்கானிஸ்தான் மீதும், சூடான் மீதும் 'பயங்கரவாத இலக்குகள்' (Terrorist Targets) எனத் தானே கூறிக்கொண்ட இலக்குகள் மீது கடந்த வாரம் திடீர் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்திய சிலமணித்தியாலங்களின் பின்னர் அமெரிக்கத் தலைவர்கள் வெளியிட்ட கருத்துகள் இவை.

எதிர்பாராத இந்தத் தாக்குதல்களையும் அதனைத் தொடர்ந்து வருகின்ற அமெரிக்க விளக்கங்களையும் உலக உணர்வலைகளையும் உன்னிப்பாகக் கவனிப்பவர்கள் மத்தியில் பல கேள்விகள் எழுகின்றன:

அமெரிக்க நலன்களுக்கு பாதிப்பு ஏற்படும் போதெல்லாம் அமெரிக்கா இதைத்தான் செய்யும் என்பது மறுபடியும் ஒரு முறை அடித்துச் சொல்லப் பட்டிருக்கின்றதா?

'அமெரிக்கர்களின், அவர்களைச் சார்ந்தவர்களின் நலன்களை மட்டும் பேணும் ஒரு புதிய சர்வதேச அரசியல் ஒழுங்கின்' கீழேயே உலகத்தை புதிய நூற்றாண்டுக்குள் அமெரிக்கா இட்டுச் செல்லப்போகிறதா?

அமெரிக்கத் தாக்குதல்களின் 'மறுபக்கத்தை' சற்று சிந்திக்கும் பொழுது இந்தக் கேள்விகள் எழவே செய்கின்றன.

சோவியத்யூனியனின் வீழ்ச்சி, பனிப்போரின் மறைவு இவற்றைத் தொடர்ந்து அமெரிக்கா உலக நாடுகளை தனது தலைமையின் கீழ் — அமெரிக்கக் குடையின் கீழ் — கொண்டு வருவதில் வெற்றி கண்டிருக்கிறது. முழுக்க முழுக்க அமெரிக்க முகாமாகவே மாறிவிட்ட ஐக்கிய நாடுகள் சபை அதன் இலட்சியங்களை இழந்து விட்டது. இந்த நூற்றாண்டின் சாதனை எனக் கொள்ளப்படக் கூடியதான வகையில் குறிப்பிடக் கூடிய எதனையும் ஐக்கிய நாடுகள் சபையால் சாதிக்கமுடியாமற் போயுள்ளது.

ஆப்கானிஸ்தான் மீதும், சூடான் மீதும் முன்னறிவித்தல் ஏதும் இன்றி அமெரிக்க ஏவுகணைகள் வீழ்ந்து வெடித்த போது 'வழமையான பாணியில்' கவலை தெரிவித்தார் ஐ. நா. செயலர். 'வீற்றோ' என்கின்ற விசேட அதிகாரம் கொண்ட பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளுமே அமெரிக்கா செய்வதை வெறுமனே பார்த்துக் கொண்டு அல்லது கண்டனம் தெரிவிப்பதுடன் மட்டும் நின்று விட்டன. இதுவும் அண்மைக்கால வழமையே.

'புதிய உலக ஒழுங்கு' எனப் பெருமைப்பட்டுக் கொள்ளும் விடயம் இவ்வாறாகவே அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்து விட்டிருக்கிறது.

அண்மைக்காலமாக அமெரிக்கா கூறிவரும் 'அமெரிக்கர் நலனும்', 'உலக பயங்கரவாதமும்' மறுபடியும் மறுபடியும் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியவையாகவே உள்ளன.

'அல் ஷிபா பார்மஸிக்குட்டிக்கல் இன்டஸ்றீஸ்' (El Shifa Pharmaceutical Industries) என்னும் சூடானின் மருந்து தொழிற்சாலையும், ஆப்கானிஸ்தானத்தின் முகாங்களும் தொடர்ந்து இயங்குவது அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதாலேயே இந்தத்தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக தமது ஏவுகணைத்தாக்குதல்களை நியாயப் படுத்தியிருக்கிறார் கிளின்ரன்.

உலகில் உள்ள அநேகமான நாடுகள் எல்லாமே அவற்றின் தேசியப்பாதுகாப்புதொடர்பான அச்சுறுத்தல்களை எவ்வேளையிலும் சந்தித்துக் கொண்டே இருக்கின்றன. (அவற்றைத் தனித்தனியா விவரிக்கலாம்.) ஆனால் அமெரிக்கா கூறும் 'அமெரிக்காவின் தேசியப்பாதுகாப்பு' என்பது அமெரிக்கர்களை மட்டும் முதன்மைப்படுத்தும் ஓர் 'அமெரிக்க அடிப்படைவாதம்' தான் என்பது மெல்லவெளித்தெரியத்தொடங்கியுள்ளது. ஆனால் 'உலகப் பயங்கரவாதம்' என்று அமெரிக்கா சூட்டியுள்ள பொதுமைப் பெயர் அமெரிக்காவின் நோக்கில் இஸ்



லாமிய அடிப்படை வாதத்தையே குறிப்பதாகக் கொள்ளலாம். அவ்வாறாயின் 'அமெரிக்கத் தேசிய வாதத்தை' கட்டியெழுப்பமுனையும் அமெரிக்கா இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் வளர்ச்சி கண்டு மிரள்வது ஏன்?

அமெரிக்கர்களின் நலனும், அமெரிக்காவின் தேசியப்பாதுகாப்பும் அமெரிக்காவுக்கு அவசியமானவை எனின் —

இஸ்லாமியர்களின் நலனும், இஸ்லாமிய மண்ணின் தேசியப்பாதுகாப்பும் தமக்கும் அவசியமானவை என லாடென் சதாம் ஹுசேய்ன் போன்றவர்கள் கூறமுடியாதா?

பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு ஆட்சியாளர்களுடன் இணைந்து பல முஸ்லிம் நாடுகளில் அகலக்கால்பதித்து நிற்கிறது அமெரிக்கப்படை. கென்யத் தலைநகர் நைரோபியிலும் தன்சானியத் தலைநகர் டார்—எஸ்—சலாமிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து ஆபிரிக்காவிலும் அகலக்கால் பதிக்க அமெரிக்காவுக்கு தகுந்த வாய்ப்புக்கிட்டியுள்ளது.

குண்டுத் தாக்குதல் நடந்தகையோடு அமெரிக்க சமஷ்டிப் புலனாய்வுப்பிரிவு (எவ். பி. ஐ), மத்திய புலனாய்வுப் பிரிவு (சி. ஐ. ஏ.) என்பனவற்றின் அதிகாரிகள் நைரோபியில் போய் இறங்கினார்கள். நாளாந்தம் ஒரு விமானமாவது அமெரிக்கா[வில்] அங்கு கொண்டுபோய்ச் சேர்த்

துக் கொண்டே இருக்கிறது. மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதாகக் கூறி சுமார் 150 பேர் அடங்கிய இஸ்ரேல் படைப் பிரிவு ஒன்று அங்கு விரைந்து அனுப்பப்பட்டது. இது விடயத்தில் இஸ்ரேலின் அதீத அக்கறை சில கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

அமெரிக்காவுக்கு எதிராகநடத்தப்பட்ட இவ்விரு குண்டுத்தாக்குதல்களிலும் 250க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். ஆனால் இவர்களில் ஆக 12 பேர் மட்டுமே அமெரிக்கர்கள்; ஏனைய அனைவரும் ஆபிரிக்கர்கள். வறுமையில் வாடும் சாதாரண கென்யர்கள்.

தனது பிரஜைகளில் பெரும் எண்ணிக்கையானோரை பலி கொண்டபோதும் இந்தத் தாக்குதலை நடத்தியதாக எந்தக் குழுவின் மீதோ, அமைப்பின் மீதோ கென்ய அரசு குற்றம் சுமத்தவில்லை. அதே நேரம் விசாரணை

## மறுபக்கம் 2 வார விமர்சனம்

-நல்லூர் தாஸ்-

களைத் தனித்து நின்று நடத்தும் சக்தியோ, அல்லது விசாரணை என்ற பெயரிலான அமெரிக்கத் தலையீட்டை தடுத்து நிறுத்தும் அரசியல் பலமோ கென்யாவிடம் இருக்கவில்லை. எனவே அமெரிக்கா அங்கு புகுந்து விளையாடியது.

உலகளாவிய ரீதியான பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் தலைமை வகிப்பவர், நிதி உதவி வழங்குபவர் என அமெரிக்காவும் அதன் ஆதரவாளர்களும் கூறிக் கொள்ளும்சவுதிஅரேபியஅதிருப்தியாளர் ஒஸாமா பின்லாடெனுக்கும் அமெரிக்கத் தூதரங்கள் மீதான குண்டுத் தாக்குதல்களுக்

# புதிய பயங்கரவா

கும் நேரடித் தொடர்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பென்ரகன் தெரிவித்தது.

அதே வேளை —

சூடானியத் தலைநகர் கார்ட்டூமில் அரசின் கட்டுப்பாட்டில் — தனியார் நிர்வாகத்தின் கீழ்—இயங்கும் 'அன்ரிபயற்றிக்' மருந்து உற்பத்தித் தொழிற்சாலையில் இருந்து 'பயங்கரவாதத் தாக்குதல்களை' நடத்துவதற்கான நச்சு இரசாயனப்

பொருள்களைப் பெற பின்லாடென் முயற்சித்து வருகிறார் என்றும், அதை நிரூபிக்க ஆதாரபூர்வமான சான்றுகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாகவும்சி.ஐ.ஏ. தெரிவித்தது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு சுமார் ஒருவாரகாலம் நுணுக்கமாகத் திட்டப்பட்ட திட்டத்தின்படி ஆப்கானிஸ்தான் மீதும்சூடான் மீதும் திடீர்த் தாக்குதல்களை நடத்த கிளின்ரன் உத்தரவிட்டார்.

கிழக்கு ஆப்கானிஸ்தானில்— பாகிஸ்தான் எல்லையோரம் — மலைப் பிரதேசங்களில் அமைந்துள்ள பின் லாடெனின் 'பயங்கரவாத முகாம்களை' செய்மதி மூலம் இனங்கண்டு உறுதிப் படுத்தியதாக தாக்குதல் நடத்தப்பட்ட பின்னர் பென்ரகன் தெரிவித்தது. சில செய்மதிப் படங்களையும் அது வெளியிட்டது.


கிழக்கு ஆபிரிக்காவில் 250க்கும் மேற்பட்ட அப்பாவிகளின் உயிர்களைப் பலிவாங்கிய குண்டுத்தாக்குதல்கள் பயங்கரவாத நடவடிக்கைதான் என்பதில் எவருக்கும் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கமுடியாது. அத்தாக்குதல்களை நடத்தியவர்கள் கூட உயிரிழப்புக்கள் குறித்து பின்னர் வருந்தியிருக்கக் கூடும்.

'அமெரிக்க நிலைகள்' எனக் கூறிவிட்டு அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் காட்டுமிராண்டித் தனத்தை எவரும் எந்த வழியிலும் நியாயப்படுத்திவிடமுடியாது.

ஆனால் இரு நாடுகள் மீதும் ஏவுகணைகளைச் செலுத்த

அமெரிக்கா எடுத்த தன்னிச்சையான முடிவிலும் பயங்கரதாதச் சாயலே தென்படுகிறது.

பயங்கரவாதிகளின் நிலைகள் எனக் கூறிக்கொண்டு ஒரு நாட்டின் தலைநகரில் உள்ள ஓர் இலக்கு மீது எந்தவிதமான முன்னெச்சரிக்கையும் இன்றி 25க்கும் மேற்பட்ட 'குரூஸ்' (Tomahawk Cruise) ஏவுகணைகளைச் செலுத்திய செயலை ஒரு பயங்கரவாத நடவடிக்கை



சூடான் தலைநகர் கார்ட்டூமில் உள்ள 'ஷிபா பிளான்ட்' (Shifa Plant) எனப்படும் 'அன்ரிபயற்றிக்' மருந்துத் தொழிற்சாலையின் முகப்புத் தோற்றம் இது.

அல்ல என்று கூறி ஒதுக்கிவி[ட] முடியுமா?

வியாழக்கிழமை (ஓகஸ்ட் 2[0]) கிறீன்விச் நேரப்படி மாலை 5.3[0] மணியளவில் செங்கடலிலும் அ[ரே]பியக் கடலிலும் நிலைகொ[ண்]டுள்ள அமெரிக்கக் கடற்படை[க்] கப்பல்களில் இருந்து — இரு நா[டு]களின் தேசிய எல்லைகள், வா[ன்] பிராந்தியங்களை அத்துமீறி ஊ[ட]

> உலகளாவிய ரீதியி[ல்] ...களை மட்டும் முதன்[மைப்படுத்தும்] தேசியப் பாதுகாப்பு', ... அமெரிக்க அடிப்படை[வாதத்தை] ... பலைவாதத் தளத்தில் ... பயங்கரவாதத்துக்கு எ[திராகத் தொடுத்]துள்ள போரை 'அமெரி[க்க ...]' ஏன் கூற முடியாது?

றுத்து — 75 ஏவுகணைகளை அமெரிக்கா ஏவியது.

சூடான் தலைநகரில் வீழ்ந்த 2[0] ஏவுகணைகள் இலக்கைச் சரிய[ா]கத்தாக்கின. ஆனால் இத்தாக்[கு]தலுக்கு உத்தரவிட்ட கிளின்ரன் நிர்வாகம் கார்ட்டூம் நகரில் உள்ள சாதாரண மக்களினதும், அ[த்] தொழிற்சாலையில் பணிபுரியு[ம்] அப்பாவிப் பணியாளர்களின[து] உயிர்களை எண்ணிப்பார்[த்]ததா?

இரு நாடுகளிலும் குறிப்பிட்[ட] இலக்குகளைச் சரியாக குறித[வ]றாமல் தாக்கி அழித்தமை அமெரிக்கப் படைத்துறை வளர்ச்[சி]யின் மகத்தான சாதனையா[க] இருக்கலாம். ஆனால் அதற்காக[ப்] பெருமைப்படமுடியாது. ஏனெ[னி]னில் ஏவிய ஏவுகணைகளி[ல்] ஒன்று இலக்குத் தவறியிருந்தா[ல்] கூட நூற்றுக்கணக்கான அப்பா[வி]களின் உயிர்கள் பலிவாங்க[ப்]பட்டிருக்கும். எனினும் 25க்கு[ம்] அதிகமானோர் இத்தாக்[கு]தல்களில் பலியாகியுள்ளனர்: பல[ர்] காயமடைந்துள்ளனர்.

ஆக 12 அமெரிக்கர்களின் உயி[ர்]களை முதன்மைப்படுத்திய அமெரிக்கா நூற்றுக்கணக்கான சூடானிய மக்களின் உயிர்களை[ப்] பொருட்டாகக் கொள்ளவில்லை என்பது தெரிகிறது.

சூடான் மருந்துத் தொழி[ற்]சாலை மற்றும் ஆப்கனில் உள்ள பின் லொடனின் பராஇராணுவ[ப்] பயிற்சி முகாங்களைத் தாக்[கி] அழித்ததுடன் பயங்கரவாத[த்]துக்கு எதிராக அமெரிக்கா பி[ர]கடனம் செய்துள்ள போ[ர்] முடிந்து விடவில்லை என்பதை அதிபர் கிளின்ரனும் மற்றும் அவ[ர]து அரச மற்றும் படைத்துறை அதிகாரிகளும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தாக்குதல் நடத்தப்பட்[ட] மறுநாள் பாதுகாப்புத் துறை[ச்] செயலர் வில்லியம் கோஹன் வாஷிங்டனில் செய்தியாள[ர்]களிடம் தெரிவித்த தகவலி[ல்] உள்ள 'ஒரு செய்தி' அமெரிக்[க] நேசநாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளை நிச்சயம் சிந்திக்க வைத்திருக்க வேண்டும்.

''வேறு நாடுகளிலும் பயங்கரவாத நிலைகள் எனச் சந்தேகிக்கும் இலக்குகள் மீது இ[து] போன்று மேலும் தாக்குதல்கள் நடத்தப்படுவது சாத்தியமே'' என்று கோஹன் தெரிவித்திரு[ந்]தார்.

ஹோகனின் இந்தக் கூற்று இறைமையுள்ள நாடுகளை நோக்கி விடுக்கப்பட்ட பகிரங்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

…ாக …ர்!

பயமுறுத்தல் என்றே கொள்ள வேண்டும். ஏனெனில் அமெரிக்காவுடன் பகைமை கொண்டுள்ள நாடுகளில் மட்டுமன்றி ஏனையஎந்த ஒரு நாட்டிலாவது 'அமெரிக்கர்களின் நலனுக்கு' பாதிப்புஏற்பட்டால் அமெரிக்கா உடன் செயலில் இறங்கும். அந்த நாட்டின்எல்லைகளுக்குள் அத்துமீறி அமெரிக்கக் குண்டுகள் எந்நேரமும் வந்து விழலாம்.

இதுவே வில்லியம் கோஹன் கூறிய செய்தி.

இது இஸ்லாமிய அடிப்படைவாதிகளுக்கு மட்டும் விடுக்கப்படவில்லை. உலகம் முழுவதுக்குமாக விடுக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவால் 'பயங்கரவாத அமைப்புக்கள்' என அறிவிக்கப்பட்டுத் தடை செய்யப்பட்டுள்ள அமைப்புக்கள் அனைத்தையும் மற்றும் அமெரிக்காவுக்கு அடிபணிய மறுத்து

…ரீதியில் அமெரிக்கர்களின் நலன் …முதன்மைப்படுத்தும் 'அமெரிக்கத் …ப்பு', என்பது ஒருவகையில் …படைவாதமே. அமெரிக்க அடிப் …த்தில் நின்று கொண்டு உலகப் …கு எதிராக அமெரிக்கா தொடுத் …அமெரிக்கப் பயங்கர வாதம்' என்று …?

தொடர்ந்து சவால் விடுத்து வரும் சில நாடுகளையும் 'உலக பயங்கரவாதப்' பட்டியலில் அமெரிக்கா சேர்த்துள்ளது.

அமெரிக்காவால் தடைசெய்யப்பட்ட அல்லது தடை செய்வதற்காகக் கண்காணிக்கப்பட்டு வரும் அமைப்புக்களில் தத்தமது மண்ணில் இன, மத, கலாசார, அரசியல் சுயநிர்ணய உரிமைகளுக்காகப் போராடிவரும் அமைப்புகளும் அடங்கும். இந்த அமைப்புகளின்செயல்கள், அவை நடத்திவரும் போராட்டங்களின் நியாய, அநியாயங்கள் ஒருபுறம் இருக்க அந்த அமைப்புகளைச் சார்ந்த தேசிய இனங்களின், சிறுபான்மை இனங்களின் நியாயமான கோரிக்கைகளை அடக்கி ஒடுக்க முயலும் ''அரச பயங்கரவாதங்களுக்கு'' அமெரிக்காவின் நடவடிக்கைகள்

…ாதமா?

உற்சாகமளிக்கின்றன.

உலகளாவிய ரீதியாக அமெரிக்கர்களின் நலன்களை முதன்மைப்படுத்தும் அமெரிக்க அடிப்படைவாதத்தை தமது நாடுகளிலும் கட்டிக்காக்க, அல்லது பின்பற்ற முயலும் ஆட்சியாளர்கள் அரச பயங்கரவாதிகளாகத் தோற்றம் பெறுகின்றனர்.

அமெரிக்க அடிப்படைவாதத்தளத்தில் நின்று கொண்டு தனது எதிரிகளுக்கு அல்லது அமெரிக்க நலன்களுக்கு எதிரானவர்கள் எனத் தானே கூறிக் கொள்பவர்களுக்கு எதிராக அமெரிக்க நடத்த முயலும் நீண்ட போர் பிறக்கப் போகும் புதிய நூற்றாண்டில் 'அமெரிக்கப் பயங்கரவாதமாகவே' நீளும் அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த அமெரிக்கப் பயங்கரவாதம் உலகெங்கும் பல அரச பயங்கரவாதங்களின் பாதுகாவலனாகவும் விளங்கப் போகிறது.

கிழக்கு ஆபிரிக்காவில் அமெரிக்கத் தூதரகங்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்களுக்கு அமெரிக்கா தன்னிச்சையாகக் கொடுத்த பதிலடி 'கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்' என்ற பழிக்குப் பழிவாங்கும் சிந்தாந்தத்தையே பலருக்கும் நினைவூட்டுகிறது.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கை உலகெங்கும் உள்ள அமெரிக்க சமூகத்தை முடிவற்ற ஒரு பதற்ற சூழ்நிலைக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. உலக விவகாரங்களில் அமெரிக்கா கடைப்பிடித்துவரும் கொள்கை

(XI ஆம் பக்கம் பார்க்க)

# உடலும் உள்ளமும் நலந்தானா?

## வருமுன் காப்பதே சிறந்தது!

- மு. சிவநேசன் -

பகுதி 3

இரவுநேரக் கடமைகளில் ஈடுபடுவர்கள் தூக்கத்தோடு போராடியே வேலை செய்கிறார்கள். அவர்களால் பகலில் மனம் கட்டி உறங்க முடிவதில்லை. இதனால் நாள் முழுவதும் பைத்தியம் போல மூளையைக் குழப்பிக் கொள்ள நேரிடுகிறது.

இந்த நித்திரைக் கோளாறின் விளைவு என்னவாகிறது? இயல்பாகவும் திறமையாகவும் கருமங்களை ஆற்ற முடியாமற் போகலாம். நீண்டநாள் நிலைக்கும் நிலைமைகள் உடலையும் உள்ளத்தையும் பாதிப்பதால் ஆளை நோயாளியாக்கி விடும்.

நித்திரைக் கோளாறினால் வேலைத்தலங்களில் உற்பத்தித் திறன் குறைவடைகிறது. அசதி, வீதி விபத்துக்கள் அதிகரிக்கக் காரணமாகிறது. நுட்பமான விடயங்களில் கவனம் செலுத்தப் பலராலும் இயலுவதில்லை.

சாதாரணமாக ஒருவருக்கு 8 மணிநேர சலனமற்ற தூக்கம் அவசியமாகிறது எனலாம். இத்தேவை ஆளுக்கு ஆள் உடல் நிலைக்கும் உழைப்புக்கும் ஏற்ப மாறுபடலாம். சிலரால் 10 அல்லது 12 மணிநேரம்கூட இயல்பாக உறங்க முடிகிறது.

மாணவர்களையும் வளரும் வயதினரையும் பொறுத்தவரை 8 மணி நேரத் தூக்கம் போதியதல்ல.

பொதுவாக மூளை பகல் இருட்டு என்ற தன்மைக்குப் பழக்கப்பட்டே உறக்கத்துக்கு இசைவாக்கம் அடைந்துள்ளது. இரவில் உறக்கம் இதமாக அமைகிறது. இரவில் கடமை புரிபவர்கள் பகலில் உறங்கவேண்டி ஏற்படின் சூழலை இருட்டாக வைத்திருத்தல் அவசியமாகிறது.

உங்கள் இரவுத்தூக்கமும் உடல் நிலையும் திருப்திகரமாக இருந்தால் பகலில் அதிகம் கொட்டாவிவிட வேண்டி ஏற்படாது. துடிப்புடன் கருமங்களை ஆற்றலாம்.

இருக்கும்போது — வாசிக்கும்போது — தொலைக்காட்சி பார்க்கும் போது — பிரயாணம் செய்யும் போது — ஓய்வெடுக்கும் போது — விருந்தினருடன் உரையாடும் போது — அரங்கத்தில் அமரும் போது — மதிய உணவைத் தொடர்ந்து — அல்லது அலுவலகக் கலந்துரையாடலின் போது — தூக்கம் கடுமையாக ஆட்டிப்படைப்பது வழமை என்றால் தூக்கக் கோளாறு உங்களை ஆட்டிப் படைக்கிறது என்பது தான் அர்த்தம்.

மேற்படி சந்தர்ப்பங்களில் தூக்கம் போடுவது வழமை என்றாலும்கூட எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அது தீவிரமாக இருப்பது ஆரோக்கியமானது அல்ல.

இவற்றிலிருந்து விடுபட இரவு சீரான தூக்கமும் வைத்திய ஆலோசனையும் அவசியமாகிறது.

இரவு தூக்கம் கெடுதலைத் தவிர்க்கவும் சிலதினசரி நடைமுறைகளைக் கைக்கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

★ வழமையாக வசதியான ஒரு குறித்த நேரத்தில் படுக்கைக்குப் போக வேண்டும். எழும்பும் நேரமும் அவ்வாறே உத்தேசிக்கப்படல் வேண்டும்.

★ மனதில் உள்ள பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு காணாமல் படுக்கைக்குப் போவது உறக்கத்தைக் கெடுக்கும். அதைப் பேசித் தீர்த்தோ ஆலோசித்தோ ஒரு முடிவு கண்டுவிட்டால் மனச்சுமை இறங்கிவிடும்.

★ கோப்பி, தேநீர், புகையிலை போன்றவை தூக்கத்தை கெடுக்கும் தன்மை கொண்டவை. எனவே இரவு உணவின் பின் அவற்றை தவிர்த்துச் சற்று பால் அருந்தினால் நன்று. பழங்களைச் சாப்பிடுவதும் நல்லது.

★ படுத்திருந்தும் உறக்கம் வராதபோது உழன்று கொண்டிருப்பதில் இலாபம் ஏதும் இல்லை. எதையாவது வாசித்தால் அல்லது இசையினை ரசித்தால் தானாகவே தூக்கம் வந்துவிடும்.

இவ்வாறான அவஸ்தைகளுக்கு தினமும் ஆளாகும் பலரும் இவற்றிலிருந்து விடுபட உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க முடிவதில்லை. இதன் விளைவு நாளடைவில் ஆளைப் பாதித்ததும் ஆரோக்கியத்தைக் கெடுத்தும் விடுகிறது.

இவ்வாறு வாழ்வில் சந்திக்கும் எல்லா அழுத்தங்களையும் தாங்க ஓர் இதயம் போதாதே. அது எவ்வளவுக்குத்தான் தாக்குப் பிடிக்கும்? பாவம்!

எனவேதான் இதயத்துக்கு இதமாக நீங்கள் வாழப் பழகவேண்டிய அவசியம் எழுகிறது. உங்களைச் சூழ உள்ள உங்கள் அன்புக்குரியவர்களும்கூட உங்கள் இதயத்துக்கு இதமளிக்கும் விதமாக நடந்துகொண்டால் நீங்கள் பாக்கியசாலிகள் தான்.

வாழ்க்கையில் தினசரி தொல்லைகள் வந்து அழுத்தும். ஏதும் சோலி இல்லாதவர்கள்கூட நோய் நொடி வந்துவிடுமோ என ஏங்கி மடிகிறார்கள். கற்பனையில் வீணாக நிம்மதியைக் கெடுக்கிறார்கள்.

மார்புவலி வந்து இதயம் இயங்காமல் திடீரென மரணம் வந்துவிடப்போகிறதே என ஏங்கியே வாழுபவர்கள் பலர் சாதாரணமாக இருக்கையிலேயே நிம்மதி இழந்து தவிக்கிறார்கள்.

ஏன் இவ்வாறு அநாவசியமாக அலட்டிக்கொள்ள வேண்டும்? இதயத்தை ஏங்க வைக்கவேண்டும்? சற்று நிதானமாக நடந்தும்—அவதானித்தும்— சிந்தித்தும் செயற்பாட்டால் இத்தகைய தேவையற்ற ஏக்கங்களைத் தவிர்க்கலாம். அதேவேளை எச்சரிக்கையாகவும் இருக்கலாம்.

★ ஒழுங்கான உடற்பயிற்சியும் அளவான உடல் உழைப்பும் எப்போதும் தேகத்தை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். மார்புவலி வருவதைத் தவிர்க்க உதவும் பல காரணிகளில் இதுவும் ஒன்றாகிறது.

★ உடல் எடையைச் சீராக வைத்திருப்பது அடுத்த விடயம். … கள் உயரத்துக்கும் இடைப்பட்ட தொடர்பு எவ்வாறு அமைகிறது என BMI அட்டவணையில் (Body Mass Index) இருந்து அறிந்து கொள்ளலாம்.

★ நீரிழிவு வியாதி கண்டவர்களுக்கு ஏனையவர்களை விட மாரடைப்பு ஏற்படும் சாத்தியம் சற்று அதிகம் எனலாம். எனவே அத்தகைய நோயுடையோர் நோயைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியமாகிறது.

★ நீங்கள் முன்பு புகை பிடிப்பவராக இருந்து தற்போது அதனைக் கைவிட்டு இருப்பினும்கூட அதன் தாக்கம் உடலில் இருக்கலாம். தொடர்ந்து புகைப்பவராயின்—அதுவும் தினமும் 20-ற்கு மேற்பட்ட சிகரெட்டுகளை புகைப்பவராயின்— மார்பு வலியை வலிந்து இழுக்க நீங்கள் துடிக்கிறீர்கள் என்பதே அர்த்தம்.

★ மார்புவலிக்கும் பரம்பரைக்கு தொடர்பு உண்டு எனக் கருதப்படுகிறது. உங்கள் பெற்றோர் 50 முதல் 60 வயதுக்கு முன்னரே இதற்கு ஆட்பட்டு இருப்பின் உங்கள் ஆபத்து விகிதமும் அதிகம் எனலாம்.

★ உயர் இரத்த அழுத்தம் உள்ளவராக நீங்கள் இருந்து அதனைக் கட்டுப்படுத்த தினசரி மருந்திலே தங்கி நிற்கிறீர்களா? அப்படியானால் அவதானமாக இருங்கள்.

★ நீங்கள் சுமாராக தினமும் மதுபானம் பாவிக்கும் வழக்கம் உள்ளவரா? இது இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும் அல்லவா?

★ நாளாந்த உணவில் உப்பு, கொழுப்பு போன்றவற்றை அதிகம் பாவிக்கிறீர்களா? தினசரி இறைச்சி இல்லாமல் அல்லது பொரியல் இல்லாமல் சோறு சாப்பிட முடியவில்லையா?

இந்தப் பழக்கத்தை மாற்றிக்கொள்ளாவிட்டால் நாளடைவில் மார்புவலி வந்து ஆளும்.

இத்தகைய விடயங்களில் சில உங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாக இருக்கலாம். இயன்றவரை இன்று முதல் உங்களால் கட்டுப்படுத்தத்தக்க விடயங்களை சரிக்கட்டி நடந்தால் வெற்றி உங்களுக்கே!

இதுவரை கூறப்பட்டவை வருமுன் காக்கும் வழிகள். இனி—வரும்போது காக்கும் நடைமுறைகள் சிலவற்றையிட்டு அவதானமாக இருத்தல் அவசியமாகிறது.

நெஞ்சிலே வலிப்பதெல்லாம் மார்புவலி ஆகிவிடாது. மார்புவலி ஏற்படும் போது பலருக்குப் பலவாறான அறிகுறிகள் தென்படுகின்றன. இவற்றில் ஒன்றைக் கண்டவுடன் மார்புவலி வந்துவிட்டது எனத் துடித்துப் பதைத்துவிடாதீர்கள். அதற்காக இவ்வறிகுறிகள் தொடர்பாக அசண்டையாகவும் இருக்கக்கூடாது.

★ பொதுவாக நெஞ்சை அழுத்தும் ஒருவகை நோவு மார்புவலிக்குரிய அறிகுறியாகத் தென்படுகிறது.

★ களைப்பு, எதையும் செய்ய இயலாத தன்மை— என்பன அசாதாரணமாக அடிக்கடி தோன்றினால் அதனையும் அலட்சியம் செய்துவிடல் ஆகாது.

★ வலி நெஞ்சில்தான் தோன்றும் என்றில்லை. அது கழுத்திலோ, தொண்டையிலோ, தாடையிலோ, தோளிலோ அல்லது கையிலோ கூடத் தென்படலாம்.

★ இதைவிட மூச்சு விடுதலில் சிரமம், கிறுதி, குப்பென வியர்த்தல் போன்ற



அறிகுறிகள்கூட தோன்றலாம்.

★ சமிபாட்டுக் கோளாறு போன்ற தன்மைகள் சென்பட்டு வயிற்றுவலியோ நெஞ்சு அல்லது வயிற்று எரிவோகூட மாரடைப்பின் அறிகுறியாகத் தோன்றலாம்.

இப்படியான அறிகுறிகள் தினமும் சாதாரணமாகவே மனிதர்களுக்கு இருப்பதுதான் சிக்கலை வளர்க்கிறது. மார்புவலியை துல்லியமாக அடையாளம் காட்ட இவை தவறிவிடுகின்றன. பல்வேறு சாதாரண நோய்கள்கூட இதே குணங்குறிகளைக் கொண்டுள்ளன.

எனவே அதிகம் அலட்டிக் கொள்ளாமல் அதேவேளை எச்சரிக்கை உணர்வுடன் வாழப் பழகவேண்டும்.

வீட்டையும் சூழலையும் மனதையும் பக்குவமாகக் கையாளத் தெரிந்தால் உடல் தானாகவே ஒரு சமநிலையைப் பேணிவிட முயலும்.

மனதுக்கோ உடலுக்கோ நெருடல் நிறைந்த — நெருக்கடியான — ஓர் சூழ்நிலை தென்படுமானால் அதிலிருந்து விடுபடுது அவசியமாகிறது.

வீட்டை ஒரு அலுவலகம் போல பிஸியாக வைத்திருக்கக் கூடாது.

வேலைக்குப் போவோர், வருவோர் — பாடசாலை, 'ரியூஷன்' எனப் பறக்கும் பிள்ளைகள் — வந்ததும் குவிந்து கிடக்கும், கவனிக்கப்படாத ஏராளம் அலுவல்கள் — வீட்டுக்குப் புறப்படும் போது வேலைத்தளத்தின் முடிக்கப்படாத நிலுவைகள் — போட்டாலும் கவனிப்பாரற்று ஓடும் தொலைக்காட்சித் திரை — வீட்டிலும் ஓயாமல் கிணுகிணுக்கும்

(XI ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வெள்ளம்

இவ்வுலக வாழ்விலே சிறப்படைந்தவர்கள் யார்? நிம்மதி வேண்டின் ஆசைகளைத் துற என்கிறார்கள் ஞானிகள். இன்பத்தைத் துறந்து பற்றுப் பாசங்களை விட்டு வாழப் பழக வேண்டும் என்கிறார்கள்.

இப்படியான துறவுதான் சிறந்த வழி என எண்ணி துன்பமே இன்பமெனக் கருதி தம்மை வருத்தி வாழும் துறவறத்தார் ஒரு சாரார்.

அன்பைவிடப் பிறகாரியங்களிலே குறியாக இருந்து அன்பைத் துறந்து—சுற்றத்தைப் பிரிந்து தனித்து வாழும் பாவிகள் பலர்.

இல்லறமே இன்பம் எனக் கருதி இவ்வுலக போகங்களை அனுபவித்து அதுவே இன்பம் என எண்ணி மனைவி மக்களோடும் சுற்றத்தோடும் கலந்து பழகி வாழ்வு இனிக்க இன்புற்று வாழ்பவர்கள் பலர்.

இப்படிப் பலரகத்தினரில் எவர் சிறப்படைகிறார்கள்? எந்த வகை வாழ்வு சிறப்புடையது?

இன்புற்றார் — இன்பம் அனுபவித்து வாழ்பவர்கள்—உலக பாசங்களில் கலந்தவர்கள் கூடச் சிறப்படையலாம். வாழும்போதே மோட்சத்தை அனுபவிக்கலாம்.

எப்படி? அன்பு கொண்டு வாழும் வாழ்வில் அத்தனை சிறப்புக் கிடைக்கும். உலகம் உன்னை உயர்த்திவைக்கும்.

*அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையத்து*
*இன்புற்றார் எய்தும் சிறப்பு — 0075*
*(அன்புடைமை)*

— அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

## [29 - 08 - 1998 முதல் 04 - 09 - 1998 வரை]

| | | | |
|---|---|---|---|
| வி | சனி | | |
| கே | இராசிச் சக்கரம் | | செ புத வெ |
| | | | *சூ ர |
| | | சந் | |

மாற்றம்:

29 – 8 – 1998 இல் விசாக நட்ஷத்திரம் — துலாம் இராசியில் சந்திரன் நிற்கும். 30 – 8 – 1998 இல் சிங்க இராசியில் புதன் மாறும். 2– –9 1998 இல் சிங்க இராசியில் வெள்ளி மாறும்.

அரசியலில் அரசியல்வாதிகள் அபிப்பிராய பேதப்படுவர். சமயவாதிகள் இறுக்கமான ஆலோசனைகளைச் சொல்லுவார்கள். வடக்கு-தெற்கு பகுதிகளில் விட்டு விட்டு தாக்கங்கள் ஏற்படலாம். மக்கள் தெய்வ வழிபாடு செய்ய வேண்டும்.

இந்தியாவில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கும். கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டு சில அரசியல்வாதிகள் திசை மாறுவார்கள். அமெரிக்கத் தலைவருக்கு நல்லதல்ல—மேற்கு நாடுகள் கிழக்கு நாடுகளுக்கு பொருளாதார ரீதியிலான பல அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கும் கிரகப்பலன்கள் காணப்படுகின்றன.

மேடம்: நீங்கள் அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை கொண்டவராக இருக்கிறீர்கள். பிறகு ஏன் தயக்கம்? தொழில்ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் ஏற்பட்டபடி இருக்கும். ஆண்மையின் வீரதாபம் மேலிடும். எதிர்ப்பாலார் உங்கள் சொற்களுக்கு மதிப்பு அளிப்பார்கள். அவர்களின் கடைக்கண்பார்வையில் ஆயிரம் அர்த்தங்கள் உங்கள் மனதில் கற்பனைகளை உருவாக்கி காலத்தைக் கரைக்கும். நிதானமான போக்கு நிச்சயம் வேண்டும். பலரின் சந்தேகங்கள் உங்களை மொய்த்தபடி இருக்கும் அல்லது பாவம் பல செய்துபணத்தைக் குவித்து பரதேசம் போனவர்கள் பரிதவிக்கும் நிலைக்குத் தள்ளப்படுபவர் போன்று மனம் தத்தளித்தபடி இருப்பீர்கள். நாரியில் பிடிப்பு, அடிவயிற்றில் நோ, உஷ்ணபீடைகள், தோலில் வருத்தம், காலில் அடிப்பு என்று ஏதாவது மருந்துகளைத் தேடித்திரியவேண்டி வரலாம். குலதெய்வ வழிபாடு முக்கியமாகும்,

★ அதிர்ஷ்டநாள்; புதன், வெள்ளி.

இடபம்: நெஞ்சில் ஈரமில்லாதவர்கள் சுயநல, ஆணவம் கொண்டு இலாபம் கருதி, தேவையற்ற சண்டித்தனத்தை ஆயுதங்களில் செய்கிறார்களே! — தங்கள் பாவங்களுக்குச் சாட்சிகள் தேடுகிறார்களே என்று பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்களா? 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்று பரமபிதா சொன்ன தேவவாக்கை நீங்கள் கேட்கவில்லையா? தொழில் ஸ்தானத்தில் பலதும் பத்தும் நடக்கும். மேலதிகாரிகள் உதவுவார்கள். எதிர்ப்பாலாரின் அனுதாபம் இருக்கும். அயலவர்கள் எப்படி உங்கள் மீது குற்றம் சுமத்தலாம் எனக் காத்திருப்பர். கவனமாக, நிதானமாகச் செயற்படுங்கள். அடிக்கடி கோவிக்காதீர்கள். நரம்பு செய்ததை நாம்தானே சுமக்க வேண்டும்? கைகால் வலி, நெஞ்சு நோ, சல, மல வருத்தங்கள் கொடுக்கும். ஓய்வு முக்கியமாகும். வீடுமனைக்காக அதிகம் செலவழிக்காதீர்கள்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.

மிதுனம்: சிறுபாவம் செய்தவனை, பலபாவம் செய்தவன் சமநிலைப்படுத்த முயற்சிக்கிறான். இதை அறிந்தும் நீங்கள் பம்பரம் மாதிரி எங்கெல்லாம் ஓடியாடித் திரிகிறீர்கள்! உங்களைச் சந்தித்து நாலுவார்த்தை பேச முடியாது போலிருக்கிறதே!— தொழில்ஸ்தானத்தில் மிகவும் வேகமாகவும், கோபமாகவும் இருப்பீர்கள். இருப்பினும் உங்கள் மீது எவரும் கோபிக்கமாட்டார்கள். ஏனெனில் நீங்கள் எவருக்கும் தீங்கு செய்ய முனைவதில்லை மாட்டீர்கள். எதிர்ப்பாலாரை அனுசரித்துப் போங்கள். அவர்களால் பல உதவிகள் பெறுவீர்கள். தலைவலி, வாதபீடை, உடல்களைப்பு, ஜீரணக் கோளாறுகள் என்பன சிலருக்கு இடைக்கிடை ஏற்படலாம். முழங்கால் வலிக்கு தைலங்கள் பூசி வாருங்கள். சுகம் கிடைக்கும்.

★ அதிர்ஷ்டநாள், புதன்.

கடகம்: ஏன் பயந்து, பயந்து போகிறீர்கள். அது சரியா? இது பிழையா? என அடிக்கடி சிந்திக்கிறீர்கள். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டிதான். இருப்பினும் உங்களின் சமயோசித புத்தியால் எதையும் சமாளித்து விடச் சந்தர்ப்பங்கள் ஏற்படும். உங்கள் கௌரவத்துக்காகப் போராடுவீர்கள். கைகாலில் வருத்தம் அதிகரிக்கும். உடம்பில் வீக்கம், தோல் வருத்தம், சல, மல வருத்தங்கள், சீதோஷ்ண நிலைமாறுபாட்டால் அடிக்கடி உடல்நிலையில் அசதிகள் தோன்றியபடி இருக்கும். உங்களை நாலுபேர் அறிந்து வைத்திருப்பார்கள். ஆயினும் உங்கள் பிடிவாதமான போக்கால் நீங்கள் சிலரைப் பகைத்துக் கொள்வீர்கள். பொருளில் அவதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

சிங்கம்: ஏன் படபடப்பாக இருக்கிறீர்கள்? தனித்து நின்று போராடுவீர்கள். எனக்காகக் கஷ்டப்படவேண்டாம். உங்களுக்காக கஷ்டப்படுங்கள். உலகம் வேகமாகப் போகிறது. உங்கள் காலத்தில் என்ன செய்யப் போகிறீர்களோ என்பது

# ஜோதிட சஞ்சீவி

தான் எனக்கு கவலை என அடிக்கடி சொல்லிக்கொண்டு இருப்பீர்கள். முகஸ்துதியை வெளிப்படையாக விரும்பாவிட்டாலும் — உள்ளுக்குள் விரும்புவீர்கள். ஒருவர் உங்களை விடாது வாழ்த்தியும், போற்றியும் தொழில்ஸ்தானத்தில் சுற்றிச் சுற்றி வருவாரானால் — முதலில் கோபித்துப் பேசினாலும் — அவருக்காக ஏதாவது செய்து

## மகாதேவா ஜோதிடம்

கொடுப்பீர்கள். எதையும் சமாளித்து தாங்கிச் செயற்படுவீர்கள். நெஞ்சு நோ, கைகால் பிடிப்பு, அதிக களைப்பு, உஷ்ணபீடைகள் என்பன இருக்கும். சாப்பாட்டைக் கவனித்துக்கொள்ளுங்கள். தெய்வீகத்தொண்டு தொடர்ந்தபடி இருக்கும். முயற்சிகள் வெற்றியையும், புகழையும் தரும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

கன்னி:– நீங்கள் ஓடி ஓடி பலதையும் செய்துதான் வருகின்றீர்கள். ஆயினும் இடைக்கிடை அலைச்சலும் மந்த நிலையும் ஏற்படத்தான் செய்யும். உங்களுக்குப் போராட்டஉணர்வுகள் அடிக்கடி ஏற்பட்டபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்த பலன்கள் கொடுக்கும். சமயோசிதமாக நடந்து கொள்ளல் [illegible] முதுகுவலி அடிக்கடி களைப்பு என்பன கொடுத்தபடி இருக்

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 65

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | 5 | 6 | 7 |
| 8 | | | 9 | ■ | 10 | | |
| ■ | | ■ | 11 | | | | ■ |
| 12 | | 13 | | ■ | | ■ | 14 |
| 15 | | | ■ | 16 | | 17 | |
| | ■ | 18 | 19 | | ■ | 20 | |
| ■ | 21 | | | | | ■ | |
| 22 | | ■ | 23 | | ■ | 24 | |

சொற்சிலம்பம் இல. 65
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................................

விலாசம்: ..........................................................

..........................................................

.................... இங்கே வெட்டுக ....................

முடிவு திகதி; 04— 09 — 1998

**இடமிருந்து வலம்**

1. நாடாளுமன்றத் தேர்தல் 1977 வரை இந்த அடிப்படையில்தான். 4. விசுவாசம் வைத்திருப்பவன். 8. கன்னம் வைப்பவன் காட்டிச் சொல்வது இதை. 10. கூட்டமாகச் சேர்ப்பதால் வருவது. 11. துக்கப்படு. 12. பிறப்பால் மண்மீது வரும் உரிமை. 15. உலோகத்தை மெல்லியதாகத் தட்டி நீட்டுவதால் வருவது. 16. இந்துக்களின் பெண் தெய்வம். 18. இராமன் பிள்ளை. 20. அழை. 21. பாம்பு. 22. கைகேசி மனதைக் கெடுத்தவள். 23. சிறிய, அற்பமான என்ற பொருளைத் தருவது. 24. நேர் அல்ல; வேதம் என்றும் பொருள்படும்.

**மேலிருந்து கீழ்**

1. எண்ணிக்கை. 2. நெய்தல் பூமி. 3. மூன்று. 5. நறுமணம். 6. நீந்தக்கூடிய பறவை. 7. சடலம் எரிவது இதில். 9. சிவனை வணங்கும் சமயம். 12. விடாய். 13. கடைச் சங்கப் புலவரில் ஒருவர். 14. துயிலிடம். 16. அன்பு கொண்டவன். 17. பாவம் செய்தவன்; அப்பாவி அல்லன். 19. வம்பு செய்பவனை பேச்சு வழக்கில் இப்படி அழைப்பர். 21. ஒரு கிரகம்; கிழமையும் கூட.

**சொற்சிலம்பம் 63 — விடைகள்**

**இடமிருந்து வலம்**

1. ஏகபோகம். 5. குவி. 7. வரைதல். 8. கருது. 9. கவிஞன். 11. தன். 12. மனிதன். 14. வெறி. 15. வலி. 16. குத்தகை. 18. உமது. 20. மதலை. 21. குறும்பா. 22. இல. 23. அதிதி.

**மேலிருந்து கீழ்**

1. ஏவல். 2. கரை. 3. போதகன். 4. கல்வி. 5. குரு. 6. விதுரன். 8. கன்னி. 10. ஞமலி. 11. தறித்தல். 13. தர்மம். 14. வெகுமதி. 15. வகை. 17, தலை. 18. உறுதி. 19. துபாய். 21. குதி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதற்பரிசு: திருமதி சி. இந்திராணி,
தாவரவியல் பகுதி,
யாழ். பல்கலைக்கழகம்.

★ இரண்டாம் பரிசு: செல்வி சுகந்தி குணரட்னம்,
இல: 444, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு: திருமதி ப. சிவபாதசுந்தரம்,
118/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | ரூபா. 150. 00 |
| இரண்டாம் பரிசு:- | ரூபா. 100. 00 |
| மூன்றாம் பரிசு:- | ரூபா. 50. 00 |

★ புதிர்ப்போட்டி இலக்கம் 64 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கண்டுபிடியுங்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆ | த் | ப | னி | ள் | சி |
| பு | மா | னி | தி | ங் | ச |
| ளி | னி | ப | டி | த | ஐ |
| ப் | சி | கு | ங் | சி | யி |
| ஞா | தி | ள் | வை | ன் | று |
| ரை | கா | க | சி | வெ | ஆ |

மேலே உள்ள அட்டவணையில் 36 எழுத்துக்கள் உள்ளன. இவற்றை கொண்டு 7 மாதங்களின் பெயரையும் 5 கிழமைகளின் பெயரையும் உருவாக்க முடியும். ஆனால் ஓர் எழுத்தை ஒரு தடவைதான் பயன்படுத்த முடியும். எல்லா எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். எங்கே அவற்றை கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்.

— சி. கவிதன் —
(ஆண்டு 10, யாழ். ஹாட்லிக்கல்லூரி)
(விடை XI ஆம் பக்கத்தில்)

## எண்ணிப் பாருங்கள்



மேலே உள்ள பட்டத்தில் எத்தனை சதுரங்கள், எத்தனை செவ்வகங்கள், எத்தனை முக்கோணங்கள் உள்ளன? எண்ணிப் பார்த்துக் கூறுங்கள்.

— குணரட்ணம் சஜீவன் —
(யாழ். இந்துக் கல்லூரி)

## உங்களால் இயலுமா?

1. ஒரு கிரிக்கெற் சுற்றுப்போட்டி ஒன்று 'நொக்வுட்' முறையில் நடைபெற்றது. இதில் ஒரு சில கழகங்கள் பங்குபற்றின. இப் போட்டியிலே ஏழு ஆட்டங்கள் இடம் பெற்றன. எனின் எத்தனை கழகங்கள் பங்கு பற்றியிருக்கும்?

2. 1 இற்கும் 100 இற்கும் இடையில் எத்தனை தடவை 3 என்ற எண் வரும் என்பதை எண்ணிப்பாருங்களேன்.

3. நூறு மீற்றர் நீளமுடைய ரயில் ஒன்று மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகத்தில் செல்கிறது. அது ஒரு பாலத்தைக் கடக்க 12 செக்கன் எடுத்தது. அப்படியானால் பாலத்தின் நீளம் என்ன?

4. மூன்று என்ற இலக்கத்தை ஐந்து தடவைகள் பயன்படுத்தி 100ஐப் பெறுவது எப்படி?

5. இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றில் 100m ஓட்டப்போட்டியில் அறுவர் ஓடுகின்றனர். அறுவரும் ஓடிய தூரம் எவ்வளவு?

6. ஐந்து என்ற இலக்கத்தை எட்டுத் தடவைகள் பயன்படுத்திக் கூட்டும்போது 670 விடையாக வரவேண்டும். உங்களால் இயலுமா?

7. நூறு மீற்றர் ஓட்டத்தை 10 செக்கன்களில் ஓடிமுடிக்கக் கூடிய திறமை பெற்ற நான்கு மெய்வல்லுநர்கள், ஒன்று சேர்ந்து 4×100 மீற்றர் அஞ்சல் போட்டியில் ஓர் அணியாகப் பங்குபற்றுகின்றனர். அந்த அஞ்சலோட்டத்தின் நானூறு மீற்றர் தூரத்தையும் அந்த அணி எவ்வளவு நேரத்தில் ஓடி முடித்திருக்கும்? 40 செக்கன்களிலா? அதிலும் கூடிய நேரத்திலா? அல்லது குறைந்த நேரத்திலா? உங்கள் முடிவுக்குக் காரணம் என்ன?

—வானம்பாடி யோ. தினேஸ்குமார்—
(விடைகள் XI ஆம் பக்கத்தில்)

# இலக்கியக்கியங்கள் கூறும் நாகணவாய்ப்புள்!

சாதாரணமாக வீட்டுத் தோட்டங்களில் காணப்படும் மைனா எல்லோருக்கும் தெரிந்த பறவை. காலையிலும், மாலையிலும் இது எழுப்பும் பேரொலி நெடுந்தொலைவு கேட்கும். பொழுது சாய்ந்ததும் மைனாக்கள் ஒன்றுகூடி மாங்களிலும் உயரமான கட்டடங்களின் பொந்துகளிலும் அடையும்.



மைனா ஓர் அழகான சிறு பறவை. இதன் உடலில் கறுப்பும், இருண்ட பழுப்பு நிறமும் கலந்திருக்கும். தலை, கழுத்து, மார்பு ஆகியவை கறுப்பாக இருக்கும். இறகும் வாலும் வெள்ளைப் பட்டை தீட்டியது போல இருக்கும். கால்கள் மஞ்சள் நிறமானவை. இதன் அலகு தடித்தும், வளைந்தும் மிகவும் குட்டையாகவும் இருக்கும். அலகின் நுனிப் பகுதி மஞ்சள் நிறமுள்ளது. கண்களுக்குப் பின்புறம் நீளமாக மஞ்சள் பட்டை காணப்படும்.

மைனாவை 'நாகணவாய்ப்புள்' என்று இலக்கியங்கள் கூறும்.

மைனாக்கள் இணையாகவும், சிறு கூட்டங்களாகவும் காணப்படும்.

**பிராணிகள் உலகம்**

இவை புல் தரைக்கு வந்து அங்குள்ள புழு, பூச்சிகள், வெட்டுக்கிளி முதலியவற்றைப் பிடித்துத் தின்னும். இவை அத்திப்பழங்களை விரும்பி உண்ணும். மைனாக்கள் அதிகத் துணிவுள்ளவை. தாம் வழக்கமாக இரைதேடும் புல்வெளிக்கு வேறு பறவைகள் வந்தால், இரண்டே மைனாக்கள் அவற்றை விரட்டியடித்துவிடும்.

இந்தியா, இலங்கை மலேசியா ஆகிய நாடுகளிலும், தென்மேற்குப் பசிபிக் தீவுகளிலும் இதைக் காணலாம்.

உயரமான மரம், கட்டடம் முதலியவற்றின் பொந்தில் மைனா கூடு கட்டுகிறது. இது ஒரு தடவைக்கு மூன்று முதல் ஐந்து முட்டைகள் வரை இடும்.

செல்லப் பறவையாக மைனாவை வீடுகளில் வளர்ப்பதுண்டு. கிளியைப் போலவே மைனாவையும் பேசப் பழக்கலாம்,





## காலங்கள்

சித்திரை, வைகாசி மாதங்கள் இரண்டும் திருநாள் காணும்
இளவேனிற் காலம்.
ஆனி, ஆடி மாதங்கள் இரண்டும் அடித்திடு காற்றின்
முதுவேனிற் காலம்.
ஆவணி, புரட்டாதி மாதங்கள் இரண்டும் மாமழை பெய்யும்
கார் காலம்.
ஐப்பசியில் தீபாவளி, கார்த்திகையில் திருவிளக்கு அழகிட
வருவதோ
குளிர் காலம்.
மாலைப் பனியில் மார்கழியும், தை மாதப் பொங்கல்
மாட்சிமை தருவதோ
முன்பனிக் காலம்.
காலைப் பனியில் மாசி, பங்குனி காலம் செல்லுதல்
பின்பனிக் காலம்.

— பிரான்சிஸ் ஜோண்சைக்ஷன் —
(ஆண்டு 6,
சென். ஜோசப் கொழும்புத்துறை வித்தியாலயம்)

## நிரப்புங்கள்!



அருகில் உள்ள அட்டவணையை 1 முதல் 49 வரையுள்ள எண்களால் நிரப்ப வேண்டும். நேர் கோட்டில் உள்ள ஏழு சதுரங்களைக் கூட்டும் போது விடை 173 ஆக வர வேண்டும். முடியுமா என முயற்சியுங்கள்.

- எஸ். வி. செல்லையா
(விடை XI ஆம் பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளி மான்

புள்ளிப் புள்ளி மானே
துள்ளித் துள்ளி ஓடிவா
அள்ளி இந்தப் புள்ளியை
யார் உனக்குத் தந்தது?

கண்ணிரண்டும் கூர்மை
காதிரண்டும் கேண்மை
பெண் இனத்தின் சாயல்
தெரியும் உந்தன் வடிவில்.

வண்ண வண்ணப் பூக்கள்
வகை வகையாய்க் கனிகள்
கண் நிறைந்த காட்சி
காண்பதிலே மகிழ்ச்சி.

பென்னம் பெரும் காட்டில்
தன்னந் தனி செல்கையில்
உன் உடலில் முள்ளுகள்
உறுத்துவதும் இல்லையோ?

எட்டி ஓடும் மானே
என்னிடம் நீ வந்தால்
புட்டிப் பாலும் தந்து
போற்றி உன்னை வளர்ப்பேன்.

கட்டில் மெத்தை தருவேன்
காதணிகள் தருவேன்
குட்டிப் புள்ளி மானே
குதித்து ஓடி வாநீ.

## உயிர் எழுத்துக்களின் வழியில் உயர்வோம்!

அன்பைப் பேணுவோம்.
அறிவை வளர்ப்போம்.

ஆணவம் துறப்போம்.
ஆசியைப் பெறுவோம்.

இன்சொல் பேசுவோம்.
இருப்பதைப் பகிர்வோம்.

ஈவது கைவிடோம்.
ஈரநெஞ்சுடன் வாழ்வோம்.

உண்மை பேசுவோம்
உதவிகள் செய்வோம்

ஊருக்கு உழைப்போம்
ஊக்கமது கைவிடோம்

எண்ணெழுத்து கற்போம்.
எம்மையும காப்போம்.

ஏர் தன்னைப் பிடிப்போம்.
ஏற்றம் கண்டிடுவோம்.

ஐங்கரனைத் தொழுவோம்.
ஐயங் கொள்ளோம்.

ஒழுக்கம் பேணுவோம்.
ஒற்றுமை வளர்ப்போம்.

''ஓம்'' என்று சொல்லுவோம்.
ஓதுவதைக் கைவிடோம்.

ஔவியம் பேசோம்.
ஔவையை மறவோம்.

— ச. செல்வக்குமார் —
(ஆண்டு 11, யாழ். மத்திய கல்லூரி)

## நொடிப் பொழுது

1. வாய் இல்லாதவன்; வார்த்தை சொல்வான். அவன் யார்?

2. முக்காடு போட்டால் மூலையில் இருப்பான்: காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடுவான். அவன் யார்?

3. ஆடையில்லாத கறுப்பழகி ஆடிப்பாடுகிறாள். அவள் யார்?

4. கண்டால் பார்க்கலாம் கையால் பிடிக்க முடியாது. அது என்ன?

5. அடிக்காமல் கண்ணீர் விடுபவன் யார்?

6. இங்கிருந்து பார்த்தால் இரும்புக் குண்டு; எடுத்துப் பார்த்தால் இனிய பழம். அது என்ன?

7. இளமையிலே கறுத்து இருக்கும்; முதுமையிலே வெளுத்திருக்கும்; அது என்ன?

8. சிவப்புத் தம்பி, வாயைத் திறந்தால் மூடமாட்டான். அவன் யார்?

9. உன்னை வந்து அமுக்கும். ஆனால் உனக்குத் தெரியாது. அது என்ன?

—கே. துஷியந்தன்—
(ஆண்டு 8, பரியோவான் கல்லூரி.)

### விடைகள்

1) தபால். 2) பேனா. 3) இசைத்தட்டு. 4) நிழல். 5) ஐஸ்பழம். 6) பனம்பழம். 7) தலைமயிர். 8) தபால் பெட்டி. 9) தூக்கம்

# ஒரு வேளைக்காவது....

(Vஆம் பக்கத் தொடர்ச்சி)

அவனுக்கு பதில் சொல்ல தோன்றவில்லை.

"...சின்ன வேலைதான்... பின்னாலை வா..."

அவள் அவனைக் கிணற்றடிக்குக் கூட்டிச்சென்றாள்.

"இதைச் சுத்தப்படுத்தித்தா...பாத்தியைக்... கட்டி ...என்னபேசாம... நிக்கிறாய் செய்வியா மாட்டியா?"

அவன் இப்போதும் ஒன்றும் பேசவில்லை.

"...என்னடா பேசாத பொடியனாய்க்கிடக்கு..."

அவனை ஏறஇறங்கப் பார்த்தாள். சோர்ந்துபோன மெலிந்த தேகம் களைத்துப்போய் இடுங்கிப்போய் இருந்த கண்கள்...அவளுக்குச் சொல்லியிருக்க வேண்டும்.

"ஒண்டும் சாப்பிடேல்லையே?"

அவன் தலையை மெல்ல அசைத்தான். அவள் யோசித்தவள் "பொறு வாறன்" என்றாள்.

உள்ளே போனாள். கையில் ஒரு தட்டோடு திரும்பி வந்தாள்.

'இந்தாபிடி ......இராத்திரி யான்தான் நான்இன்டைக்கு விரதம்...காலைமைக்கு ஒண்டும் செய்யேல்லை"

"அடவாடவா...வந்து பிடியடா...வெக்கறையான பெடியனாக் கிடக்கு...?"

அவன் தயங்கி தயங்கி வந்து வாங்கிக்கொண்டான். தட்டில் பிட்டு குவிந்திருந்தது. அதன் நடுவில் கறி சிவப்பாய் கொஞ்சம் வழு வழுப்பாய் வழிந்திருந்தது. புளித்த வாசமாய் மூக்கை நிறைத்தது. நாவில் நீர் சுரந்தது. விழுங்கிக் கொண்டான். அவனுக்கு அப்போது தான் தங்கையின் நினைவு வந்தது. கையை உதறிக் கொண்டான்.

"எனனடா...?"

"தங்கச்சியைத் தனிய விட்டுட்டு வந்தனான். நித்திரையாய்க் கிடந்தவள் எழும்பினால் அழுவாள். ஓடிப்போய்க்கூட்டிக்கொண்டு வரட்டே வந்து செய்து தாறன்"

இப்பொழுதுதான் அவன் வாய்திறந்தான்.

"சரி ஓடிப்போய்வா ... கெதியாசுத்தப்படுத்தோனும் என்ரை பேரப்பெடியள் இஞ்சை வரப்போகுதுகள்... என்ன..."

அவன் தட்டை வைத்து விட்டு வீட்டுக்கு ஓடத்தொடங்கினான். பிட்டும் பழங்கறியும் புளிச்சவாசனையும் அவனைத் துரத்தின. பிட்டு சாப்பிட்டு எத்தனை நாளாகிறது? நிவாரணத்தில் கிடைக்கின்ற மாவை அம்மா விற்றுவிடுவாள். கிடைக்கிற காசில் மேலும் அரிசி வாங்குவார்கள். கஞ்சி காய்ச்சிக்குடிப்பார்கள். சில நேரங்களில் கடையில் ஒரு பார்சல் சோறு எடுத்து அதை இந்தச் சோறோடு கலந்து அம்மா கவளமாய்த் திரட்டித் தருவாள். 'எனக்கு கீரை வந்திருக்குது. உனக்கு சரட்டுண்டு' என்று இவனும் தங்கையும்போட்டி போட்டுச் சாப்பிடுவார்கள். மற்றைய வேளைகளில் வறட்டுப் பாணை தாடை வலிக்க உண்ணவேண்டும். ஒரு நாளைக்காவது பிட்டுச்சாப்பிடவேண்டும் என்று ஆசை எழும். அம்மாவைக் கெஞ்சுவான்.

வீட்டுத் திண்ணையில் தங்கையைக் காணவில்லை. பாய் வெறுமையாய் இருந்தது. இவனுக்கு 'திக்' கென்றது. சங்ககடை வாசலில் இவனைக் கண்டதும் கூப்பிட்டார்கள்.

"எங்கையடா குழந்தையைத் தனிய விட்டுட்டுப் போனனி?... சைக்கிளோடை அடிபடப்பாத்துது."

"...உங்கைபார் பீச்சிக் கால்கையெல்லாம் பிரட்டிக் கொண்டு நிக்குது"

அவன் குழந்தையைத் தூக்கினான். மல நாற்றம் அடித்தது.

"கோத்தை எங்கை ஊர் சுத்தப் போட்டாள்" கடை வாசலிலிருந்த ஆச்சிக் கிழவி எச்சில் பறக்கக் கேட்டாள்.

இவன் மௌனமாய் அவளைத் தூக்கிக்கொண்டு கிணற்றடியை நோக்கி நடந்தான். குழந்தை கண்கள் வீங்கி இடையிடையே விக்கிக் கொண்டிருந்தது.

"அழாதையனை. அம்மா வந்துட்டா வெல்லை"

கால்கையைக் கழுவினான்.

"அண்ணா பிள்ளைக்கு பிட்டுத்தாறனணைவாணை' அவளைத் தூக்கிவந்து திண்ணையில் நிறுத்தி பழைய சேலையால் துடைத்தான். அவளைத் தூக்கிக்கொண்டு நடந்தான். ஓட முடியவில்லை. குழந்தை தோளில் தலைவைத்திருந்தது. இடையிடையே விம்மியது.

"...அண்ணா பிட்டும் குழம்பும் குழைச்சு உருட்டி பிள்ளைக்கு ஒரு வாய்..." என்று கதை பேசிக்கொண்டு நடந்தான்.

சின்னம்மா வீட்டு கேற்றடியில் மோட்டார் சைக்கிளொன்று நின்றிருந்தது. இவன் அருகில் செல்ல சின்னம்மா கேற்றைத் திறந்து வெளியில் வந்தாள். நீலநிறத்தில் சேலையுடுத்து அலங்கரித்திருந்தாள். அருகில் கூடவே ஓர் இளைஞனும் பேசிக்கொண்டு வந்தான். இவன் நிற்பதை அவர்கள் கவனிக்கவில்லை. சின்னம்மா திரும்பக் குனிந்து கேற்றைப் பூட்டத்தொடங்கினாள்.

"...முதல் பிளைற் எத்தினை மணிக்கு...?"

"...ஒருமணிக்கோ இரண்டு மணிக்கோ தெரியேல்லை... முதல் பிளைற்றுக்குத்தான் வாறதெண்டவை... "

"...முன்னமே தெரிஞ்சிருந்தா இவரை மறிச்சிருப்பன். இவன்இப்பிடித்தான்ராதம்பி எப்பவும் திடீரென வருவன்... போவன்"

"இல்லையண்ரி பட்டெண்டு கிளியரன்ஸ் கிடைச்சுட்டுதாம்"

சின்னம்மா பூட்டிவிட்டுத் திரும்பினாள். இடுப்பில் குழந்தையோடு நிற்கும் அவனைக் கண்டாள்.

"...அட உன்னை மறந்து போனன்..." திரும்பி பூட்டைப் பார்த்தாள். "...அவசர வேலையொண்டு வந்துட்டுதடா தம்பி...அச்சாப் பிள்ளையெல்லே நாளைக்கு காலமை வெள்ளனவா... வாவன் ... ஆய் ... உனக்கு காசும் தரலாம்...என்ன?..."

இளைஞன் மோட்டார் சைக்கிளை உசுப்பினான். சின்னம்மா பின்னுக்கு ஏறி உட்கார்ந்தாள். அது விசுக்கெனப் புறப்பட்டு மறைந்தது. பெற்றோல் வாசனை எஞ்சியிருந்தது.

செந்தூரனும் தங்கையும் சிலைபோல அந்தத் திக்கைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பிட்டின் புளிச்ச வாசனை ஞாபகத்துக்கு வந்தது. அழுகை பீறிட்டது. தங்கைச்சியை ஒருகையால் இறுக அணைத்துக்கொண்டான். அந்தக் கேற்றின் கம்பிகளுக்கிடையில் தலையைப் பதித்துக்கொண்டான். சூரியன் உச்சிக்கேறி சாயத் தொடங்கியிருந்தது.

குழந்தைதலையையுயர்த்தி 'அம்மா' என்று கத்தினாள். அவன் திரும்பினான்.

தொலைவில் அம்மா வந்து கொண்டிருந்தாள். சேலையில் முட்டாக்காய் போட்டிருந்தாள். பெரிய வயிற்றுடன் தள்ளாடி நடந்தாள். கையில் வயற்பையை சுருட்டிவைத்திருந்தாள். ஓடிப்போய் அம்மாவின் கால்களைக்கட்டி அழவேண்டும் போலிருந்தது.

குழந்தை அம்மாவிடம் தள்ளினாள்.

"...இஞ்சை என்னடா செய்யிறாய்?" மூச்சு வாங்கியபடியே அம்மாகேட்டாள்.

"அப்பா எங்கை?" இவன் பதில் சொல்லாமல் கேட்டான்.

"வாட்டிலை மறிச்சுப் போட்டினம்" நின்று ஒரு முறை பெரிதாக மூச்சை இழுத்து விட்டுக் கொண்டு சொன்னாள்.

"பாற்றா அந்த மனுசனை ...காலைமையும் போய்ச் சாடையாய்ப் போட்டுட்டு வந்திருக்கிறார். ஆஸ்பத்திரிலை மணத்திலை பிடிச்சுப் போட்டு பேசிப்போட்டாங்கள்..."

"ரத்தங்காணாதாம் ... ... ஈரல் எரிஞ்சு போச்சுதாம்... ரத்தம் ஏத்தோனும். ரத்தத்துக்கு எங்கைபோறது...சத்துக்கு...என்ன செய்யிறது? வயித்தலை பிள்ளையோடை எனக் கென்ன செய்யிறதெண்டே தெரியேல்லை சாகலாம் போலக் கிடக்கு..."

அம்மா இவ்வளவு நேரம் அடக்கி வைத்திருந்தவைகளை இவனை பெரிய மனிதனாய்கருதி கொட்டினாள். அவனுக்குள் பசி மறந்து போய் பய உணர்வு எழுந்தது.

"...தம்பி?"

"சின்னாம்பியும் நிக்கிறான், பாக்கட்டும்"

குழந்தை அம்மாவின் கையிலிருந்த பையை இழுத்துப் பார்த்தாள் பால் குடிக்க மார்புச்சட்டையை இழுத்தாள்.

"பாண்...வாங்கிக்கொடுத்தனியே..."

"இல்லை பாண் முடிஞ்சு போச்சாம்..."

அவன் மெல்லிய குரலில் சொன்னான்.

அவள் நின்றாள்... "கடவுளே இராத்திரியும் சாப்பிடேல்லை பாவியடா நான்..." தலையிலடித்தாள். அழுகை விம்மலாய் வயிற்றிலிருந்து எழுந்து தொண்டை புடைத்தது. அழுகை வெடிக்காமல் உதடுகளைக் கடித்து விழுங்கிக் கொள்வதைப் பார்த்தான். கண்ணீர் உடைந்து கன்னத்தில் வழிந்தது.

"...இருந்த காசையும் சின்னாம்பிட்டைக் குடுத்திட்டு வந்தனான்... சொல்லிக் கொண்டே பையுக்குள்சேலை முடிச்சுக்குள் ஏதாவது சில்லறைகள் அகப்படாதா என்று தேடினாள். 'பாப்பம்... ரத்தினமண்ணையைக் கேட்டுப் பாப்பம்..." தனக்குள் சொல்லிக் கொண்டு நடந்தாள். குழந்தையை இறுக அணைத்து முதுகில் தட்டினாள். அவன் அவள் முகத்தைப் பார்த்தவாறே அருகில் நடந்தான்.

"அம்மா நாங்கள் நின்டம் அந்த வீட்டுக்காரி நாளைக்கு என்னைவரச் சொல்லியிருக்கிறா..."

"...என்னத்துக்கு?"

"வளவைத் துப்புரவாக்கித் தரட்டாம்... காசு தருவாவாம்" அம்மா அவன் தலையைத் தடவினாள். ஒன்றும் பேசவில்லை.

"நாளைக்கு காலைமை நான் போப்போறன்" அவன் மீண்டும் சொன்னான்.

தூரத்தில் ரத்தினம் ஸ்ரோர்ஸ் தெரிந்தது. எதிரில் பள்ளி முடிந்து பிள்ளைகள்... வந்து கொண்டிருந்தார்கள்.

(யாவும் கற்பனை)

★

## பலூன் மூலம் உலகை சுற்றும் முயற்சி தோல்வி

பலூன் மூலம் உலகைச் சுற்றிவரமுயன்ற நான்காவது முயற்சியும் தோல்வியில் முடிந்தது.

அமெரிக்கரான கி. பொசிட் என்பவரே இந்த முயற்சியில் தோல்வி அடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடி, மின்னலுடன் வீசிய புயல்காற்றினால் பலூன் தென்பசுபிக் சமுத்திரத்தில் சாலமான் தீவுக்கு அருகில் சுறா மீன்கள் பெருமளவு உள்ள பவளப் பாறைகள் கொண்ட கடலில் வீழ்ந்தது.

★

## இந்த வார இராசி...

(VIIIஆம் பக்கத் தொடர்ச்சி)

கும். சங்கீதஞானம் அடிக்கடி ஆறுதல் தரும். எதிர்ப்பாலாரை அனுசரித்து நடவுங்கள். அவர்களின் ஆலோசனைகளால் அதிக நன்மைகள் ஏற்படும். பனைமரத்தின் கீழிருந்து பாலைப் பருகினாலும் பார்ப்பவர் என்ன நினைப்பார்கள்? அதுபோலத்தான் நீங்கள் நல்லதைச் செய்ய நினைத்தாலும் உங்களைச் சுற்றியுள்ள பனைமரம் போன்ற சிலரால் — பலர் உங்களைத் தவறாக எண்ண இடம்உண்டு. தெய்வ வழிபாடு முக்கியமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வெள்ளி.

துலாம்: இக்காலங்களில் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவிதமாக காரியங்களைச் சாதிப்பதில் கெட்டிக்காரர் நீங்கள். காற்றுள்ளபொழுதே தூற்றிக்கொள்ளல் வேண்டும். எதிர்ப்பாலாரின்ஆலோசனைகள் உங்களுக்கு அதிக நன்மைகளைக் கொடுத்தபடி இருக்கும். தொழில் ஸ்தானத்தில் ஒவ்வொரு படிகளிலும் மிகக் கவனமாக மெல்ல, மெல்ல ஏறி வந்தபடி இருப்பீர்கள், சங்கீத ஞானத்தால் உங்களுக்கு செலவு அதிகரிக்கும். பலரின் உதவிகள் தக்க நேரங்களில் வந்தபடி இருக்கும். வயிற்றுக்கோளாறு, சலமல வியாதிகள், தோல் வருத்தங்கள், கைகால் விறைப்பு, வாய்வு வியாதிகள் அடிக்கடி வந்தபடி இருக்கும். பொருளிலும், கொடுக்கல் வாங்கலிலும், வாகனத்திலும் அவதானமாக இருக்கவும்.

★ அதிர்ஷ்ட நாள்: புதன், வியாழன்.

விருச்சிகம்: தொழில்ஸ்தானத்தில் புதிய திட்டங்களும் பல நண்பர்களின் உதவிகளும் கிடைத்தபடி இருக்கும். எதிர்ப்பாலாரின் உதவிகள் கிடைக்கும். இக்காலத்தில் பல நண்பர்களால் பல உதவிகள் கிடைக்கும். இளஜனங்கள் உதவி செய்வார்கள். குடும்பத்தினருக்காக அதிக பிரயாசைசெய்து அவர்களின் நன்மைக்காக போராடியபடி இருப்பீர்கள். புத்திரர் அல்லது சகோதரங்களால் நன்மைகள் ஏற்படும். பல விஷயங்களை மிகவும் அடக்க ஒடுக்கமாகக் கண்டு, உண்மைகளை அறிய முற்படுவீர்கள். உண்மைக்கு மாறானவர்களை எதிர்க்கவும் தயங்க மாட்டீர்கள். நெஞ்சு அடிக்கடி படபடக்கும். வாய்வுத் தொல்லை, பித்தக்கோளாறுகள், கிருமித்தாக்கம், வயிற்றுப் பொருமல், உஷ்ண பீடைகள் என்பன இருக்கும். வைத்தியம் செய்து வரவும்.

★ அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.

தனுசு: விக்கிரமாதித்தன் கதைகளில் வரும் வேகம், விவேகம் மந்திரஜாலங்கள் எல்லாம் கலந்த ஒருவித மாயத்தோற்றமான செயற்பாட்டுக்காலமாகும். கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலை ஏற்படச் செய்யும். கருத்துடன் தொழில்ஸ்தானத்தில் எதைச் செய்தாலும் கலகமே ஏற்படும். கட்டுப்பாடு இல்லாமல் கடன் வாங்காதீர்கள். அதனால் அடிக்கடி குழப்பநிலைதான் ஏற்படும். எல்லோரையும் உற்சாகப்படுத்தியபடிதான் இருப்பீர்கள். இடுப்புவலி, நெஞ்சில் படபடப்பு, சீதோஷ்ணநிலை மாறுபாட்டால் அடிக்கடி உடல்நிலையில் பாதிப்புக்கள், கைகாலில் விஷபீடைகள், சளித்தொல்லைகள்எனக்கொடுத்தபடி இருக்கும். தகுந்த வைத்தியங்கள் செய்துவரவும்.

★ அதிர்ஷ்டநாள்: புதன், வியாழன்.

மகரம்: அதிகமான யோசனைகள்—அளவுக்கு மீறிய கற்பனைகள் அடிக்கடி வந்தபடி இருக்கும். வாழ்வும்—தாழ்வும் இறைவன் விட்ட நியதிப்படிதான் நடக்கும். தொழில்ஸ்தானத்தில் பெரியவர்களின் உதவிகள் இருக்கும். எதிர்ப்பாலாருடன் அடிக்கடி கருத்து வேற்றுமைகள் ஏற்படச் செய்யும். வயிற்று நோ, வாய்வுக் கரைச்சல், கைகால் உளைவு, நரம்பு பாதிப்பு என்பன கொடுக்கும். மூட்டில் வலிகள் சிலருக்குக் கொடுக்கும். ஓய்வு முக்கியமாகும். எந்த அலுவலையும் எடுத்த வேகத்தில் செயற்படுத்தமாட்டீர்கள். விட்டுவிட்டு மெல்ல மெல்லத்தான் செய்வீர்கள். இடமாற்றங்களோ, —பிரயாணங்களோ அவசரப்பட்டுச் செய்யவேண்டாம்.

★ அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி.

கும்பம்: எந்த விஷயத்தையும் அளவுக்கு மீறிக் கற்பனை செய்வதிலேயே காலத்தைச் செலவு செய்வீர்கள். அழகுபடுத்துவதிலே அதிக செலவுகளையும், அதிக யோசனைகளால் அதிக நேரங்களையும் விரயமாக்குவீர்கள். காலத்திற்குத் தகுந்தபடி செயற்படுங்கள். எவரையும் எடுத்த வேகத்தில் எதிர்க்காதீர்கள். தொழில்ஸ்தானத்தில் உங்கள் எண்ணப்படி நடந்து மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகுவீர்கள். நண்பர்களும் எதிர்ப்பாலாரும் உதவிகள் செய்வார்கள். நீங்கள் திட்டமிட்டு எதையும் செய்யமாட்டீர்கள். நரம்புச்சோர்வுக்கு வைத்தியம் செய்யுங்கள். சளி, நெஞ்சு நோ, வாய்வு, கைகால் உளைவு, உள்ளுறுப்புக்கள் வேதனை என்பன மாறி மாறிக் கொடுக்கும். பழைமை பேசிப் பெருமை கொள்ளும் காலமாகும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

மீனம்: பழைமையும். புதுமையும் சகஜம். எதிர்நீச்சல் அடித்தபடி இருப்பீர்கள். பட்டும் — படாமலும் — இடைக்கிடை விட்டுவிட்டுக் காரியமாற்றியபடி இருப்பீர்கள். எதற்கும் இரட்டை மனப்போக்கு இருந்தபடி இருக்கும். சளித்தொல்லையால் அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு மருந்து எடுக்கச்செல்வீர்கள். தொழில்ஸ்தானத்தில் மாற்றங்கள் சகஜம். புதிய திட்டம், இடமாற்றம் செய்ய யோசனைகள் ஏற்படும். ஆயினும் அதிக செலவுகள் இருக்கத்தான் செய்யும். வாய்வுத் தொல்லை, நெஞ்சில் வலி, நாரிநோ, கைகால் பிடிப்பு, இருமல், காய்ச்சல் என அடிக்கடி ஏதாவது ஒரு வருத்தம் எட்டிப்பார்த்தபடி இருக்கும்.

★ அதிர்ஷ்டநாள்: சனி, வியாழன்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலும் உள்ளமும்...

(VII ஆம் பக்கத் தொடர்)

தொலைபேசி என நினைமைகள் மோசமடையும்போது வீடு நாகமாகிவிடும்.

பிள்ளைகளிடம் விடப்பட்ட கணனிகள், அவற்றின் குறிக்கோள் இன்றி எப்போதும் எதையாவது தேடித்தேடி சலிக்கும் மனசுபாவம், விரிக்க நேரமின்றி மடிப்புக் குலையாமலே கிடக்கும் பத்திரிகைகள்.—இப்படி நாளாந்தம் பெருகும் வசதிகளுக்கிடையிலும் அவஸ்தைப்படும் மனிதன்.

இதன் விளைவு ஒரு நிம்மதியற்ற சமூகம் உருவாகிக்கொண்டிருக்கிறது என்பது தான். இவ்வசதிகளுக்கு மேலாக சமூகச் சீர்கேடுகளும் மனிதனைப்பல திசைக்கும் சிதறவே வைக்கின்றன.

தொலைக்காட்சியைப் பார்க்கப் போனால் கணக்கின்றி விரியும் ஒளிபரப்புக்களில் எதைப்பார்ப்பது எதை விடுவது எனத் தவிக்கும் மனம், மாறி மாறி எதையுமே ஒழுங்காகப் பார்க்க விடுவதில்லை. கல்வியையும் தூக்கத்தையும் கெடுக்க இது ஒன்றே போதும்.

வீட்டையோ அலுவலகத்தையோ மனதுக்குத் திருப்தியான விதமாக ஒழுங்குபடுத்திவைக்காத போது தலை சுற்றுகிறது. வேண்டியதை எடுக்க வீண் விரயம் ஆகிறது. இது நேரத்தையும் சக்தியையும் வீணடிக்க வழிகோலும். எனவே எதையும் ஒழுங்காக வைத்து எடுக்கப் பழகுவது பளுவைக் குறைக்கவே உதவும்.

எவ்வளவுதான் தலை முழுகும் வேலை இருந்தாலும் மேசையை ஒழுங்காகவும் வெளியாகவும் வைத்திருந்தால்தான் வேலை செய்யக் கைகால் ஓடும்.

பத்துப்பேர் உள்ள வீட்டில் முப்பது சோடி செருப்பு வாசலில் சிதறிக் கிடக்கும். என்றைக்கும் இந்த நிலைமை மாறாது என்றால் பார்க்கும போதெல்லாம் தலைவலி தான். பாடசாலைக்குப் போய் வந்து டியூஷனுக்குப் பறக்கும் பிள்ளைகள் கிளறி எறியும் புத்தகங்கள் வீட்டில் பட்டி தொட்டியெல்லாம் தடக்கிக் கிடக்கும்.

அவரவர் அப்பப்போது தன் பங்குக்கு இவற்றையெல்லாம் ஒழுங்காக்கி வைக்காத போது வீடு நரகமாகி விடுவதில் புதினம் இல்லை. வீட்டை ஒழுங்காக வைத்திருக்கும் போது மனமும் இலேசாக இருக்கும்; நிம்மதி பிறக்கும்.

உங்கள் சூழலை விருப்பத்துக்கு ஏற்றவாறு திட்டமிட்டு ஒழுங்குபடுத்துவது வேலைகளைப் பளுவின்றிச் செய்ய உதவும். கைக்கு எட்டும் வகையில் தொலைபேசி, தொலைக்காட்சியினை இயக்கும் றிமோட், எழுது கருவிகள், காகிதங்கள் போன்றவற்றை வைத்திருப்பது சௌகரியமாக இருக்கும். இது சோம்பேறித் தனத்தை வளர்த்து உடலைப் பழுதாக்கி விடும் என நினைப்பவர்கள் நடந்துபோய் பேசும் தொலைவில் தொலைபேசியை வைக்கட்டும். அதே போல் றிமோட் இன்றி தொலைக்காட்சிப் பெட்டியை போய் தொட்டு இயக்கட்டும். அவரவர் வசதிக்கும் மனத் திருப்திக்கும் ஏற்பவே சூழல் ஒழுங்கு அமையும்.

ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது. ஆனால் காரியத்தில் கண்ணாகவும் இருக்க வேண்டும். கூடி வேலை செய்யும் போது பளு குறைவாக இருக்கும்.

வீட்டைப் பொறுத்தவரை தத்தமது வேலைகளை அவரவரே இயன்றவரை கவனித்தால் குடும்பத் தலைவரிடமோ தலைவியிடமோ சுமைகள் குவிதலைத் தடுக்க இயலும். உதாரணமாக முன் சொல்லப்பட்ட முப்பது சோடி செருப்புகளை கழுவி மினுக்கி அடுக்கி வைப்பதை அல்லது அத்தனை பேரின் ஆடைகளைத் துவைப்பதை வீட்டில் ஒருவருக்குரிய கடமையாகவே தினமும் கருதி வந்தால் அது அவரின் மனதையும் உடலையும் விரைவில் பாதிக்கத்தான் செய்யும்.

அடுத்தவர் பொறுப்புக்களிலும் சுமைகளிலும் அவரவர் பங்கெடுக்கப் பழகிக்கொள்வது எல்லோரினதும் ஆரோக்கியத்துக்கும் உகந்தது. அலுவலக நிலைமைகளைப் பொறுத்தவரையிலும் கூட இத்தகைய அறிவுரைகள் பொருந்தும்.

தேவைகள் அதிகரித்து வரும் உலகில் மனிதன் தினமும் வீட்டுக்கு வாங்கி வரும் பொருள்களின் எண்ணிக்கை அதிகம். வாங்கும் பொருள்கள் வீட்டை நிறைக்கும் போது தூசி தட்டித் துடைத்து அடுக்கும் வேலைகள் அதிகம். அவற்றைப் பராமரிப்பது கடினம். வீடு நிறைய பொருள்கள் ஒரு தேவையற்ற சுமைதான்.

எனவே அவசியமற்றவற்றை வாங்கிக் குவிப்பதைத் தவிர்க்க வேண்டும். அதே போல இருப்பவற்றில் தேவையற்றவற்றை இனங்கண்டு அகற்றிவிடவும் வேண்டும். இத்தகைய செயற்பாடு நிதி நிலைமையையும் உடல் நிலைமையையும் தக்க வைக்கவே உதவும்.

மனச்சுமையோ —வேலைப் பளுவோ எதுவானாலும் வீட்டுச் சோலியை அலுவலகத்துக்கோ, அலுவலகச் சுமையை வீட்டுக்கோ எடுத்து வருதலைத் தவிர்ப்பது அவசியமாகிறது. இல்லாதபோது நிலைமை இரண்டையுமே நரகமாக்கிவிடும்

உளவியல் நிபுணர்கள் கூறும் இத்தகைய ஆலோசனைகள் சொல்லும் போது சுலபமாகவே தென்படுகின்றன. கடைப்பிடிக்கப் போனால் சாத்தியமானவையாகத் தெரிவதில்லை. அது தான் சிக்கல். ஒரே நாளில் மனிதனை மாற்றிவிடுவது கடினம். மெல்ல மெல்ல மன மாற்றம் ஏற்படுத்தத் தயாராகினால் நாளடைவில் வாழ்க்கை இனிக்கத்தான் செய்யும். இதயம் இதமடையத்தான் செய்யும். உடலும் உள்ளமும் நலமாகும்.

(முற்றும்)

★

## விடைகள்

IX ஆம் பக்கத்தில் சிறுவர் சுடர் பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு:-

### கண்டுபிடியுங்கள்!

★ மாதங்கள்:- மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஐப்பசி.

கிழமைகள்:- திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு.

### எண்ணிப் பாருங்கள்

1. சதுரங்கள்—3
2. செவ்வகம்—1
3. முக்கோணங்கள்—24

### உங்களால் இயலுமா?

1. எட்டுக் கழகங்கள்.
2. இருபது தடவைகள்.
3. பாலத்தின் நீளம் நூறு மீற்றர். (நூறு மீற்றர் நீளமுடைய ரயில் ஒன்று இந்தப் பாலத்தைக் கடப்பதாயின் மொத்தம் இருநூறு மீற்றர் என்ஜின் பயணம் செய்ய வேண்டியிருக்கும்.)
4. $(33 \times 3) + (3 \div 3)$
5. நூறு மீற்றர்.
6. 555+55+55+5
7. அந்த அணி நானூறு மீற்றர் தூரத்தை ஓடிமுடிக்க 40 செக்கனிலும் விடக் குறைந்தநேரமே எடுக்கும்.

ஒவ்வொரு ஓட்ட வீரனும் தனித்தனியாக ஓய்வுநிலையிலிருந்து புறப்பட்டு நூறு மீற்றரைக் கடக்க 10 செக்கன்கள் எடுக்கின்றார்கள். ஆனால் அஞ்சலோட்டத்தில் முதலாவது ஓட்ட வீரனைத் தவிர ஏனையோர் வேகமாக ஓடிக்கொண்டே அஞ்சல் கோலைப் பெற்றுக்கொள்வார்கள். எனவே ஓய்விலிருந்த உச்ச ஓட்ட வேகத்தை அடையும் வரையான தாமதம் அந்த மூவருக்கும் ஏற்படாது. எனவே அவர்கள் நானூறு மீற்றரை 40 செக்கனிலும் குறைந்த நேரத்திலேயே ஓடி முடிப்பர்.

### நிரப்புங்கள்!

இக் கேள்வியில் கூட்டுத்தொகை 175 என வரவேண்டும். அது கேள்வியில் 173 எனப் பிரசுரமாகிவிட்டது. எனவே திருத்திக் கொள்க.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 30 | 39 | 48 | 1 | 10 | 19 | 28 |
| 38 | 47 | 7 | 9 | 18 | 27 | 29 |
| 46 | 6 | 8 | 17 | 26 | 35 | 37 |
| 5 | 14 | 16 | 25 | 34 | 36 | 45 |
| 13 | 15 | 24 | 33 | 42 | 44 | 4 |
| 21 | 23 | 32 | 41 | 43 | 3 | 12 |
| 22 | 31 | 40 | 49 | 2 | 11 | 20 |

## உலக பயங்கர...

(VI ஆம் பக்கத் தொடர்)

களில் உள்ள தவறுகளே உலகெங்கும் உள்ள லட்சக்கணக்கான அமெரிக்கர்களின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கி உள்ளது.

ஈராக் விவகாரம் உட்பட சமகால உலக விவகாரங்களில் அமெரிக்காவின் நடவடிக்கைகள் பெரும் பகுதி உலக மக்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. இந்த மறுபக்க உண்மையை வெள்ளை மாளிகை தொடர்ந்தும் உணரத் தவறி வந்திருக்கிறது.

கிளின்ரன் நிர்வாகம் நடத்திய ஏவுகணைத்தாக்குதல்களுக்கு அமெரிக்கர்கள் முழு ஆதரவு தெரிவித்திருப்பதோடு கிளின்ரனின் செல்வாக்கு பல மடங்கு அதிகரித்திருப்பதாகவும் கருத்துக் கணிப்புகளை மேற்கோள் காட்டி மேற்குலக செய்திநிறுவனங்களும், சர்வதேச சஞ்சிகைகளும் தெரிவிக்கின்றன. அமெரிக்கர்களின் இந்த சம்மதம் இதுபோன்ற மேலும் பலநடவடிக்கைகளில் ஈடுபட கிளின்ரனுக்கு உற்சாக மூட்டலாம். ஆனால் பெரும்பாலான அமெரிக்கர்களின் விருப்பம் 'உலகக் கொள்கையாக' இருக்கமுடியாது.

பல்வேறு காரணங்களால் அமெரிக்கா உலகில் சக்தி மிக்க ஒரு நாடாக உருவெடுத்திருக்கிறது. வெள்ளைமாளிகையில் எடுக்கப்படும் எந்தத் தீர்மானமும் உலகின் ஒருகோடியில் உள்ள தனிப்பட்ட மனிதன் ஒருவனது நாளாந்த வாழ்க்கை வரை எதிரொலிக்கக்கூடும். உலக நாடுகளின் அரசியல் கொள்கைகளில் எல்லாம் அமெரிக்கக் கொள்கையின் பாதிப்பு அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகிறது.

அதேவேளை —

உள்நாட்டில் பொருளாதார நெருக்கடி, தீவிரவாதம் என்பவற்றுக்கு முகம் கொடுக்கும் கீழைத்தேச நாடுகள் அமெரிக்காவின் கொள்கைகளைத் 'தர்ம சங்கடத்துடன்' ஆதரிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

சூடான், ஆப்கானிஸ்தான் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் குறித்து உடனடியாகத் தனது கருத்தை தெரிவிப்பதில் இந்திய அரசு காட்டிய 'நழுவல்' போக்கு இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

இந்தியா தனது சொந்தப் பாதுகாப்புக்காக எனத்தெரிவித்து அண்மையில் அணு ஆயுத சோதனையை நடத்தியதற்காக அமெரிக்காவிடம் 'குட்டு' வாங்கும் நிலைக்கு வந்தது.

இந்தியா தனது பாதுகாப்புக்காகச் செய்யக் கூடியவைகளை அமெரிக்காவே வரையறை செய்கிறது. அதே வேளை அமெரிக்கா தனது பாதுகாப்புக்காகத் தன்னிச்சையாக நடத்திய தாக்குதலை இந்தியா ஆதரித்திருக்கின்றது.

★

## 'சேர்ச்சில்' ஜோக்குகள்!

பிரிட்டிஷ் பிரதமராக இருந்தவர் வின்ஸ்டன் சேர்ச்சில்.

ஒருமுறை சேர்ச்சிலும், இந்திய ஜனாதிபதி ராதாகிருஷ்ணனும் விருந்துண்ணச் சென்றிருந்தார்கள். ராதாகிருஷ்ணன் கையைச் சுத்தமாகக் கழுவிவிட்டு வந்து, சாப்பிட உட்கார்ந்தார். சேர்ச்சில் 'ஸ்பூன்', 'போர்க்' முதலிய கருவிகளை உபயோகித்துச் சாப்பிட ஆரம்பித்தார்.

ராதாகிருஷ்ணன் கையால் சாப்பிடுவதைப் பார்த்த சேர்ச்சில், ''என்ன இது, ஸ்பூன் யூஸ் பண்ணுங்க! அதுதான் சுத்தமானது'' என்றார்.

உடனே ராதாகிருஷ்ணன், ''இல்லை சேர்! கைதான் ரொம்ப சுகாதாரமானது! ஏனென்றால் இதை வேறு எவரும் உபயோகப்படுத்த முடியாது!'' என்றார். இதைக் கேட்டுச் சேர்ச்சில் ஆச்சரியத்தால் அதிர்ந்து போனார்.

★ ★ ★

ஒரு சமயம் வின்ஸ்டன் சேர்ச்சில் தம்முடைய அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகளையும், இன்னல்களையும் எடுத்துக் காட்டிச் சபையில் பேசிக்கொண்டிருந்தார்.

அவர் அவ்விதம் பேசிக் கொண்டிருந்தபோது, ஒருவன் அவரை மடக்கும் எண்ணத்துடன் ''அனுபவமானது மூடர்களுக்குத்தான் பாடம் கற்பிக்கும்!'' என்று குறுக்கிட்டுக் கூறினான்.

சேர்ச்சில் உடனே ''என்நண்பனே! அதை நானும் ஒப்புக்கொள்கின்றேன். அதனால் தான் என்னுடைய அனுபவத்திலிருந்து நீ பயன்பெறக்கூடும் என்று கருதுகின்றேன்'' என்றார்.

இதைக் கேட்டு அவன் வாயடைத்துத் தலை குனிந்தான்!

## புதைகுழி விவகாரத்தை...

(II ஆம் பக்கத் தொடர்)

றிக்குச் சேரும் பல புள்ளிகள் என்பதையும் அவர்கள் அறியாமல் இருக்க முடியாது.

எனவே, இதவிவகாரத்தில் தமிழ்க் கட்சிகளே அரசை விடவும் வேகம் காட்ட வேண்டும் என்று தமிழ் மக்கள், குறிப்பாகக் குடாநாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

ஆகையால், கையில்வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலையும் நிலை எதற்கு என்று மக்கள் கேட்க்கும் சூழ்நிலையைத் தோற்றுவிக்கக்கூடாது. ஆறிய கஞ்சி பழங் கஞ்சியே. அவ்வாறு பழையதாக்க அரசு முயல்வதாகவே தோன்றுகிறது. அதனைத் தடுக்கும் பொறுப்பு தமிழ்க் கட்சிகளிடமே!

★

## 31 - 12 - 1999 நள்ளிரவு...

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

வளர்ச்சியடைந்து வரும் இந்தியா போன்ற நாடுகளுக்கும் இது பெரும் சவாலாகவே உள்ளது. சில நாடுகள் இது விடயத்தில் இதுவரை அலட்டிக் கொண்டதாகத் தெரியவில்லை. இந்தச் சிக்கல் கழுத்தை நெரிக்கும் போது தான் அவை விழி பிதுங்க நேரிடும்.

ஒரு நாடு தனித்து நின்று இச்சவாலை எதிர்கொண்டு விட முடியாது. ஏனெனில் கணனி தொடர்பு அமைப்புகள் ஒரு வலைப்பின்னல் போன்றவை. தகவல்களைச் சேகரிக்கும் வழிவகைகள் பொதுவானவை; அவற்றுக்கான டிஸ்குகளும் பொதுவானவை.

உலகில் முதற் தடவையாக ஏற்படும் இந்தக் கணனிச் சிக்கலில் இருந்து மீள்வதற்கு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு வழங்கப்படவுள்ள நிதி உதவிக்காக அமெரிக்கா 12 மில்லியன் டொலர்களைத் தனது பங்களிப்பாக வழங்கும் என்று அதிபர் கிளின்ரன் தெரிவித்துள்ளார். பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் நிதிஉதவி வழங்க உள்ளன.

இந்தச் சிக்கலை எதிர்கொள்ள சர்வதேச ரீதியாக ஒன்றுபட்டு செயற்பட அமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று ஐ நா. செயலாளர் நாயகம் கோபி அனான் ஆலோசனை கூறியுள்ளார்.

இந்த நெருக்கடிக்குத் தீர்வு என்ன?

கணனிகளின் கட்டளைத் தொகுப்பில் ஈரிலக்கத்தில் குறிப்பிடப்படும் ஆண்டின் இலக்கத்தை நான்கு இலக்கத்தில் குறிப்பிடவேண்டும். இதற்காக உலகளாவிய ரீதியில் பயன்பாட்டில் உள்ள கணனிகளின் கட்டளைத் தொகுப்புக்களை (டிஸ்குகள்) மாற்றியமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதனைச் செய்வதற்கு ஆயிரக்கணக்கான கோடி டொலர்களைச் செலவிட வேண்டியிருக்கும் எனக்கணனி நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இதனால் உலகெங்கும் கணனி கட்டளை அமைப்புகளை (டிஸ்குகளை) வடிவமைத்த தொழில் நிறுவனங்களும், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும்.

தனியான 'கணிமம்' (Software) ஒன்றைத் தயாரித்து அதன்மூலம் கட்டளையிட்டு இந்த சிக்கலைத் தீர்க்கும் முயற்சிகளில் நிபுணர்கள் தீவிரமாக இறங்கியுள்ளனர். ஆனால் இது சாத்தியமா என்பதில் ஐயமே உள்ளது.

அதேவேளை கட்டளை அமைப்புகளைத் திருத்தி எழுதவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதால் டிஸ்குகளில் கட்டளைகளைத் தொகுக்கும் சிறிய நிறுவனங்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்கிடைத்திருக்கிறது.

இதேவேளை சில கணனி நிறுவனங்கள் 2 ஆயிரமாம் ஆண்டை எதிர்கொள்ளத் தக்கவகையில் கணனிகளை உருவாக்கி வருகின்றன.

'வை—2 கே' சிக்கலை இலகுவாகச் சமாளித்து விடக்கூடிய ஏதாவது ஒரு நுட்பத்தை இத்துறையில் தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரும் நிபுணர்களில் எவராவது கண்டுபிடித்திருக்கக் கூடும். ஆனால் அக்கண்டுபிடிப்பின் முக்கியத்துவம் கருதியும், தக்கதோர் தருணத்தில் அதனை அதிரடியாக வெளியிட்டு அதன்பால் உலக கவனத்தை ஈர்க்கவும், அதன்மூலம் பிரபல்யம் தேடும் நோக்குடனும் அந்தக் கண்டுபிடிப்பு மறைக்கப்பட்டு வரக்கூடும் என்கிறார் உள்ளூர் கணனி நிபுணர் ஒருவர்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கன், சூடான் மீதான அமெரிக்க தாக்குதல்

# உலக கவனத்தை திசைதிருப்பும் முயற்சியா?

## மற்றொரு சதாம்ஹுசேனாக உருவெடுக்கும் பின் லாடென்

வெள்ளைமாளிகையின் முன்னாள் பணியாளர் மொனீக்கா லூவின்ஸ்கியுடன் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் பாலியல் உறவு வைத்திருந்தது—

ஆப்கானிஸ்தான் மீதும் சூடான் மீதும் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது—ஆகியவை மூலம் சர்வதேச கவனம் தற்போது அமெரிக்கா பக்கம் திரும்பி உள்ளது.

ஜனாதிபதி கிளின்ரன் கடந்த 17 ஆம் திகதி வெள்ளைமாளிகையில் வைத்து விசேட வழக்குத் தொடுநர் கெனத் ஸ்ரார் முன்னிலையில் சாட்சியம் அளிக்கையில், மொனீக்கா லூவின்ஸ்கியுடன் தாம்முறைகேடான பாலியல் உறவு வைத்திருந்ததை ஒப்புக் கொண்டார்.

இந்த விவகாரம் மூலம்வெள்ளை மாளிகையை கிளின்ரன் கறைபடிய வைத்து விட்டதாகவும்—

அமெரிக்க மக்களை தலை குனிய வைத்து விட்டதாகவும்—கண்டனங்கள் எழுந்தன.

இந்த பரபரப்பு அடங்குவதற்கு முன்னே, 20 ஆம் திகதி— அதாவது மொனீக்கா லூவின்ஸ்கியுடனான உறவை கிளின்ரன் ஒப்புக்கொண்டு மூன்று நாள்களில்—ஆப்கானிஸ்தானிலும் சூடானிலும் அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.



பின் லாடென்

மொனீக்கா லூவின்ஸ்கி விவகாரத்தில் இருந்து உலகின் கவனத்தை திசை திருப்பவே ஆப்கானிஸ்தான் மீதும் சூடான் மீதும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தக் கிளின்ரன் உத்தரவிட்டதாக ஊகங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் ஆப்கானிஸ்தான் மீதும் சூடான் மீதும் நடத்திய தாக்குதலுடன் அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை முடிவுக்கு வந்து விடாது என கிளின்ரன் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா மேலும் தாக்குதலை நடத்தப்போவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் உலக தலைமைத்துவத்தை ஏற்றுள்ள அமெரிக்கா பயங்கரவாதம் அல்லது தீவிரவாதம் தொடர்பாகக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ள புதிய நிலைப்பாடு சர்வதேச மட்டத்தில் சர்ச்சையை ஏற்படுத்தி வருகிறது.

### குண்டுத் தாக்குதல்களும் பதில் அடிகளும்

கென்யாவின் தலைநகர் நைரோபியிலும் தன்சானியாவின் தலைநகர் டார்—எஸ்—சலாமிலும் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் இம் மாதம் 7 ஆம் திகதி ஒரே நாளில் கார் குண்டுத் தாக்குதல்கள் மூலம் தகர்க்கப்பட்டதே தற்போதைய நெருக்கடிக்குக் காரணமாகும்.

இந்த குண்டுத்தாக்குதல்களில் 12 அமெரிக்கர்கள் உட்பட 257 பேர் கொல்லப்பட்டனர். 5 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இத்தாக்குதல்களை அமெரிக்கா மீதான ஒரு யுத்த நடவடிக்கையாக (An Act Of War) கிளின்ரன் அறிவித்தார்.

கென்யாவிலும் தன்சானியாவிலும் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டு 2வாரங்களில் — அதாவது 20 ஆம் திகதி — ஆப்கானிஸ்தான் மீதும் சூடான் மீதும் பதில் அடி நடவடிக்கையாக அமெரிக்கா ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியது.

செங்கடலிலும் அரபுக் கடலிலும் நிலை கொண்டுள்ள அமெரிக்க யுத்தக் கப்பல்களில் இருந்து இந்த ஏவுகணைகள் ஏவப்பட்டன.

சுமார் 80 ரொமாஹோக் குருஸ் ஏவுகணைகளை (Tomahawk Cruise Missiles) அமெரிக்கா இந்த இரு நாடுகள் மீதும் ஏவியது.

ஆப்கானிஸ்தானின் கிழக்குப்பகுதியில் தலைநகர் காபூலில் இருந்து 144 கிலோ மீற்றர் தெற்கே உள்ள ஆறு இடங்கள் மீதும் — சூடானின் தலைநகர் கார்ட்டூமில் உள்ள இரசாயன வாயு உற்பத்தித் தொழிற்சாலை என்று நம்பப்படும் தொழிற்சாலை ஒன்றின் மீதும் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

### சூடானில் தொழிற்சாலை தரைமட்டம்

சூடானில் நடத்தப்பட்ட தாக்குதலில் அந்த தொழிற்சாலை தரைமட்டமாகி விட்டது.

ஆப்கானிஸ்தானில் நடத்தப்பட்ட தாக்குதலில் இஸ்லாமிய தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லாடெனின் (Osama Bin Laden) ஆயுதப் பயிற்சி முகாம்களுக்கு எவ்வளவு தூரம் சேதம் விளைவிக்கப்பட்டது என்பது இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

எனினும் இந்த தாக்குதல்களில் இருந்து பின்லாடென் தப்பி விட்டார் என்பது மட்டும் உறுதியாகி விட்டது.

கென்யாவிலும் சூடானிலும் அமெரிக்கத்தூதரகங்கள் தாக்கப்பட்டதற்கு பின்லாடெனே காரணம் என்றும்ஆப்கானிஸ்தானில் உள்ள பின்லாடெனின் ஆயுதப் பயிற்சி முகாம்களை "பயங்கரவாதிகளுக்கான பல்கலைக்கழகம்" (University For Terrorists) என்றும் அமெரிக்கா வர்ணிக்கிறது.

சூடானில் உள்ள இரசாயன வாயுத் தொழிற்சாலைக்கு பின்லாடென் பெருமளவு நிதி உதவி செய்து வந்தார் என்றும் அமெரிக்கா குற்றஞ் சாட்டி உள்ளது.




அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலை அடுத்து சூடானின் தலைநகர் கார்ட்டூமில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

இந்தக் குற்றச் சாட்டுக்களை பின்லாடென் நிராகரித்து விட்டார். எனினும் ... மாறு கடவுள் உத்தர விட்டிருப்பதாக அவர் கூறுகிறார்.

தற்பொழுது உலகம் முழுவதும் உள்ள தனது தூதரகங்களில் பாதுகாப்பை அதிகரிக்கவேண்டிய கட்டாய நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டுள்ளது.

### சூடான் மறுப்பு

தன்னால் தாக்கி அழிக்கப்பட்டுள்ள சூடான் தொழிற்சாலையில் நரம்புத்தொகுதிகளை செயல் இழக்க வைக்கும் வி எக்ஸ் ரசாயன வாயு (VX Nerve Gas) உற்பத்தி செய்யப்பட்டு வந்ததாக அமெரிக்கா குற்றஞ் சாட்டிவருகிறது.

இந்தக் குற்றச்சாட்டை சூடான் அரசு மறுத்துள்ளது.

மருந்துப் பொருள்களை மட்டுமே இந்த தொழிற்சாலை உற்பத்தி செய்ததாக சூடான்கூறுகிறது.

ஆனால் சூடானில் அழிக்கப்பட்ட தொழிற்சாலைப் பகுதியில் எடுக்கப்பட்ட மாதிரி மண்ணை ஆய்வு செய்ததன் மூலம் ஏவுகணையால் அழிக்கப்பட்டது சாதாரண மருந்துத் தொழிற்சாலை அல்ல என்று அமெரிக்க பகுப்பாய்வு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த தொழிற்சாலையில் மனிதனுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய EMPTA வாயு தயாரிக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் நரம்புத் தொகுதிகளை செயல் இழக்க வைக்கக் கூடியவி எக்ஸ்வாயு உற்பத்திக்கு இது முதல்படி என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி கிளின்ரன் ஆப்கானிஸ்தான் மீதும் சூடான் மீதும் நடத்தப்பட்ட தாக்குதல்களை நியாயப்படுத்தி உள்ளார்.

இந்ததாக்குதல்களின் பின்னர் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மேற்கொண்ட கணிப்பில் 80 சதவீதமான அமெரிக்கமக்கள் கிளின்ரனின் நடவடிக்கையை ஆதரித்துள்ளனர்.

மொனீக்கா லூவின்ஸ்கி விவகாரத்திலும் 60 சதவீதத்துக்கு மேற்பட்ட அமெரிக்க மக்கள் கிளின்ரனுக்கு ஆதரவு தெரிவித்தனர்.


இவை கிளின்ரனுக்குக் கிடைத்த பெரிய வெற்றி என்றே கருதப்படு ... உலகில் பயங்கரவாத நிலைகள் மீதான தாக்குதல்கள் தொடரும் என்று கிளின்ரன் அறிவித்திருப்பது உலகெங்கும் உள்ள அமெரிக்க நலன்களுக்கு இஸ்லாமிய தீவிரவாதிகளால் புதிய அச்சுறுத்தல்களை உருவாக்கி வருகிறது.

### பின்லாடென்

இஸ்லாமிய தீவிரவாதியான ஒசாமா பின் லாடென் சவூதிஅரேபியாவைச் சேர்ந்த ஒரு கோடீஸ்வரர். சவூதி அரேபிய அரசுடன் கொள்கை முரண்பாடு கொண்டு ஆப்கானிஸ்தானில் பின்லாடென் வசித்து வருகிறார்.

1979 டிசெம்பரில் ஆப்கானிஸ்தானில் சோவியத் படை எடுப்பு இடம் பெற்ற பின்னர் பின் லாடெனின் பெயர் முதல் தடவையாக பிரபல்யமடையத் தொடங்கியது.

சோவியத்படைகளுக்கு எதிரான இஸ்லாமியத் தீவிரவாதிகளின் ஆயுதப் போராட்டத்துக்கு பின்லாடென் பெரும் அளவு நிதி உதவி வழங்கினார். 1980 களில் அமெரிக்காவுக்கு மிக நெருக்கமானவராகவும் அவர் கருதப்பட்டார்.




சோவியத் படைகளுக்குஎதிரான ஆப்கன் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் போராட்டத்தில் லெபனானியர், எகிப்தியர் உட்பட வெளிநாட்டவர்களும்இணைந்துகொள்ள தூண்டுதலாக இருந்தவரும் பின்லாடெனே.

1980களில் இறுதியில் ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் படைகள் வெளியேறியபின்னர், பின் லாடெனின் பெருமளவு நிதி அமெரிக்க எதிர்ப்பு போராட்டத்துக்குப் பயன்பட ஆரம்பித்தது.

## உலக உலா

என். பி. சிலன்

தலீபானின் ஆதிக்கத்தின் கீழ் வந்து கொண்டிருக்கும் இஸ்லாமிய நாடான ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதல் பாகிஸ்தானை இக்கட்டான நிலையில் தள்ளிவிட்டுள்ளது. தலீபான் அரசை இதுவரை அங்கீகரித்த மூன்று நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று. அதேசமயம் அமெரிக்காவுடன் நெருங்கிய உறவை பாகிஸ்தான் வைத்துள்ளது. கனி முஸ்லிம்களின் ஆட்சி நடைபெறும் அரபு நாடுகளுக்கும் இதே பிரச்சினைதான்.

கென்யாவிலும் தன்ஸானியாவிலும் நடத்தப்பட்ட தாக்குதல்கள் பின் லாடெனாலேயே திட்டமிடப்பட்டவையாக அமெரிக்கா திடமாக நம்புகிறது.

ஏற்கனவே ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்ன் அமெரிக்காவுக்கு சவாலாக இருந்து வருகிறார்.

ஐ. நா. தடைகள் மூலம் ஈராக்கை பணிய வைக்க அமெரிக்கா முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் சவூதி கோடீஸ்வரர் அமெரிக்காவுக்கு மற்றொரு சதாம் ஹுசேய்னாக உருவெடுத்து வருகிறார்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org